
Vol.2, Issue 5 | Annual Subscription ` 420

அக்டோபர் 2019

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

Rotary



# ஓணம் சத்யா



TRF *அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங் மற்றும் கொரினா கொச்சியில் ஓணம் பண்டிகை விருந்தில்* DG *மாதவ் சந்திரனுடன்.*

புகைப்படம்: ரஷீதா பகத்

# உள்ளே


**12** RC **மைசூர் வெஸ்ட் நடத்தும் புதுமையான காதுகேளாத குழந்தைகள் நலத்திட்டம்**
இச்சங்கத்தின் பள்ளி காது கேளாதோருக்கு ஓர் வரப்பிரசாதம்.

**20 பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் உதவியுடன்** 125 **மகிழ்ச்சி பள்ளிகள்**
கோலார் பகுதியில் குழந்தைகள் இப்போது பள்ளி செல்ல மிகவும் விரும்புகின்றனர்.

**22** 30 **மில்லியன் டாலர் நிதி சேர்ப்பதே இலக்கு!**
TRF அறங்காவளர் தலைவர் கேரி ஹுவாங்கின் இந்திய விஜயம் பற்றிய கட்டுரை.

**26 இரண்டு டாலருக்கும் குறைவான ஊதியத்தில் வாழ்க்கை நடத்த முடியுமா?**
மைக்ரோ சாஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸின் வலைப்பதிவிலிருந்து.

**34** 2025**க்குள் இந்தியாவை முழு எழுத்தறிவு பெற்ற நாடாக்குவோம்:** RIPN **சேகர் மேத்தா**
மூத்த ரோட்டரி தலைவர்கள் கொல்கத்தாவில் இந்தியாவின் எழுத்தறிவு சவாலை எதிர்கொள்கின்றனர்.

**39 கங்கையை தூய்மையாக்க ஓர் ஓட்டம்**
தில்லியில் நடைபெற்ற நதிகளைப்பேணி பராமரிக்க விழிப்புணர்வு ஓட்டம்.

**54 மராத்வாடாவில்** RC **ஒமெர்காவின் தண்ணீர் சேகரிப்பு முயற்சி**
மராத்வாடா விவசாயிகள் இப்பகுதி ரொட்டேரியினர்களால் பயனடைகின்றனர்.

**68 அந்தமான் மழையில் தீவு-தாவல்**
மழைக் காலத்தில் அந்தமான் தீவுகளை ரசிக்கலாம் வாருங்கள்.



















**அட்டைப்படத்தில்:** RC மைசூர் வெஸ்ட் நடத்தும் காது கேளாதோருக்கான பள்ளிக்கூடம்.

**படங்கள்:** ரஷீதா பகத்.

## அன்னபூர்ணா - ரோட்டரியின் முன் மாதிரி

*பத்திரிகையில் வெளியிடப்படும் அனைத்து கட்டுரைகளையும் நான் படித்து வருகிறேன். செப்டம்பர் இதழில் வெளியான அரிய சிறப்பான திட்டங்கள் குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன்.* RC *சோலாப்பூர் அவர்களின் அற்புதமான சிற்றுண்டி-உணவு திட்டம் என்னை எந்தளவு கவர்ந்தது என்றால், 12 வருடங்களாக இத்திட்டத்தை நடத்தி வரும் உறுப்பினர்கள் மற்றும் அடுத்தடுத்த தலைவர்கள் ஆகியோருக்கு நன்றி கூற கூட எனக்கு வார்த்தைகள் வராதபடி மலைத்துவிட்டேன்! ரூ.1.44 கோடி மதிப்பில் 438,000 சிற்றுண்டிகள் வயது முதிர்ந்த குடிமக்களுக்கு தரும் இப்பிரம்மாண்ட திட்டம் நீடித்து செயல்பட அவர்களை நான் வாழ்த்துகிறேன். மிக நன்று அன்பர்களே, இதே திறனுடனும் பிடிப்புடனும் "சுயநலன் மீறிய சேவை" என்ற ரீதியில் தொடர்ந்து செயல்படுங்கள்.*

*ராஜ்குமார் கபூர்,* RC *ரூப்நகர்* — RID 3070




*எனது வணக்கம், மற்ற கிளப்புகளும் பின்பற்ற இது ஒரு சிறப்பான முன்மாதிரியாக அமையும்.*

*ரொட்டேரியன்கள் அவர்களின் குடும்பங்களை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தவேண்டும்; அவ்வகையில் ரோட்டரி மீது அவர்களின் பிடிப்பு அதிகரிக்கவேண்டும் என்று தலைவர் மெலோனி சரியாக அறிவுரை கூறுகிறார்.* RI *இயக்குனர் பரத் பாண்டியா, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நாம் உதவும்படியும் பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும்படியும் நம்மை வலியுறுத்துகிறார்.* RIPN *சேகர் மேத்தா அவர்களை அறிமுகப்படுத்தியதற்கு நன்றி. தொற்று அல்லாத நோய்களை கட்டுப்படுத்துவோம் என்ற கட்டுரை தரமான உணவுப் பழக்கமுடன் ஒரு ஆரோக்கிய வாழ்வு பெற அழைப்பு விடுத்துள்ளது. ஹோனலுலுவில்* RI *கூட்டம் பற்றிய கட்டுரை மற்றும் பிற கட்டுரைகளும் பல தகவல்களை தரும்படி உள்ளன.*

*ரவீந்தர் சாட்,* RC *ஃபக்வாரா தென்கிழக்கு* — RID 3070

*கடந்த 12 வருடங்களாக சோலாப்பூர் நகரில் தினசரி 100 முதியோர்களுக்கு உணவளிக்கும் அன்னபூர்ணா திட்டம் குறித்து படித்து பெருமகிழ்ச்சி அடைந்தேன். இதன் மூலம் 438,000 உணவுகளை வழங்கியுள்ளது.*

*ரோட்டரி நிகழ்வுகளுக்கு சிறுவர்களை அழைத்து வரச் செய்யவேண்டும் என்ற* RI *தலைவர் மார்க் மெலோனி யின் ஆலோசனை மூலம் கிளப் உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சியடையும்.* RI *இயக்குனர்கள் இருவரும் கல்வி மதிப்பை வலியுறுத்தியதற்கு மிக்க மகிழ்ச்சி.* RC *பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் மூலம் கோலார் மலையின் ஒரு சயனைட் குவிப்பை ஒரு பசுமை சிகரமாக மாற்றியது பிரமாதம். 'நன்றாக உறங்குங்கள்' என்ற கட்டுரை மிகவும் பயனுள்ளது.* 800 *மனநலம் குன்றிய சிறுவர்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் நடத்தப்பட்ட உதான்* (Udaan) *நிகழ்வு நன்றாக இருந்தது.*

*பிலிப் முலப்போன்* M T
RC *திருவனந்தபுரம் சபர்பன்* — RID 3211

*ரூ.1.44 செலவில் முதியோருக்கு 12 வருடங்களாக தினசரி உணவு படைத்து சேவையாற்றி வரும்* RC *சோலாப்பூருக்கு*

RC *சோலாப்பூர் செயல்படுத்தும் சிற்றுண்டி-உணவு திட்டம் குறித்த உங்கள் தலையங்கமும் கவர் ஸ்டோரியும் பாராட்டுக்குரியது. 12 வருடங்களாக முதியோருக்கு ஊட்ட உணவளிப்பதன் மூலம் சோலாப்பூர் ரோட்டரியன்கள் ஒரு மகத்தான சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ரோல்மாடலின் அன்னபூர்ணாவுக்கு எமது மனதார பாராட்டுக்களுக்கு உரியதாகிறது.*

PRIP K R *ரவீந்திரன், ஒரு வெற்றிகர தொழிலதிபராக அவருடைய அனுபவத்தை பகிர்ந்திருந்தார். அதற்கு நன்றி தெரிவிக்க வேண்டியது உரிய நேரத்தில் உதவிய அவருடைய கிளப் உறுப்பினருக்கு. ரோட்டரி கோட்பாடுகளை தீவிரமாக பின்பற்றும் ரவீந்திரன் உலக மக்களுடன் இணைந்து செயல்படுகிறார்.*

S *மோகன்,* RC *மதுரை மேற்கு* — RID 3000

*அன்னபூர்ணா கட்டுரையில், இந்த திட்டத்துக்கு எப்பொழுதும் நிதி இல்லாமல் இருந்தது கிடையாது என கிளப் தலைவர் முன்டனா கூறுகிறார். ஆச்சரியப்பட வைக்கிறது!*

N *ஜகதீசன்,* RC *எலூரு* — RID 3020

## ஆக்கபூர்வ ஆரோக்கியம், கல்வியறிவு முக்கியமானது

இந்தியாவில் பரவலாக ஆக்கபூர்வ (பாஸிட்டிவ்) ஆரோக்கிய திட்டம் செயல்படுத்துவது ஒரு நல்ல முயற்சி; செலவு மிக்க திட்ட மில்லை, இது வெற்றியடைய என் வாழ்த்துக்கள்.

J P வர்மா
RC பெங்களூர் தெற்கு — RID 3190

இந்தியாவில் ரோட்டரியின் 100வது ஆண்டு அனுசரிப்பின்போது உலக நிதி திட்டங்களுக்கு தமது அர்ப்பணிப்பு அளிப்பதன் மூலம் இந்தியாவின் மீது PDG நான்ஸி பார்பீக்கு இருக்கும் பிணைப்பை புலப்படுத்துகிறது.

PRID சுதர்ஸன் அகர்வால் பற்றி சிறப்பாக எழுதப்பட்ட இரங்கல் கட்டுரையில், அவர் ஏற்படுத்திய ரோட்டரி இரத்த வங்கி மற்றும் பெண்களுக்கான ஹிம் ஜோதி பள்ளி போன்றவைகளில் அவர் ஆற்றிய சேவைகள் விவரிக்கப்பட்டிருந்தது. நூற்றாண்டு கொண்டாட்டங்கள் RC மைசூர் பிளாட்டினம் ஜூபிளி கொண்டாடுவது, ஒரு அரசு பள்ளி நவீனமாகிறது, போன்றவை குறித்த பிற கட்டுரைகள் ஆகஸ்ட் இதழை உயர்த்தியுள்ளன. DG மோகன்

சந்தவர்க்கர் அவர்களின் கருத்துக்கள் சுவாரசியமாக இருந்தன.

Dr பாலு உப்ஹடே
RC லிங்க் டவுன் — RID 3142

ரோட்டரி திட்டங்களில் நமது குடும்பங்களை ஈடுபடுத்த நமது ஆன்ன்ஸ் குழு (Anns Committee) தொடங்கியுள்ளது. இது சுயமாகவே பல திட்டங்களை செயல்படுத்தி குடும்ப கூட்டங்களிலும் கலந்து கொள்கிறது.

C சுரேந்திரன்
RC மதுரை வடக்கு — RID 3000

## PRID சுதர்ஸன் அவர்களை நினைவு கூர்வது

ஒரு "தொழில்முறை பிச்சைக்காரன்" என தன்னை அழைத்துக் கொண்டு, காலஞ்சென்ற PRID சுதர்ஸன் அகர்வால் கொடையளிப்பதில் தாராளமானவர், ஒருவரை கவனிப்பதில் அசாத்திய மானவர். நாம் ஒரு அருமையான ஆன்மாவை இழந்து விட்டோம். மேலும் ஆசிரியர் ரஷீதா பகத் எழுதியிருந்த இரங்கள் கட்டுரை, அகர்வாலின் பல விவரங்களை வெளிப்படுத்தியது.

ரோட்டரியின் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும் என RI இயக்குனர்கள் இருவரும் சரியாக வலியுறுத்தியுள்ளனர். மடகாஸ்கருக்கு மருத்துவப் பயணத்தின் தலைமையேற்ற PRIP ராஜேந்திர சாபூ, 3,500 அறுவை சிகிச்சைகள் மேற்கொண்டு அற்புத சேவை புரிந்துள்ளார்; பாராட்டத் தகுந்த இத்திட்டம் குறித்து இந்திய ரோட்டரியன்கள் பெருமை மிகக் கொள்ளலாம். இப்பொழுது நான், நானாக இருப்பது ரோட்டரியினால் மட்டுமே என்று PRIP K R ரவீந்திரன் கூறியுள்ளது படிப்பதற்கு நன்றாக இருந்தது.

ஹேம்பர்க் கூட்டத்தில் DRR க்ரிஸ் வெல்ஸ் குறிப்பிட்டது போல், இளம் வயதினராக, வெற்றிகரமாக, இணையதளம் மூலம் திறன் படைத்தவர்களாக இருந்தும் லட்சக் கணக்கானோர் தனிமை காரணமாக மன அழுத்தம் கொண்டு திகழ்வது ஒரு முரண்பாடே.

S முனியாண்டி
RC திண்டுக்கல் கோட்டை — RID 3000

பல ஆண்டுகளாக மனித குலத்துக்கு நற்சேவை ஆற்றியும், நம்மில் பலர் பூஜ்யத்துக்கு தள்ளிவிடப்படுகின்றனர் என்பது ஒரு முரணான நிலையே; அத்தகையோரை அடையாளம் கண்டு வெளிஉலகத்துக்கு கொண்டு வருவது பத்திரிகையாளர்களை பொறுத்துள்ளது. ரோட்டரி நியூஸ் இதழில் காலஞ் சென்ற PRID சுதர்ஸன் அகர்வால் குறித்த தலையங்கமோ இரங்கலோ எழுதாமல் விட்டிருந்தால், அவருடைய பணி, ஹிம் ஜோதி பள்ளி உள்பட அவரின் சேவைகள் ஆகியவை எவருக்குமே தெரியாமல் புதைந்து போயிருக்கும்.

அருண் குமார் டேஷ்
RC பாரிபடா — RID3262

## ஒரு அரிய எலும்பு வங்கி

எலும்பு வங்கியும் மரபணு குறைபாடு களுடன் கூடிய குழந்தைகளைக் காப்பாற்றும் ரோட்டரி ஆகியவைகள் நம் கண்களை ஈரமாக்குகின்றன.

Dr NRUK கர்த்தா, RC திருவனந்த புரம் சபர்பன் — RID 3211

RC சென்னை சென்ட்ரல், RID 3232 துவக்கி வைத்த புதிய எலும்பு வங்கி பற்றி அறிந்து கொண்டது மகிழ்ச்சி அளிக்கிறது.

சின்மயா மஹாபத்ரா, RC
புபனேஸ்வர் ஹெரிட்டேஜ் — RID 3262

"RC மைசூர் பிளாட்டினம் ஜூபிளி கொண்டாடுகிறது" குறித்து படித்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். PRIP கல்யாண் பானர்ஜி நிகழ்ச்சியை துவக்கி வைத்து கிளப் குறித்து நெடியதாக பேசிய பேச்சில், கூடுதலான ஆரோக்கியம் மற்றும் கல்வி திட்டங்கள் தீட்டுவதன் தேவையை குறிப்பிட்டார். இக்கட்டுரையில் இடம் பெற்றிருந்த புகைப்படங்கள் அருமையாக இருந்தன.

H கிருஷ்ணமூர்த்தி,
RC மைசூர் பிருந்தாவன்
கிளப் — RID 3181

ரோட்டரி நியூஸ், கடந்த ஆண்டுகளில் கட்டுரைகள், செய்திகள், ரோட்டரி தலைவர்களிலிருந்து வரும் செய்திகள் ஆகியவைகளை பல பரிமாணங்களுடன் தாங்கி வருகின்றது. பத்திரிகையில் வெளியிடப்படும் செய்தி அறிக்கைகளின் தரத்தை எங்களால் நுட்பமாக கவனிக்க முடிகிறது.

அண்மையில் தாங்கள் வெளியிடத் தொடங்கிய தமிழ் பதிப்பிலும் அதே தரத்தையும் துல்லியத்தையும் ஆசிரியர் குழு பராமரித்து வருகிறது. இதன் மொத்த பெருமையும் தங்கள் தலைமையில் செயல்படும் ஆசிரியர் குழுவுக்கே சேரும்.

ஆகஸ்ட் இதழில் சுவாரசியமான உள்ளடக்கம் இருக்கிறது. எல்லாவற்றிலும் மிகவும் கவரும் வகையில் அமைவது PRID சுதர்ஸன் அவர்கள் பற்றிய PRIP ராஜேந்திர சாபூவின் அருமையான கட்டுரைதான். இது மிகவும் அருமையாகவும் சி றப்பாகவும் எழுதப்பட்டுள்ளது. உத்தரகாண்ட் மாநிலத்தில் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களின் பெண்களுக்கு கல்வியளிக்கும் அகர்வாலின் தொண்டு, அவரின் பல சாதனைகளில் சிறப்பு மிக்கதாக கருதலாம். சாபூ மிகச் சரியாக சொல்லியிருந்தார், பழம்பெருமை தொடர்கிறது என.

R ஸ்ரீநிவாசன்
RC மதுரை மிட்டவுன் — RID 3000

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:*
*rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org.*



# அக்டோபர் 24 - உலக போலியோ தினம்

*பாசமிகு ரோட்டரி குடும்பத்தினர்களே...*

போலியோவிற்கு எதிரான ரோட்டரியின் நீண்டகாலமாக நிலைத்திருக்கும் போரில், பல வருடங்களாக நாம் பங்காற்றி இருக்கிறோம் என்பது பற்றி நாம் பெருமைப்படலாம்.

1988 ஆம் ஆண்டில், போலியோ பரவலாக இருந்த சுமார் 125 நாடுகளில் 3,50,000-க்கும் அதிகமான புதிய நோயாளிகள் இருந்தனர். அப்போதிருந்து, ரோட்டரி மற்றும் நமது சர்வதேச போலியோ ஒழிப்பு முயற்சி அமைப்பின் கூட்டாளிகள் ஆகியோர் இணைந்து போலியோ ஏற்படும் பாதிப்பை 99.9 சதவீதத்திற்கு அதிகமாகக் குறைத்துள்ளது, இந்த வைரஸிற்கு எதிராக சுமார் 2.5 பில்லியன் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது, மேலும் வாதம் ஏற்படுவதிலிருந்து 18 மில்லியன் நோயாளிகளைக் காப்பாற்றப்பட்டுள்ளனர். கடந்த வருடங்களில், போலியோ இல்லாத நாடுகளை உருவாக்க ஒவ்வொரு நாடுகளுக்கும் ரோட்டரி உதவி செய்திருக்கிறது. போலியோ வைரஸின் மூன்று வகைகளில், வைரஸ் 2ம் வகையை ஒழித்து விட்டோம், மேலும் 3ம் வகை விரைவில் ஒழித்து விட்டதாக அறிவிக்கப்படும். ஏறக்குறைய மூன்று வருடங்களில் வைல்டு போலியோ வைரஸ் நோயாளி யாரும் இல்லை என்று நைஜீரியா தெரிவித்துள்ளது. இது தொடர்ந்தால், உலகின் ஒரு பகுதியான ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் மட்டும் வைல்டு போலியோ வைரஸின் ஒருவகையை ஒழிக்க முயற்சி எடுப்போம்.

இந்த பிராந்தியத்தில் இது மிகப்பெரும் சவால். ஆனால் நாம் நம்பிக்கையுடன் இருப்பதுதான் மிக முக்கியம். தன்னம்பிக்கையை இழப்பதற்கோ அல்லது இந்தப்பணி முடியாத ஒன்று என்று யோசிப்பதற்கோ இது நேரமில்லை. நாம் போலியோவை ஒரேயடியாக ஒழிப்போம், ஆனால் அதற்கு நாம் உறுதியுடனும் எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டும். உலகம் முழுவதும் உள்ள ரொட்டேரியன்கள் ஒன்றிணைந்து, போலியோ ஒழிப்பிற்கு எதிரான நமது போராட்டத்தில் வளர்ச்சியை அங்கீகரிக்கவும் நிரந்தரமாகப் போலியோவை ஒழிக்க நாம் எடுக்கவேண்டிய செயல்களையும் திட்டமிடுவதற்குமான நேரம் தான் உலக போலியோ தினம்.

இந்த வருடம் உலக போலியோ தினத்தில் நிறைய ரோட்டரி சங்கங்கள் நடத்தும் நிகழ்ச்சிகளை நாம் பார்க்க விரும்புகிறோம். சில யோசனைகள் வேண்டுமா? ரோட்டரியின் இணையவழி சர்வதேச அறிவிப்பினைப் பார்க்க நண்பர்களுக்கும் சங்க உறுப்பினர்களுக்கும் ஒரு பார்வையிடும் நிகழ்ச்சியை எப்படி ஏற்பாடு செய்யலாம்? உலக போலியோ தினத்திற்கு ஒரு சங்க கூட்டத்தை நடத்தலாம் அல்லது ஒரு நிதிதிரட்டும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யலாம். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் திரட்டும் ஒவ்வொரு டாலருக்கும் பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் பவுண்டேஷன் இரண்டு மடங்கு நிதியைத் தருகிறது.

ஒரு நிகழ்ச்சியை நீங்கள் உருவாக்கிய பிறகு, *endpolio.org/register-your-event* வலைதளத்தில் பதிவு செய்யுங்கள். *endpolio.org/world-polio-day* வலைதளத்தில் இருக்கும் உலக போலியோ தின டூல்கிட்டைப் பயன்படுத்தி அதை விளம்பரப்படுத்துங்கள்.

அக்டோபர் 25 அன்று ரோட்டரியின் உலக போலியோ தின இணையவழி நிகழ்ச்சியை உங்கள் நாள்காட்டியில் குறித்துக்கொள்ளுங்கள். உலகம் முழுவதும் பல்வேறு நேர மண்டலங்களில் ஃபேஸ்புக்கில் நேரலையாக நமது நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும். சமூக ஊடகத்தில் இந்த நிகழ்ச்சியைப் பின்தொடர்ந்து உங்கள் நட்பு வட்டாரத்தில் இதை பகிர மறந்துவிடாதீர்.

போலியோ ஒழிப்புக்கான முயற்சியில் உலகத்தை தொடர்ந்து ரோட்டரி இணைக்க வேண்டும். இது நம்மைப் பொறுத்தது. இந்தப் பணியை நாம் முடிப்போம்.

**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# கல்விக்கான ஆர்வம்...

குஜராத்தில் 2002ல் நடைபெற்ற கோத்ரா சோகம், அதைத் தொடர்ந்த கலவரங்களுக்குப்பிறகு, களச்சூழலைப்பற்றி எழுதுகிற ஒரு பத்திரிகையாளராக நான் அகமதாபாத் சென்றேன். அதன்பிறகு, பதினேழு ஆண்டுகள் சென்றுவிட்டன, ஆனால், இந்த நிகழ்ச்சிகளுக்குப்பிறகு குஜராத்தில் முஸ்லீம்களுடைய எதிர்காலம் என்ன என்கிற என்னுடைய கேள்விக்கு எனக்குக் கிடைத்த பதில், ஏதோ நேற்றுதான் எனக்குச் சொல்லப்பட்டதுபோல் இப்போதும் தெளிவாக நினைவிருக்கிறது. இந்தக் கேள்வி, நகரத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் மாநகராட்சி உறுப்பினரிடம் கேட்கப்பட்டது. அவர் சுமார் 30 விநாடிகளுக்கு அமைதியாக இருந்தார். பிறகு சொன்னார்: இங்குள்ள முஸ்லீம்கள் சிந்திப்பவர்களாக இருந்தால், அவர்களுக்கு எந்த எதிர்காலமும் இல்லை. ஒருவேளை, அவர்கள் சிந்திக்காதவர்களாக இருந்தால், அவர்களுக்கு எப்போதும் எந்த எதிர்காலமும் இருந்திருக்காது.

அந்தச் சொற்றொடருடைய முழுத் தாக்கம், என்னைப் பல ஆண்டுகளுக்குத் தொந்தரவு செய்தது; உலகில் எங்கு வேண்டுமானாலும் இருக்கிற படிக்காத, சிந்திக்காத நபர் யாருக்கும் அந்த அறிவைப் பொருத் திப்பார்க்கலாம். சிந்தித்தல், ஞானம், அறிவு போன்றவை தீவிர வாசிப்பிலிருந்து வருகின்றன, அதற்குத் தரமான கல்வி தேவை. எல்லா வசதிகளோடும் இருக்கிற நாம், நம்முடைய குழந்தைகளுக்கு மிகச்சிறந்த கல்வியைப் பெற்றுத்தர விரும்புகிறோம், ஆனால், லட்சக்கணக்கான இந்தியர்களுக்குக் கல்வி என்பதே எட்டாக்கனியாக உள்ளது, எழுதப்படிக்கத் தெரிவதே பெரிய விஷயமாக இருக்கிறது.

ஒரு நாளைக்கு இரண்டு டாலர்களையும்விடக் குறைவான தொகையில் வாழ்வது எப்படியிருக்கும் என்பது பற்றிய பில் கேட்ஸுடைய பதிவை இந்த இதழில் நாங்கள் வெளியிட்டுள்ளோம்; அதை நான் முதன்முறையாகப் படித்தபோது, இந்த உண்மையும், அகமதாபாத் மாநகராட்சி உறுப்பினருடைய சொற்களும் எனக்குள் உறுதிப்பட்டன. இப்படிப்பட்ட ஆறு பேருடன் கேட்ஸ் பேசியுள்ளார், அவர்களில் மூவர் தங்களுடைய குழந்தைகளுடைய கல்விக்காகப் பணம் சேமிக்க வேண்டும் என்ற தங்களுடைய வலுவான ஆசையைத் தெரிவித்துள்ளார்கள்; அவர்களில் இருவர் இந்தியர்கள் என்பது எனக்கு வியப்பளிக்கவில்லை!

அவர்களில் ஒருவர், லால் முகம்மது, கொல்கத்தாவில் 15 ஆண்டுகளாக ரிக்ஷா இழுப்பவராகப் பணியாற்றி வருகிறார். தன்னுடைய சிறு வருவாயால் அவர் தன்னுடைய மனைவி, மூன்று குழந்தைகளை ஆதரிக்கிறார். ஆனால், அவரும் அவருடைய மனைவியும் தங்களுடைய குழந்தைகளுக்காகப் பெரிய கனவுகளைக் காண்கிறார்கள். அவர்கள் வளர்ந்து நன்றாகப் படிப்பார்கள், அவரைவிட அதிக வருவாயைத் தரும் ஓர் உயர்ந்த வேலைக்குச் செல்வார்கள் என்று நம்புகிறார்கள் என்கிறார் கேட்ஸ்.

தேவ்லி பாய், ராஜஸ்தானைச் சேர்ந்த கூலித் தொழிலாளர். தன்னுடைய கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற்ற தேவ்லி பாய், தன்னுடைய மகள் (10), மகனை (6) கவனித்துக்கொள்கிறார். அவருடைய கனவு, தன்னுடைய குழந்தைகளுடைய கல்வியில் முதலீடு செய்வது! எத்தியோப்பியாவிலுள்ள ஒரு சிறு நில உழவராகிய அவோக் மோஸுடைய விருப்பமும் இதேதான்.

இந்தியாவின் பெரும் எண்ணிக்கையிலான ஏழை மக்களுக்குக் கல்வி என்பது பெரிய ஆசையாக உள்ளது; பல சிறிய இந்திய நகரங்கள், கிராமங்களில் மக்கள் தாங்கள் சாப்பிடுகிற உணவின் அளவைக் குறைத்துக்கொண்டு, அந்தப் பணத்தில் தங்களுடைய குழந்தைகளைத் தனியார் பள்ளிகளுக்கு அனுப்புவதை நான் பார்த்திருக்கிறேன். இச்சூழ்நிலையில், இந்தியாவின் எழுத்தறிவு 74 சதவிகிதம் என்கிற ஏமாற்றமளிக்கும் நிலையில் உள்ளது நம்முடைய ஒட்டு மொத்த மனசாட்சிக்கு பெரிய சுமையாக இருக்கவேண்டும். அதனால்தான், எந்தவொரு ரோட்டரிக் கருத்தரங்கிலும் மூத்த தலைவர் இந்தியாவை முழு எழுத்தறிவு கொண்ட நாடாக ஆக்கும் தன்னுடைய கனவை வெளிப்படுத்தும் போது, நான் சிலிர்த்துப்போகிறேன். சில ஆண்டு முன்பு வரை இக்கனவுக்கான இலக்கு 2020ஆக இருந்தது, இப்போது அது 2025ஆகிவிட்டது. இந்தச் செய்தித்தலைப்பைக் கற்பனை செய்துபாருங்கள்: இந்தியாவுக்கு முழு எழுத்தறிவைக் கொண்டுவர உதவுகிறது ரோட்டரி''. இந்தியாவைப் போலியோ இல்லாத நாடாக ஆக்குவதைவிடப் பெரிய சாதனையல்லவா அது!

கல்வியறிவு பெற்ற பெண், முன்தீர்மானங்களை, தடைகளை மீறலாம், துணிவோடு எழுந்து நின்று என் வாழ்க்கை, என் விதிமுறைகள், என்னுடைய தேர்வு! என்று சொல்லலாம்.

ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |


Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

# RI இயக்குனர்



## இது நமக்கு சவாலான நேரம்!

உலகம் முழுவதிலும் உள்ள அரசுகள், ஐக்கிய நாடுகள் சபை, உலக சுகாதார நிறுவனம், யூனிசெப் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் நல்லெண்ணத்தையும் நன்மதிப்பையும் பெற்றுள்ளது ரோட்டரி அமைப்பு.

வறுமை, சுகாதாரம், எழுத்தறிவு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு நாம் தீர்வுகண்டால்தான் உலகில் அமைதி ஏற்பட வழிவகுக்கும். குடிநீர் பிரச்னை, சுகாதாரம் உள்ளிட்டவை தீராத பிரச்னைகளாகவே இருந்து வருகின்றன.

மாவட்ட ரோட்டரி சங்கங்களும் மண்டல அளவில் திட்டங்களை சரிவர நிறைவேற்றி வருகின்றன. பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியில் நாம் இன்னும் கவனம் செலுத்தினால் மக்கள் தற்சார்பு நிலையை அடைய வழிவகுக்கும்.

ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறவும் அவர்கள் வாழ்வில் முன்னேற்றங்கள் ஏற்படவும் ரோட்டரி உதவி செய்து வருகிறது.

ஒரே நாளில் உலகில் மாற்றங்களை நம்மால் ஏற்படுத்த முடியாது. ஆனால், நமது சேவைகள் மூலம் மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை நம்மால் உருவாக்கித்தரமுடியும்.

போலியோ: 20-ஆம் நூற்றாண்டின் பெரும்பாலான காலங்களில் போலியோ நோய் நம்மை வெகுவாக பயமுறுத்தி வந்தது. இதனால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள்தான்.

அக்டோபர் 24-ஆம் தேதி உலக போலியோ தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. நமது கவனம் எல்லாம் போலியோ ஒழிப்பில்தான் இருக்க வேண்டும். போலியோவை முற்றிலுமாக ஒழிப்போம் என்று பிரசாரம் செய்வதாலோ, போலியோ ஒழிப்புக்கு நிதிசேர்ப்பதுடனோ நமது பணி முடிந்துவிடாது.

போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளில் நாம் இறுதிக்கட்டத்தில் இருக்கிறோம். நாம் மேலும் கடுமையாக உழைத்து போலியோ இல்லாத உலகை உருவாக்குவதில் வெற்றிபெற வேண்டும்.

அக்டோபர் மாதத்தை பொருளாதாரம், சமூக வளர்ச்சி மாதமாக நாம் கொண்டாடுவோம். அதற்கான செயலில் இறங்குவோம். உலகிற்கு நன்மையானவற்றை செய்து ரோட்டரிக்கு புகழ் சேர்ப்போம். நாமும் மகிழ்ச்சி அடைவோம்.

**Dr பரத் பாண்ட்யா**
RI இயக்குனர், 2019–21

# களின் செய்திகள்

## நம் சமூகங்களுக்கு உதவுவேம்



*அன்புள்ள ரோட்டரித் தலைவர்களுக்கு,*

கிட்டத்தட்ட 1.4 பில்லியன் பணியாளர்கள் ஒரு நாளைக்கு $1.25ஐவிடக் குறைந்த தொகையில் வாழ்கிறார்கள். நலிந்த சமூகங்களில் பயிற்சி, நல்ல சம்பளம் தரும் பணிகள், நிதி மேலாண்மை அமைப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றின்வழியாகப் பொருளாதாரத்தை வளர்த்தல், சமூக முன்னேற்றம் மற்றும் ஏழைமையைக் குறைத்தலுக்காகப் பணியாற்றவேண்டும் என்று நான் ஒவ்வொரு ரொட்டேரியனையும் கேட்டுக்கொள்கிறேன். மக்களுக்குக் கருவிகளை வழங்குவதில் தொடங்கிப் பணிசார்ந்த பயிற்சிகள்வரை பலவிதமான திட்டங்களை நாம் நிறைவேற்றலாம். வறுமையுள்ள சமூகங்களில் உள்ளூர்த் தொழில் முனைவோர்களை, சமூகத் தலைவர்களை, குறிப்பாகப் பெண்களை வலுப்படுத்துவதற்காக நாம் பணியாற்றவேண்டும்.

**இளைஞர்கள்:** உலக அளவில், சுமார் 74 மில்லியன் இளைஞர்கள் பணியில்லாமல் உள்ளார்கள். இளைஞர்கள்தான் நம்முடைய ஒரே நீடித்திருக்கும் சொத்து. நீடித்திருக் கும் பொருளாதார வளர்ச்சி யை வலுப்படுத்த, நாம் அவர்களுக்குத் திறன், தலைமை மற்றும் பணி வாய்ப்புகளை உருவாக்கவேண்டும், அவர்களை ஏழைமையிலிருந்து வெளியேற்றவேண்டும்.

ஒவ்வொரு சங்கமும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்துக் கொள்ள வேண்டும், அங்கு அடிப்படைக் கல்வி, நீர், தூய்மை, நலன் மற்றும் பிற வசதிகளை மேம்படுத்தவேண்டும் என்று நான் கோருகிறேன்.

பெண்கள், சிறுமிகளுக்கு ஆற்றல் வழங்குவது சமூக மாற்றத்துக்கு முக்கியமானதாகும். பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான பெண்களுக்கு ஆற்றலை வழங்கிவரும் 28 பணிசார்ந்த பயிற்சி மையங்களை ("சஹேலி" மையங்கள்) இயக்கிவரும் RID 3250ஐ நான் பாராட்டுகிறேன்.

UKவைச் சேர்ந்த லார்ட் லூம்பா அறக்கட்டளையானது, ரோட்டரியுடன் இணைந்து, இந்தியாமுழுவதுமுள்ள விதவைகள், விதவைகளுடைய குழந்தைகளுக்குத் திறன் மற்றும் பணிசார்ந்த பயிற்சிகளை வழங்கவுள்ளது. இந்த மையங்கள் தற்போது ஐந்து மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன; விரைவில் இன்னும் ஐந்து மாவட்டங்களில் இந்த மையங்கள் தொடங்கப்படும்.

போலியோவை இவ்வுலகிலிருந்து அகற்றவேண்டும் என்று நாம் உறுதிகொண்டுள்ளோம்; இந்தப் போரில் நாம் வெற்றிபெறுவதற்காக ஒவ்வொரு ரோட்டரியனும் தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன்.

அக்டோபர் 24, உலகப் போலியோ நாளாகும். போலியோவை முடித்து வைக்க உதவுவதற்கு, உங்களுடைய குரல் எங்களுக்குத் தேவை. இதில் கலந்துகொள்ளுங்கள், நிதி திரட்டல்கள், நிகழ்வுகள், பேரணிகள், விழிப்புணர்வுத் திட்டங்களின்வழியாக இச்செய்தியைப் பரப்புங்கள், இதன்மூலம், பெரியம்மைக்கு அடுத்தபடியாக இன்னொரு மனித நோயை இவ்வுலகிலிருந்து அகற்றலாம்.

போலியோவை முடித்து வைப்போம், வரலாற்றை உருவாக்குவோம்.



**கமல் சங்வி**
RI இயக்குனர், 2019–21


## Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website :www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

## District Wise TRF Contributions as on August 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions |
|---|---|---|---|---|---|
| | | | India | | |
| 2981 | 7,054 | 101 | 0 | 29 | 7,184 |
| 2982 | 9,261 | 3,440 | 161,362 | 0 | 174,064 |
| 3000 | 13,921 | 0 | 3,703 | 0 | 17,624 |
| 3011 | 5,922 | 104 | 20,275 | 0 | 26,302 |
| 3012 | 155,639 | 600 | 32,000 | 0 | 188,239 |
| 3020 | 5,904 | 4,906 | 0 | 12,029 | 22,838 |
| 3030 | 1,326 | 0 | 1,423 | 0 | 2,749 |
| 3040 | 4,488 | 0 | 5,471 | 0 | 9,959 |
| 3053 | 21,133 | 32 | 331 | 0 | 21,496 |
| 3054 | 1,420 | 0 | 26,087 | 0 | 27,507 |
| 3060 | 5,066 | 29 | 5,229 | 1,014 | 11,338 |
| 3070 | 9,127 | 25 | 4,200 | 0 | 13,352 |
| 3080 | 25,419 | 3,317 | 12,875 | 1,013 | 42,624 |
| 3090 | 29 | 0 | 0 | 0 | 29 |
| 3100 | 15,510 | 0 | 0 | 0 | 15,510 |
| 3110 | 2,379 | 1,410 | 0 | 0 | 3,789 |
| 3120 | 19,106 | 0 | 0 | 0 | 19,106 |
| 3131 | 49,556 | 203 | 60,015 | 33,000 | 142,774 |
| 3132 | 1,558 | 0 | 5,355 | 15,000 | 21,913 |
| 3141 | 134,361 | 3,608 | 156,004 | 41,392 | 335,364 |
| 3142 | 36,467 | 168 | 0 | 0 | 36,635 |
| 3150 | 20,716 | 4,720 | 11,667 | 92,683 | 129,787 |
| 3160 | 808 | 29 | 0 | 0 | 837 |
| 3170 | 15,737 | 286 | (4,006) | 0 | 12,016 |
| 3181 | 53,170 | 0 | 0 | 0 | 53,170 |
| 3182 | 3,439 | 0 | 1,777 | 0 | 5,216 |
| 3190 | 39,424 | 2,174 | 1,596 | 0 | 43,194 |
| 3201 | 19,197 | 0 | 14,798 | 0 | 33,995 |
| 3202 | 16,648 | 2,034 | 1,735 | 1,000 | 21,416 |
| 3211 | 466 | 0 | 45,997 | 290 | 46,753 |
| 3212 | 10,836 | 1,636 | 1,050 | 0 | 13,523 |
| 3231 | 684 | 56 | 1,170 | 0 | 1,910 |
| 3232 | 1,565 | 6,859 | 39,782 | 7,500 | 55,706 |
| 3240 | 11,403 | 0 | 32,511 | 0 | 43,914 |
| 3250 | 9,334 | 0 | (85) | 0 | 9,249 |
| 3261 | 2,305 | 0 | 1,122 | 0 | 3,427 |
| 3262 | 5,044 | 1,014 | 507 | 0 | 6,565 |
| 3291 | 21,466 | 0 | 7,639 | 0 | 29,105 |
| **India Total** | **756,887** | **36,752** | **651,589** | **204,951** | **1,650,180** |
| 3220 **Sri Lanka** | 9,395 | 0 | 1,150 | 0 | 10,545 |
| 3271 **Pakistan** | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3272 **Pakistan** | 1,392 | 225 | 300 | 0 | 1,917 |
| 3281 **Bangladesh** | 13,226 | 0 | 11,500 | 1,000 | 25,726 |
| 3282 **Bangladesh** | 9,708 | 100 | 0 | 0 | 9,808 |
| 3292 **Nepal** | 93,734 | 8,406 | 135,375 | 0 | 237,516 |
| **South Asia Total** | **884,342** | **45,483** | **799,914** | **205,951** | **1,935,691** |
| **World Total** | **16,097,632** | **3,770,307** | **2,861,022** | **3,712,487** | **26,441,448** |

Source: RI South Asia Office



WHERE WILL ROTARY GLOBAL REWARDS TAKE YOU?



THE MEMBER BENEFIT PROGRAMME THAT OPENS UP A WORLD OF OPPORTUNITIES.

Rotary

SEE MORE AT ROTARY.ORG/GLOBALREWARDS

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

# GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.




Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in

# RC மைசூர் வெஸ்ட் நடத்தும் புதுமையான காதுகேளாத குழந்தைகள் நலத்திட்டம்

ரஷீதா பகத்

*பார்வையின்மை பொருள்களில் இருந்து மக்களைப் பிரிக்கிறது;*
*காது கேளாமை மக்களிடமிருந்து மக்களைப் பிரிக்கிறது.*
— ஹெலன் கெல்லர்

30 வருடங்களாக இந்த நிறுவனத்தில் நீங்கள் இருக்கிறீர்கள், இதுவரை காதுகேளாத குழந்தைகளில் எத்தனை பேர் வழக்கமான பள்ளிகளில் இணைந்திருக்கிறார்கள் என்று பரிமளா மூர்த்தியை நான் கேட்டேன், இவர் மைசூரில் உள்ள ரோட்டரி வெஸ்ட் தாய் மற்றும் காதுகேளாத குழந்தைக்கான நிறுவனத்தின் தலைவர்.

“அதுவந்து, ஆயிரக்கணக்கில் இருப்பார்கள்,” என்பது தான் அவரின் நம்பிக்கையும் உற்சாகமும் கொண்ட பதில்.

RID 3181 ஆளுநர் ஜோசஃப் மேத்யூ மற்றும் RC மைசூர் வெஸ்ட் சங்கத் தலைவர் ரெஜினால்ட் வெஸ்லே ஆகியோரும் உடனிருந்தனர், இந்த சங்கம் பல ஆண்டுகளாக இந்தத் திட்டப்பணியை பேணி வளர்த்துக் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனத்தின் பெரிய வளாகத்தில் நுழைந்தேன், ஒட்டுமொத்த ஆசியாவிலேயே இந்த பிரச்சனைக்கு அந்த நிறுவனம் மட்டுமே இயங்குகிறது என இரண்டு ரொட்டேரியன்களும் பெருமையுடன் சுட்டிக்காட்டினர். காதுகேட்பதில் குறைபாடு கொண்ட குழந்தைகளின் ஆரம்பநிலை சிகிச்சை மற்றும் விஷேச பயிற்சிக்காக இந்த வசதி இருக்கிறது, அதனால் அவர்கள் வழக்கமான பள்ளிகளில் சேர முடியும். குழந்தைகள் உருவாக்கக்கூடிய மகிழ்ச்சி மற்றும் வண்ணமயம் போன்றவற்றுடன் ஆற்றலும் உற்சாகத் துடிப்பும் நிறைந்து வகுப்பறைக் காணப்பட்டது.

இது கன்னடம், இந்தி, தெலுங்கு, மலையாளம் மற்றும் ஆங்கிலம் போன்ற மொழிகளில் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சிகிச்சைகளை வழங்குகிறது, கன்னட பிரிவிற்குள் நாங்கள் சென்றோம், அங்கே அந்த இடமே பளிச்சென நிறங்களும் இடைவிடாத பேச்சுக்களும், குழந்தைகளின் சிரிப்பொலியும் நிறைந்து காணப்பட்டது. காது கேளாத குழந்தைகளுக்கான இந்த தனித்துவமான முன்னோடி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் ஆலோசகர்களும் கேட்புத்திறன் குறைபாடு உள்ள குழந்தைகளின் பெற்றோர்களே. “ஆசிரியர்களை நாங்கள் பணியமர்த்துவதில்லை; இங்கே தாய்மார்கள் தான் ஆசிரியர்கள்; அவர்கள் நாங்கள் கொடுக்கும் இருப்பிடத்தில் குழந்தைகளுடன் தங்கிக்கொள்கிறார்கள், மேலும் அவர்களுக்குத் தொடர்ந்து எப்படி பேசுவது என்று பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறோம்,” என்று விளக்குகிறார் வெஸ்லே.






தாய்மார்கள் குழந்தைகளுக்கு
பாடம் கற்பிக்கிறார்கள்.



## சிரமமான ஆரம்பக்கட்ட சிகிச்சை

ஒரு குழந்தைக்கு கேட்புத் திறன் குறைபாடு இருந்தால், நிறையப்பேர் செய்யும் பொதுவான தவறு, அக்குழந்தையை “வாய் பேசாத காது கேளாதவர்களுடன்'' இணைத்து விடுகிறார்கள், இரண்டு குறைபாடுகளும் நெருங்கியத் தொடர்பு உள்ளது, ஆனால் வேறுவேறு. அவர்கள் அப்படி அல்ல. ஒரு வாய்பேசாத குழந்தை தொடர்ந்து ஊமையாக இருக்கும், காரணம் அவளால் சப்தங்களை கேட்டு அவற்றை பேச்சுக் களாக உருவாக்க முடியாமல் இருக்கும், இப்படித் தான் ஒவ்வொரு குழந்தையும் பேசக் கற்றுக்கொள்ளும். கடந்த பல வருடங்களாக, இதைத் உணர்ந்து கொண்ட பெற்றோர்கள் சிறந்த செவிக் கருவிகள் மற்றும் செவிச்சுருள் உட்பதிப்பு கருவிகள் போன்றவை மூலம் தங்களின் குழந்தைகளுக்கு ஆரம்பகட்டத்திலேயே சிகிச்சையை கிடைக்கச் செய்கிறார்கள், இதனால் தங்கள் குழந்தை பேசவும், பள்ளி கல்லூரிகளில் படித்து, மற்ற குழந்தைகள் போலவே சமமான வாய்ப்புகளை வழங்குவதிலும் வெற்றியடைகிறார்கள். நிறைய குழந்தைகள் இந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்று நல்ல கல்லூரிகளில் படித்து நல்ல பணியில் அமர்கிறார்கள், அவர்களின் நிறைய பேர் அமெரிக்கா மற்றும் இந்தியாவில் உள்ள முன்னணி நிறுவனங்களில் இருக்கிறார்கள்.

குறைபாட்டை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிவது மற்றும் உடனடி செயல்பாடு போன்றவை தான் ஒரு வழக்கமான பள்ளியில் சேருவதற்கான போதுமான பயிற்சியை குழந்தை பெற வைக்கும். ஆனால் வருத்தமான விஷயம் என்னவென்றால், இதுபோன்ற மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ஆரம் பத்திலேயே பயிற்சி கொடுத்து வழக்கமான கல்விக்கு அவர்களை அனுப்புவது குறித்து எதுவுமே தெரியாமல் இருப்பது மற்றும் பயிற்சிக்கான வசதி குறைபாடு போன்றவை தான்.

தங்கள் குழந்தைகளின் கேட்புத்திறன் குறைபாட்டைச் சரிசெய்வது குறித்து இந்திய பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு குறைவாக இருப்பதாக வருத்தம் தெரிவித்து, “இதுபோன்ற குழந்தைகளைக் கையாள



*DG ஜோசஃப் மேத்யூ (வலதிலிருந்து இரண்டாவது), RC மைசூர் வெஸ்ட் தலைவர் ரெஜிநால்ட் வெஸ்லி மற்றும் நிறுவனத்தலைவர் பரிமளா மூர்த்தி குழந்தைகளுடன்.*

பயிற்சி மையங்கள் குறைவாக இருப்பதால், இந்த குழந்தைகளின் ஆற்றல்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது, இதனால் அவர்களுக்கான வேலைவாய்ப்புகளை இழக்கிறார்கள்'' என்று கூறினார் மேத்யூ.

**துவக்கபுள்ளி**

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் பயணம் செய்து, விங் கமாண்டர் K K ஸ்ரீனிவாசனின் மகன் ராஜாவின் வாழ்க்கையைப் பார்ப்போம், இவருக்குப் பிறவியிலேயே கேட்புத்திறன் குறைபாடு இருந்தது. தனது மகனுக்கு உதவி செய்வதற்காக, ஸ்ரீனிவாசன் இந்திய விமானப் படையிலிருந்து விலகி, சென்னையில் உள்ள கேட்புத்திறன் குறைபாட்டுக்கான பாலா வித்யாலயா என்ற பள்ளியில் வுட்ஃபோர்ட் ஆரல் மெதேடு முறையில் ராஜாவுக்குக் கல்வி கொடுக்க ஆரம்பித்தார்.

ஸ்ரீனிவாசனும் அவருடைய மனைவியும் தங்கள் பையனின் பயிற்சியிலேயே முழு கவனத்தையும் செலுத்தினர், அத்துடன் அவர்கள் மைசூருக்குச் சென்று தங்கள் வீட்டின் முதல் மாடியில் கேட்புத்திறன் குறைபாடுள்ள இதர குழந்தைகளுக்கான ஒரு ஆரம்பப்பள்ளியை அமைத்தனர். இது நடந்தது மாற்றுத்திறனாளிக்கான சர்வதேச வருடமான 1980 ஆம் ஆண்டில். ஆரம்பத்தில் இந்தப் பள்ளியில் ஐந்து காதுகேளாத குழந்தைகள் இருந்தனர், அவர்கள் தங்களின் அம்மாவுடன் வந்தனர்.

பரிமளா சொல்கிறார்: “சிசுவாக இருந்தபோதிலிருந்து அன்னையின் குரலை குழந்தை உணர ஆரம்பிக்கிறது என்பதால், ஒரு குழந்தையின் கேட்பது மற்றும் பேசுவதற்கான பயிற்சியில் அம்மாவின் பங்கு மிகமுக்கியமானது.”

காதுகேளாத குழந்தைகளின் பெற்றோர் சங்கம் இந்த ஆரம்பப்பள்ளியை நடத்தியது, எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்ததால், உள்ளூர் புறநகர் வளர்ச்சி ஆணையத்திடம் இடத்திற்காக அணுகி, மைசூர் பகோடியில் ஒரு ஏக்கர் நிலத்தினைப் பெற்றது. ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு நிதி திரட்டப்பட்டு, பிறகு தாய் மற்றும் காதுகேளாத குழந்தை நிறுவனம் என்று பெயரிடப்பட்டது.

**தொடங்கிய கூட்டுமுயற்சி**

பள்ளி மற்றும் விடுதி கட்டிடங்கள், உபகரணங்கள் மற்றும் நூலகம் அமைப்பது போன்றவற்றின் கட்டுமானத்திற்கு கொடையுள்ளம் கொண்டவர்களும், ஜிண்டால், ஜெயின் சமாஜ், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் ரோட்டரி போன்ற அமைப்புகளும் நன்கொடையளித்ததாக வெஸ்லே கூறினார். 1995 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தின் அற்புதமான பணியினால் மைசூர் வெஸ்ட் ரோட்டரி சங்கம் உத்வேகம் பெற்று காதுகேளாத குழந்தைகளின் பெற்றோர் சங்கத்துடன் இணைந்து, அதன்பிறகு ஒரு மாபெரும் கூட்டணி உருவாகி, தாய் மற்றும் காதுகேளாத குழந்தைக்கான ரோட்டரி மைசூர் வெஸ்ட் நிறுவனம் செயல்படத் தொடங்கியது.

சிறுவயதிலேயே குறிப்பாக 3 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளை இங்கே கொண்டுவர ஊக்கப்படுத்தும் விதமாக ஒரு குடியிருப்பு வசதியும் உள்ளது, மேலும் “தாய்மார்கள் கட்டாயம் தங்களுடைய குழந்தைகளுடன் தினமும் பள்ளிக்கு வரவேண்டும். உடல்ரீதியாகவும்



நம்ரதா ஒரு குழந்தையுடன் அலவலாவுகிறார்.

உணர்வு ரீதியாகவும் குழந்தை அன்னையுடன் பிணைந்திருப்பதால், தாய் தான் முக்கிய ஆசிரியராக இருக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம். கேட்புத்திறன் குறை பாடு கொண்ட குழந்தையின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் அவர்கள் மிக முக்கியமான பங்கினை வகிக் கிறார்கள்,'' என்று அவர் கூறுகிறார்.

அனைத்துக் குழந்தைகளுக்கும் செவிச்சுருள் உட்பதிப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது, "இது மிகவும் விலையுயர்ந்தது, லட்சக்கணக்கில் விலை இருக்கும், ஆனால் பல்வேறு அரசுத் திட்டங்கள் இப்போது கிடைக்கிறது, இந்த திட்டங்களின் மூலம் எப்படி பலனடையலாம் என்ற விவரங்களை நாங்கள் பெற்றோருக்கு வழங்குகிறோம்,'' என்று சொல்கிறார் பரிமளா.

இங்கே விஷேசமான பயிற்சிக்கு கொண்டுவரும் குழந்தையில் ஏதாவது பாலின பாகுபாடு இருக்கிறதா, பெண் குழந்தைகளை விட ஆண் கழந்தைகளுக்கு முன்னுரிமை, அதுமாதிரி ஏதாவது? என்ற கேள்விக்கு சிரித்துக்கொண்டே அவர், "இல்லை, நாங்கள் எவ்வித பாலின பாகுபாட்டையும் பார்ப்பதில்லை; செ ால்லப்போனால் சிறுமிகள் தான் இங்கே அதிகம்!'' என்று சொல்கிறார்.

## முறைமை

வழக்கமாக குழந்தைக்கு தனது தாய்மொழியில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. குழந்தை வளருவதால், அவனது பகுத்தறியும் பகுப்பாய்வுத் திறன்கள் செயற்கல்வி மூலம் மேம்படுகிறது.

இந்த வசதியினால் பயனடைந்த குழந்தைகளின் பெற்றோர்கள் அடங்கிய ஆலோசகர்களின் குழு, இந்த சேவைகளில் தன்னார்வலாராக இருந்துகொண்டு தாய்மார்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். இந்த நிறுவனத்திலிருந்து குழந்தை ஒரு வழக்கமான பள்ளியில் எளிதாக இணைவது தான் இதன் நோக்கம். இந்த செயல்பாட்டுக்கு மூன்று முதல் நான்கு ஆண்டுகள் எடுக்கும். ஆனால் இதன் பலன்கள் அருமையானவை. இங்கே மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்று வழக்கமான பள்ளிகளுக்குச் செல்லும் நிறைய குழந்தைகளுக்கு கல்லூரிகளில் பட்டம் பெற்று நல்ல வேலையும் கிடைக்கிறது.

## முதல் மாணவன்

புள்ளிவிவரப்படி, இங்கே ஸ்ரீனிவாசனின் மகன் ராஜா தான் முதல் மாணவன், அவர் அமெரிக்காவில் சட்டம் மற்றும் கணினி அறிவியல் என இரண்டிலும் PhD பெற்றுள்ளார். இவர் தான் மற்ற குழந்தைகளுக்கு ஒரு நிரந்தர உந்துசக்தியாக இருக்கிறார். இந்த நிறுவனத்தில் ஒரு ஆசிரியையாக பரிமளா இணைந்த கதை சுவாரஸ்யமான ஒன்று. கேட்புத் திறன் இயலாமையைக் கொண்ட தன் உடன்பிறந்தவரின் பையனை சமாளிக்க முடியாமல் திண்டாடினர், மைசூர் பள்ளியில் தனது மகனுடன் 1 ஆம் வகுப்பு படிக்கும் ஒரு கேட்புத்திறன் குறைபாடு கொண்ட குழந்தையான பரத்தினை அவர் பார்த்தபோது ஆர்வமும் விநோதமும் கொண்டார்.

"எங்கள் உடன்பிறந்தவரின் பையனுடன் பழகுவதில் நிறைய சிரமங்களை அனுபவித்தோம்; அடிக்கடி அவன் கோபமடைந்தான், அவனுடைய கோபத்தையும் அவனுடைய சிரமங்களையும் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. பரத்தை

சாதாரண பள்ளியில் என் மகனுடன் பார்த்தபோது, உற்சாகம் அடைந்ததுடன், இது எப்படி சாத்தியம் என்று அறிந்துகொள்ள ஆர்வமாக இருந்தேன்.'' அவர் இந்த நிறுவனத்தின் அறங்காவலராக இருக்கும் அவனுடைய அம்மா ரத்னா ஷெட்டி உடன் நண்பராக மாறி, ஒரு தன்னார்வலராக மாறினார், இப்போது இந்த நிறுவனத்தில் ஒரு முழுநேர ஆசிரியையாக இருக்கிறார்.

பெண்மணிகள் குழந்தைகளுடன் கலந்துரையாடுவதைப் பார்க்கிற போது - தாய்மார்களும் குழந்தைகளும் அடிக்கடி வித்தியாசமான கற்றல் முறைகளுக்கு மாற்றப்படுகிறார்கள் - "இங்கே நீங்கள் பார்க்கிற பெண்மணிகள்/ஆசிரியைகள் அனைவரும் பெற்றோர்கள் தான்,'' என்று அவர் விளக்குகிறார்.

அப்படியென்றால் அவர்கள் விஷேசமான கல்வியாளர்களா? "இல்லை, இல்லை, இங்கே நாங்கள் எவ்வித பட்டங்களையோ அல்லது பயிற்சியையோ பார்ப்பதில்லை. ஆலோசகர்களாக, தங்கள் குழந்தைகளுக்கு பயிற்சி கொடுத்து வழக்கமான பள்ளிகளில் சேர்க்கும் தாய்மார்கள் மட்டுமே எங்களிடம் இருக்கிறார்கள்.

### தலைசிறந்த மாணவர்கள்

MS படிப்பிற்காக ஃப்ளோரிடா மாகாண த்திற்குச் சென்ற பரத், அங்கே வளாக நேர்காணல் மூலம் IBM நிறுவனத்தில் சேர்ந்துள்ளார் என்று சொல்லிவிட்டு, "வழக்கமான பள்ளிகளில் இந்த குழந்தைகளை நாங்கள் சேர்த்துவிட்ட பிறகு, அவர்கள் மற்ற மாணவர்கள் போல மாறிவிடுகிறார்கள். உயர்கல்வி படித்து, நல்ல வேலையில் அமர்ந்து, திருமணம் செய்து தங்களுடைய சொந்த குடும்பங்களையும் அமைக்கிறார்கள். அவர்கள் சு தந்திரமாக இருக்கிறார்கள், அவர்களில் பெரும்பாலோனோர் எங்களுடன் இன்றும் தொடர்பில் இருக்கிறார்கள், சிலசமயம் நன்கொடையும் அளிக்கிறார்கள்.

நீங்கள் வருவதற்கு முன்பு இரண்டு பையன்கள் இங்கே இருந்தனர்; அவர்களில் ஒருவன் பன்னிரண்டாம் வகுப்பில் 93 சதவீத மதிப்பெண் பெற்றுள்ளான், ஒரு நல்ல கல்லூரியில் சேரப்போகிறான்.''

ஆந்திராவைச் சேர்ந்த மற்றொரு மாணவன் சமீபத்தில் தொடர்புகொண்டு JEE தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றதாகவும் IIT-இல் சேரப்போவதாகவும் கூறினான் என்று சொல்கிறார். மற்றொரு மூன்று மாணவர்கள் M Tech முடித்துவிட்டு, சமீபத்தில் தொழில்நுட்ப முன்னணி நிறுவனமான விப்ரோவில் சேர்ந்தனர்.

குழந்தைகள் வளர வளர அவர்களின் பேச்சும் மேம்படுகிறது என்று DG ஜோசஃப் விளக்குகிறார். "வழக்கமான பள்ளிகளுக்கு அவர்கள் சென்றபிறகு தங்களை ஒத்த குழுக்களுடன் இணைகிறார்கள், தங்களுடைய பேச்சு முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று அவர்கள் கண்டறியும்போது, அதை வளர்த்துக்கொள்ள அவர்கள் பயிற்சி செய்கிறார்கள், எனவே எளிதாக அவர்களைப் புரிந்துகொள்ள முடிகிறது.''

### உயிரோட்டமும் உற்சாகமும்

ஒவ்வொரு பெற்றோரும் ஒரு குழந்தைக்கு எப்படி கற்றுக்கொடுக்கிறார்கள் என்பதைப் பார்க்க இந்த நிறுவனத்தின் கன்னடா மொழிப்பிரிவுக்குள் நாங்கள்



சென்றோம், அக்குழந்தை அந்த ஆசிரியையின் குழந்தையாக இருக்கவேண்டிய அவசியமில்லை. குழந்தைகளுடன் பேசி, அவர்களின் புகைப்படங்களை எடுக்கவும் அவர்களின் அம்மாக்களுடன் நேர்காணல் செய்யவும் முயற்சிக்கையில், குட்டிப்பையன் ருத்ரன் என் டேப் ரிக்கார்டரைப் பிடுங்க பின்னாலேயே நின்று கொண்டிருந்தான். உண்மையிலேயே, அனைத்துக் குழந்தைகளும் டேப் ரிக்கார்டர் மீதே ஆர்வமாக இருந்தனர்; அவர்களுக்கு மொபைல் ஃபோன் மற்றும் கேமிரா போன்றவை நன்றாகத் தெரியும். எனது மொபைல் போனில் புகைப்படங்களோ அல்லது ஒரு வீடியோவோ எடுக்கிறேனா எனத் தெரிந்துகொள்ள ருத்ரன் விரும்பினான், மேலும் அந்தப் புகைப்படங்களைப் பார்க்க வேண்டுமென அவன் விரும்பினான். ஆசிரியராக இருக்கும் நர்மதா அவனுக்கு “ஒழுக்கத்தைக்'' கற்றுக்கொடுக்க வேண்டும். ஆனால் அவரின் செல்லமானத் திட்டினைக் கண்டுகொள்ளாமல், அவன் எல்லா இடங்களிலும் சுற்றித்திரிந்து மற்ற குழந்தைகளை ஏமாற்றி விளையாடிக் கொண்டிருந்தான். குழந்தைகள் நிறைந்து இருக்கும் இடங்களில் நீங்கள் பார்ப்பது போலவே, இந்த இடமும் உயிரோட்டமும் இரைச்சலும் கலந்து காணப்பட்டது.

பரிமளா என்னை ஒரு ஆலோசகரான விஜயாவிடம் அறிமுகப் படுத்தினார், இந்த மையத்தில் 14 ஆலோசகர்கள் இருக்கிறார்கள், அவரின் மகள் கவிதா இங்கே, பேச்சுப் பயிற்சி எடுத்து வழக்கமான பள்ளிக்குச் சென்றார், ஒரு சார்ட்டர்டு அக்கவுண்டண்டாக தகுதி பெற்று இப்போது விப்ரோவில் வேலை செய்து கொண்டிருக்கிறார். “போன வருடம் தான் அவளுக்குப் பெண் குழந்தை பிறந்தது'' என்று பெருமையுடன் சொல்கிறார் அவர் அன்னை.

இங்கிருக்கும் 12 அறங்காவலர்களில் ஆறுபேர் ரோட்டரியைச் சேர்ந்தவர்கள்; மீதமுள்ள ஆறுபேர் பெற்றோர்கள் என்று விளக்கினார் ஜோசஃப். இராணுவ வீரரின் தாயும் ஒரு அறங்காவலருமான ஜலஜா அவர்களின் மகள் தனுஜா இங்கே பயிற்சி எடுத்தார், இப்போது அவருக்குத் திருமணம் ஆகியுள்ளது. “அவளுக்கு வயது இப்போது 29; இரண்டு வயதாக இருக்கும்போது, அவளுக்கு கேட்புத்திறன் குறைபாடு இருந்தது, ஆனால் அப்போது இந்த மையத்தைப் பற்றி எங்களுக்குத் தெரியவில்லை. அதனால் அவளுக்கு ஐந்து வயதானபோது தான் இங்கே கொண்டுவந்தோம். நாங்கள் இருவரும் இங்கே நான்கு வருடங்கள் தங்கினோம், இந்த பயிற்சியில் என் மகள் பயனடைந்து, வழக்கமானப்



பள்ளிக்குப் போக ஆரம்பித்தாள். அவள் BCA பட்டம் பெற்று IT துறையில், முதலில் பெங்களூரிலும் பிறகு சென்னையிலும் பணி செய்துகொண்டிருந்தாள், ஆனால் திருமணத்திற்குப் பிறகு ராஜினாமா செய்துவிட்டாள்,'' என்று பெருமைபொங்கச் சொல்கிறார் ஜல்சா, “சென்னையில் அவள் தனியாக பேயிங் கெஸ்டாகத் தங்கி தன்னைத்தானே பார்த்துக் கொண்டாள். இளைஞர்களுக்கு சரியாகப் பயிற்சி கொடுக்கும்போது, அவர்கள் நிஜமாகவே யாரையும் சார்ந்திருக்காமல் இருக்கமுடியும்,'' என்று கூறுகிறார்.

ஒரு தாய் தன் குழந்தையுடன் முதலில் வரும்போது, ஒரு குழந்தையை மற்றொரு தாய் அல்லது ஆலோசகருக்கு ஒதுக்கப் படுவதற்கு முன்பு, தாய்க்குப் பயிற்சி கொடுக்கப்படும் என்று மேலும் கூறுகிறார் பரிமளா.

### ரோட்டரியின் மில்லெனியம் விடுதி

ரொட்டேரியன்களும் பெற்றோர் சங்கமும் இணைந்து செய்தவைகள் அனைத்தும் குறிப்பிடத்தக்கது. இந்த வளாகம் சுத்தமாகவும் கதகதப்பாகவும் பளிச்சென வர்ணம் தீட்டப்பட்டதுடன் தெளிவாகவும் காட்சியளிக்கிறது, மேலும் வண்ணமயமான பொம்மைகள், விளக்க அட்டைகள் மற்றும் இதர வேடிக்கை கற்றல் பொருள்கள் போன்றவை நிறைந்து நல்ல காற்றோட்டத்துடன் வகுப்பறைகள் இருக்கிறது. இருக்கைகள் குழந்தைகளுக்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு, உயர்த்தும்படி உள்ளது, அதனால் அவர்கள் தாய்/ஆசிரியையின் முகத்தினைப் பார்க்கமுடியும். இங்கிருக்கும் ஒரு விடுதி, RC மைசூர் வெஸ்ட் சங்கத்தின் ரோட்டரி மில்லெனியம் வருடத் திட்டப்பணி, இது நீண்ட தொலைவிலிருந்து வரும் 26 தாய்மார்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு இருப்பிட வசதி யையும் அளிக்கிறது. மற்றவர்கள் அருகிலுள்ள இடத்தில் வாடகைக்கு இருக்கவேண்டும். ஒட்டுமொத்தமாக 120 தாய்மார்களும் அவர்களின் குழந்தைகளும் இந்த மையத்தில் இருக்கிறார்கள்.

நோயறிதல் மற்றும் கேட்புத்திறன் உபகரணங்கள்/செவிச்சுருள் உட்பதிப்பு கருவிகளைப் பொருத்துவதற்கு ஒரு ஒலித்தடுப்பு அறை இருக்கிறது. ஒரு ஒலித்தடுப்பு அறைக்கு என்னை அழைத்துச் சென்றனர், அது கேட்கக்கூடிய வாய்மொழி சிகிச்சை அளிப்பதற்காக கட்டமைக்கப்பட்டது, மேலும் இங்கே உயர்தரத்தில் குழந்தைகளுக்கு பயிற்சி தரப்படுகிறது. செவிச்சுருள் உட்பதிப்பு கருவியை குழந்தை பெற்றவுடன், உகந்த அதிகபட்ச கேட்புத்திறனுக்கு மட்டுமல்லாது பல்வேறு சப்தங்களைக் கேட்தற்கும் விஷேச பயிற்சி வழங்கப்படுகிறது என்பதால், இந்த ஒலித்தடுப்பு அறை மிகவும் முக்கியமானது.

விடுதியில் தங்குவதற்கும் பயிற்சிக் கும் ஆகக்கூடிய கட்டணங்கள் கைக்கு எட்டும் தூரத்திலேயே இருக்கும் என்று கூறுகிறார் வெஸ்லே.

வகுப்பறைகள், கட்டிடங்கள் போன்றவற்றின் கட்டுமானத்திற்கும், உபகரணங்கள் வாங்கவும் மேலும் செலவுகளை ஈடுகட்டவும் பல வருடங்களாக நன்கொடையாளர்கள், கொடைவள்ளல்கள் மற்றும் ரொட்டேரியன்கள் ஆகியோரிடமிருந்து நிதிகள் திரட்டப்பட்டது. “பல வருடங்களாக இந்தத் திட்டப்பணியை தக்கவைத்துள்ளோம், மேலும் நிறைய மானியங்களும் இதற்குக் கிடைத்துள்ளது. இந்த அமைப்புடன் ரோட்டரி இணைந்த போது, இந்த இடம் பெரும்பாலும் காலி இடமாக இருந்தது; நாங்கள் தான் நிறைய கட்டிடங்களைக் கட்டி க்கொடுத்தோம்,'' என்று சொல்லி சிரித்துவிட்டு, “இப்போது நாம் நிற்கும் பிரிவு 1996 ஆம் ஆண்டில் PRIP கல்யாண் பானர்ஜி அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது,'' என்று DG ஜோசஃப் மேலும் கூறுகிறார்.

கடந்த ஏழு மாதமாக நர்மதா தன் மகள் மித்ராவுடன் (கறுப்பு) இங்கே இருக்கிறாள், அவளுக்கு வயது 4. “அவளுக்கு இரண்டு வயதாக இருக்கும்போது அவளுடைய கேட்புத்திறன் குறைபாட்டைக் கண்டறிந்தோம், செவிச்சுருள் உட்பதிப்பு கருவி பொருத்தப்பட்டு, இப்போது அவளால் பேசிப்பழக முடிகிறது,'' என்று சொல்கிறார் நர்மதா. அவருக்கு இரண்டு மகள்கள், மூத்தவள் இப்போது 6ஆம் வகுப்பு படிக்கிறாள், இயல்பான கேட்புத்திறனுடன் இருக்கிறாள்.

மோலினா தனது மகள் சலோனி உடன் இங்கே இருக்கிறார்; அவள் 1 வயது கடந்தவுடனே அவளுடைய இயலாமையைத் தெரிந்து கொண்டோம்; உடுப்பியிலிருந்து வருகிறோம்.''

தாயும் குழந்தையும் விடுதியில் தங்கியிருக்கிறார்கள், உடுப்பியில் வேலை செய்துகொண்டிருக்கும் அவளுடைய அப்பா மூத்த மகளைக் கவனித்துக்கொள்கிறார். என்னுடைய கேள்விக்கு பதில் சொல்கையில், “ஆமாம், வீட்டை விட்டு வந்து இங்கே தங்குவது சிரமமாகத்தான் இருக்கிறது, ஆனால் இதை சலோனியின் எதிர்காலத்திற்காகச் செய்கிறேன்'' அவளுக்கு சரியாக பயிற்சி கொடுக்கப்பட்டால், அவளால் வழக்கமான பள்ளிக்குச் செல்லமுடியும்,'' என சொல்கிறார் மலோனி.

அதேபோல், ஒசூரைச் சேர்ந்த ரேவதியும் தனது குடும்பத்தை விட்டு இங்கே இருக்கிறார். ''துரதிர்ஷ்டவசமாக இதுபோன்ற ஒரு பயிற்சி நிலையம் தமிழ்நாட்டில் இல்லை,'' என்று அவர் கூறினார்.

அதேநேரத்தில் வகுப்பறையில், நர்மதா ருத்ரனிடம் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார்:

அம்மா எங்கே சப்பாத்திகளைத் தயார் செய்வார்?

சமையல் அறையில்.

சப்பாத்திகளின் வடிவம் என்ன?

வட்டம்.

ருத்ரன் அவரின் கேள்விகளுக்கு பதில் கூறினான், ஆனால் உடனடியாக அல்ல. பார்வையாளர்கள் உட்பட அவனைச் சுற்றி பல்வேறு கவனச்சி தறல்கள் இருந்தது.

ஆனால் நாளொருமேனி பொழுதொரு வண்ணமுமாக மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து பேசும் உலகத்தை அவன் கண்டுகொள்வான், இது மெதுவாக ஆனால் உறுதியாக அவனுக்கு முன் விரியும்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION

# பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் உதவியுடன் 125 மகிழ்ச்சி பள்ளிகள்

V முத்துகுமரன்



*RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவர் ரவிசங்கர், K S கோவிந்தராஜ், ஹாப்பி ஸ்கூல்ஸ் திட்டத் தலைவர் பிரகாஷ் ஹெக்டே, ரமேஷ் சாரி மற்றும் நீல் நிதின் ஜோசஃப் இதனஹல்லி கிராமத்தில் பள்ளி வளாகத்தில்.*

பெங்களூரிலிருந்து 90 கி.மீ. கிழக்கே கோலாரில் உள்ள பங்காருப்பேட்டை தாலுகாவைச் சேர்ந்த யாலுவஹள்ளி கிராமத்தில் உள்ள அரசு ஆரம்பப்பள்ளி அது. நாங்கள் உள்ளே நுழைந்த உடனேயே பள்ளி மாணவர்கள் எங்களை புன்னகையுடன் வரவேற்றனர். பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் எங்களை நன்றிப்பெருக்குடன் வரவேற்றனர்.

எந்தவித அடிப்படை வசதி களும் இல்லாமல் காட்சியளித்த பள்ளி இப்போது புதுப்பொலிவுடன் இருந்தது.

இப்போது இந்தப் பள்ளி கிராமத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் எழுச்சி பெற்றுள்ளது. இதற்காக நாங்கள் ரோட்டரி சங்கத்துக்கு கடமைப்பட்டிருக்கிறோம். இப்போதுதான் எங்களுக்கு புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது என்று மகிழ்ச்சி பொங்க தெரிவித்தார் அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் M அமர்நாத். பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத்தின் (RID 3190) 125 ஹாப்பி பள்ளிகளை உருவாக்குதல், அங்கன்வாடி மையங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த பள்ளிகளில் இந்த பள்ளியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் பள்ளி வளாகத்தில் மரம், செடிகளுடன் தோட்டம் அமைத்துள்ளோம். வகுப்பறைகளை புதுப்பித்துள்ளோம். கழிவறைகள் புனரைமைக்கப்பட்டுள்ளன. கழிவறைகளுக்கு இரும்பு கதவுகளும், தரையில் டைல்ஸ் பதிக்கப்பட்டுள்ளன என்றார் திட்டத்தின் இணை தலைவரும் சங்கத்தின் முன்னாள் தலைவருமான பிரகாஷ் ஹெக்டே. கோலார் மாவட்டத்தில் ஐந்து தாலுகாக்களிலுமாக 20 முதல் 30 பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து ரோட்டரி உதவியுடன் பள்ளிகளை சீரமைத்தும் அங்கன்வாடி மையங்களை ஏற்படுத்தியும் அவற்றுக்கு புதுவாழ்வு கொடுத்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசு உயர்நிலை ஆரம்பப் பள்ளிகளில் 22 பெண்கள் உள்பட 42 பேர் 7-ஆம் வகுப்பு வரை படிக்கின்றனர். மாணவர்கள் சுகாதாரத்தை பேணும் வகையில் அவர்களுக்கு என கைகழுவும் நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல: அவர்கள் பயன்பாட்டுக்கு என 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட தூய குடிநீர் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது.

கர்நாடக அரசின் விளையாடிக் கொண்டே கற்கும் திட்டத்தின் கீழ் (நலிகாலி) வண்ண வண்ணமாக ஐந்து மேஜைகள் அமைக்கப்பட்டு அங்கு 3-வது வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் படம் வரைந்தும், காகிதத்தில் கப்பல் உள்ளிட்ட வடிவங்களை தங்கள் கற்பனைத் திறனை பயன்படுத்தி உருவாக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றார் ஹெக்டே.

இதண்டஹள்ளி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலை ஆரம்பப்பள்ளி வளாகத்தில் ஒரு கன்னடப் பள்ளியும் ஒரு உருது பள்ளியும் அமைந்துள்ளது. இங்குள்ள பள்ளியின் வகுப்பறைகளும் புனரமைக்கப்பட்டு எழிலாக காட்சியளிக்கிறது. கழிவறைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் கலந்துரையாடல்களுக்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.7-ஆம் வகுப்பு வரையிலான கன்னடப்பள்ளியில் 36 மாணவர்களும், 5-ஆம் வகுப்பு வரையிலான உருது பள்ளியில் 12 மாணவர்களும் படித்து வருகின்றனர்.



*பிரகாஷ் ஹெக்டே 'நலிகலி' வகுப்பறையில்.*

பள்ளி வகுப்பறைகளையும், வளாகத்தையும் RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் புதுப்பித்துக் கொடுத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. நாங்கள் புத்துணர்வுடன் மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தருகிறோம் என்றனர் ஆசிரியைகளான M L நாகலட்சுமி மற்றும் S பர்ஸானா இருவரும்.

மல்லசந்திரா என்னுமிடத்தில் உள்ள அரசு உயர்நிலை ஆரம்பப் பள்ளியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையம் முன்பு பெயரளவுக்கே இருந்தது. ரோட்டரி உதவியுடன் அது புனரமைக்கப்பட்டதை அடுத்து இப்போது அது புதுப்பொலிவுடன் காணப்படுகிறது.

கோலார் மாவட்டத்தில் மீதமுள்ள 10 பள்ளிகளில் இன்னும் பணிகள் நிறைவடையவில்லை. விரைவில் அவை பூர்த்தியாகும். சராசரியாக ஒரு பள்ளிக்கு ரூ.4.5 லட்சம் வீதம் செலவிடப்பட்டுள்ளது. அதாவது இந்த திட்டத்துக்கான ஒதுக்கீட்டுத் தொகை ரூ.5.62 கோடியாகும் என்று சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவரான ரமேஷ் சாரி தெரிவித்தார். ஒவ்வொரு அங்கன்வாடிக்கும் ரூ.70 ஆயிரம் வீதம் 80 அங்கன்வாடிகள் புனரமைக்கும் பணி நடந்துவருகிறது என்றார்.

125 ஹாப்பி பள்ளிகள் உருவாக்கும் திட்டத்துக்கு பவோலா டக்கோஜீ ரவிசங்கர் அறக்கட்டளை ரூ.1 கோடி வழங்கியுள்ளது. எஞ்சிய தொகை ரோட்டரி உறுப்பினர்கள் வழங்கும் நன்கொடை மற்றும் பொருள்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

இது தவிர ரவிசங்கர், பெங்களூர் வசந்த் நகரில் ரூ.5.5 கோடி செலவில் கன்னடம், தமிழ் மொழி வகுப்புகளுடன்கூடிய அரசு ஆரம்பப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளியை கட்டி வருவது குறிப்பிடத்தக்கது.



புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# 30 மில்லியன் டாலர் நிதி சேர்ப்பதே இலக்கு!

ரஷீதா பகத்

ரோட்டரி உறுப்பினர்கள் உண்மையிலேயே மக்கள் சேவையில் ஈடுபட்டு வருவதை என்னால் இன்று பார்க்க முடிகிறது. ரோட்டரி மாவட்டம் 3150-ஐச் சேர்ந்த உறுப்பினர்கள் இத்திட்டத்தைச் செயல் படுத்தியுள்ளது என்னை நெகிழ்ச்சியடைய வைத்துள்ளது. ஹைதராபாத் நகரின் மையப்பகுதியில் அவர்கள் ஏழைகளுக்கு குறைந்த செலவில், தரமான வகையில் டயாலிஸிஸ் சேவை அளித்து வருகின்றனர். அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

ஹைதராபாத் டெக்கான் ரோட்டரி சங்கத்தின் சர்வதேச உதவியிலான திட்டத்தை ஆய்வு செய்த பின் ரோட்டரி அறக்கட்டளை அறங் காவலர் தலைவர் கேரி ஹுவாங் சொன்ன வார்த்தைகள் இவை.

இந்த திட்டத்தை ரோட்டரி சங்கம், செகந்திராபாத் குருத்வாரா மற்றும் மஹாவீர் டிரஸ்ட் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது.



TRF தலைவர் கேரி ஹுவாங், கொரின்னா, TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி AKS உறுப்பினர்களுடன்.

கூட்டுமுயற்சிக்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும் என்றார் ஹுவாங்.

2015-16ஆம் ஆண்டில் நான் தலைவராக இருந்தபோது 12 படுக்கை வசதிகள் கொண்டாதாக இந்த மையம் அமெரிக்காவின் ரோட்டரி மாவட்டம் 6450-ன் உதவியுடன் அமைக்கப்பட்டது. இந்த மையத்தில் சிறுநீரகக் கோளாறால் அவதிப்பட்டு வரும் ஏழை மற்றும் நடுத்தர வகுப்பினருக்கு ரூ.300 கட்டணத்தில் டயாலிசிஸ் சிகிச்சை அளித்து வருகிறது என்றார் சுனீல் ஜெயின்.

குறைந்த கட்டணத்தில் தரமான வகையில் டயாலிசிஸ் சிகிச்சை அளிக்கப்படுவது எனக்கு ஆச்சர்யமளிக்கிறது. நகரின் மையப்பகுதியில் இது போன்று மருத்துவ சிகிச்சை மையம் அமைத்து குறைந்த கட்டணத்தில் சேவை அளிப்பது என்பது சாதாரண காரியமல்ல. ஆனாலும் செகந்திராபாத் குருத்வாரா இந்த மையத்தை அமைக்க இலவசமாக இடமளித்துள்ளது. இங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் குறைந்த கட்டணத்தில் சிகிச்சை பெற்று மனமகிழ்ச்சியுடன் செல்கின்றனர். இதுவே தனியார் மருத்துவ மையமாக இருந்தால் நோயாளிகள் இந்த கட்டணத்தைப் போல் 8 மடங்கு செலுத்த வேண்டியிருக்கும் என்றார் கேரி.

அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங்குடன், அறங்காவலர் குலாம் வாஹன்வதி, EMGA சாம் பட்டிபண்டலா, ரோட்டரி மாவட்டம் 3150-ன் ஆளுநர் சிவநாராயணராவ், சங்கத் தலைவர் ஷைலேஷ் குமிடெல்லி உள்ளிட்டோர் மையத்தை சுற்றிப்பார்த்து, வசதிகளை கேட்டறிந்து, நோயாளிகளுடன் உரையாடல் நடத்தினர்.

கடந்த நான்கு ஆண்டுகளாகச் சிறுநீரக் கோளாறால் பாதிக்கப்பட்ட நான், வாரம் மூன்றுநாள் டயாலிசிஸ் சிகிச்சை செய்துகொள்ள இங்கு வருகிறேன் ஒரு முறை டயாலிசிஸ் செய்ய ரூ.300 கட்டணம். சிகிச்சையும் நன்றாக இருக்கிறது. எனக்கு வந்து போகவும் சௌகரியமாக இருக்கிறது என்றார் 53 வயதான பிரவீண் குமார் என்னும் எலெக்ட்ரீஷியன்.

நான் வாரம் இருமுறை இங்கு வந்து டயாலிசிஸ் சிகிச்சை செய்துகொள்கிறேன். தனியார் மருத்துவ மனைகளில் ரூ.2 ஆயிரம் அல்லது ரூ.3, ஆயிரம் கொடுத்து சிகிச்சை செய்துகொள்ள என்னால் முடியாது. இங்கு சேவை அளிப்பவர்களுக்கு நான் நன்றி கடன் பட்டுள்ளேன் என்றார் P V ராம்ரெட்டி. ஓய்வுபெற்ற பேராசிரியரான இவருக்கு வயது 63.


இந்த மருத்துவ மையத்தில் டயாலிசிஸ் கருவிகளை ரோட்டரி நிர்மாணித்துள்ளது. குருத்வாரா இடம் தந்துள்ளது. மஹாவீர் அறக்கட்டளை தொழில் நுட்ப ஊழியர்கள் மற்றும் அவர்களுக்கு உதவியாக இருப்பவர்களுக்கான பராமரிப்புச் செலவுகளை ஏற்றுக்கொண்டுள்ளது. அடுத்த ஆண்டுக்குள் மேலும் 6 டயாலிசிஸ் கருவிகள் வைக்க திட்ட மிட்டுள்ளோம் என்றார் சரத் சௌதுரி.

கடந்த நான்கு வருடங் களாக இத்திட்டம் செயல் படுகிறது. ஒரு மாதத்துக்கு சராசரியாக 800 பேருக்கு டயாலிசிஸ் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு ஏறக்குறைய 10 ஆயிரம் பேர் இதனால் பலனடைவர் என்றார் முன்னாள் தலைவர் ஜெயின்.

ஹைதராபாத் டெக்கான் ரோட்டரி சார்பில் மாலையில் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கான சமூகப்பொறுப்பு திட்டத்தின் கீழ் மாநாடு நடைபெற்றது. இதில் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ரோட்டரி அறக்கட்டளை யுடன் இணைந்து கார்ப்பொரேட் நிறுவனங் கள் எப்படிச் செயல்பட முடியும், நிதியை எவ்வாறு செலவிடுவது என்பது குறித்து விவாதம் நடந்தது.

இதைத் தொடர்ந்து ரோட்டரி மாவட்டம் 3150 மற்றும் 3020 இணைந்து நடத்திய நிகழ்ச்சியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சிறந்த சேவையாளர்களுக்கு AKS விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய பட்டிபண்டலா, ஹைதராபாத் வந்து




PDG *ரவி வட்லாமணி* TRF *தலைவர் கேரியிடம்* TRF *க்கான தன் காசோலையை* TRF *அறங்காவலர் வஹன்வதி மற்றும்* EMGA *சாம் பட்டிபண்டலா முன்னிலையில் வழங்குகிறார்.*

ஆய்வுசெய்த கேரி ஹுவாங், குலாம் வாஹன்வதி ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், அறக்கட்டளைக்கு நிதி கொடுப்பதிலும் இந்த மண்டலம் முன்னிலையில் இருப்பதாக அவர் கூறினார்.


கடந்த 2018-19-ம் ஆண்டில் தங்களது மண்டலம் அதிகபட்சமாக 21.4 டாலர் நிதி கொடுத்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். இந்த ஆண்டு எங்கள் பகுதியைச் சேர்ந்த மாவட்ட ஆளுநர்கள் (இலங்கை, நேபாளம் உள்பட) மொத்தம் 30 மில்லியன் டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் கூறினார். இந்தியாவில் AKS உறுப்பினர்களின் எண்ணிக்கை 100-ஐ கடந்துள்ளது. தைவான் நாட்டை நாங்கள் முந்திவிட்டோம் என்றார். ஹாம்பர்க் மாநாட்டில், பஹாமாஸ் இளைஞரால் வரையப்பட்ட போலியோ ஒழிப்பு விழிப்புணர்வு ஓவியங்களை உதய் பிலானி, ரூபாலி தம்பதியினர் ஏலத்தின் மூலம் வாங்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் அறங் காவலர் தலைவர் கேரி, அறங் காவலர் வாஹன்வதி உள்ளிட்டோரை வரவேற்றுப் பேசிய ஹைதராபாத் டெக்கான் ரோட்டரி சங்கத் தலைவர் ஷைலேஷ் குமிடெல்லி அறக்கட்டளை நிதிக்கு சங்கம் சார்பாக 3 லட்சம் டாலர் மதிப்புக்கான காசோலையை வழங்கினார். சமூகநலத் திட்டங்களைச் செயல்படுத்தும் போது கல்வி, எழுத்தறிவு, நோய்களை கட்டுப்படுத்துவதற்கான சுகாதாரத் திட்டங்களுக்கே முன்னுரிமை அளித்து வருகிறோம் என்றார்.

ரோட்டரி மாவட்டம் 3020ன் ஆளுநர் வீரபத்திர ரெட்டி (பாபி) தங்களது மாவட்டத்தில் 3776 உறுப்பினர்களும் 3231 PHF-களும் இருப்பதாகத் தெரிவித்தார். கடந்த 2018-19-இல் தங்கள் மாவட்டம் போலியோ ஒழிப்புக்காக 1 லட்சம் டாலர் வழங்கியதாகவும் இந்த ஆண்டு 2 லட்சம் டாலர் வழங்க இருப்ப தாகவும் குறிப்பிட்டார். மிகப் பெரிய சங்கங்களில் ஒன்றான விஜயவாடா மிட்டவுன் ரோட்டரி சங்கம் 747 உறுப்பினர்கள் கொண்டது. விரைவில் இச்சங்கம் 800 இலக்கை அடையும் என்றார். மேலும் D 3150 கடந்த ஆண்டு 8 லட்சத்து 62 ஆயிரம் நிதி திரட்டியதாகவும் இந்த ஆண்டு 1 மில்லியன் டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் பட்டிபண்டலா தெரிவித்தார்.

ரோட்டரி 3150 மாவட்ட ஆளுநர் சிவநாராயண ராவ் பேசுகையில், இந்த ஆண்டு 1 மில்லியன் டாலர் நிதிகொடுக்க திட்டமிட்டுள் ளதாகத் தெரிவித்தார். ஆயிரம் பள்ளிகளை ஹாப்பி பள்ளிகளாக்கும் திட்டம் உள்ளது என்றும், ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கையை 3,568 லிருந்து 5,000-மாக அதிகரிக்கப்படும் என்றும் இவர்களில் 500 பேர் பெண்களாக இருப்பர் என்றும் ராவ் தெரிவித்தார்.

சங்க உறுப்பினர்களில் ஒருவரான சரத் சௌதிரி, உலக அளவில் சமூக நலத் திட்டங்களுக்கு கார்ப்பொரேட் நிறுவனங்கள் அளித்துவரும் நன்கொடை களை விவரித்தார். அஸிம் பிரேம்ஜி, ரோட்டோரியன் ரவிசங்கர், பில்கேட்ஸ், வாரன் பஃபெட் உள்ளிட்டோரை அவர் உதாரணமாகக் குறிப்




*RC ஹைதராபாத் டெக்கான் உறுப்பினர்கள் தங்கள் காசோலையை TRF தலைவர் கேரியிடம் வழங்குகின்றனர்.*



RC ஹைதராபாத் டெக்கானின் டையாலஸிஸ் மையத்தில் TRF தலைவர் கேரி, கொரின்னா, TRF அறங்காவலர் வஹன்வதி.

பிட்டார். தங்கச்சுரங்கம் நமக்காக காத்திருக்கிறது. நாம்தான் அதை சரியான வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். முழுமனதுடன் நன்கொடை அளித்தால் சமூகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று நன்கொடையாளர் ராக்ஃபெல்லர் ஒரு முறை கூறியிருந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரோட்டரி மாவட்டம் 3150-ஐச் சேர்ந்த முன்னாள் ஆளுநர் ரவி வாட்லாமணி ரோட்டரி அறக்கட்டளைக்கு 60 ஆயிரம் டாலருக்கான காசோலையை வழங்கினார். புற்றுநோய் கண்டறியும் பரிசோனை மையத்துக்கான திட்டத்துக்கு இந்தத் தொகை பயன்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். கார் பொரேட் நிறுவனங்கள் ரோட்டரி அறக்கட்டளைக்கு மனமுவந்து நிதி கொடுத் தால் பன் மடங்கு வளர்ந்து பல நல்ல திட்டங்களை முறையாகச் செயல்படுத்த வழிவகுக்கும் என்றார்.

ரோட்டரி 3150, 3020 மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய கேரி ஹுவாங், அறக்கட்டளைக்கு நீங்கள் கொடுக்கும் நிதி மனித நேயத்துடன் உலக நன்மைக்காகச் செலவிடப் படுகிறது. உலகில் பல சமூக மாற்றங்களை உங்களால் ஏற்படுத்த முடியும். அதற்கான திறன் உங்களிடம் உள்ளது. லெபனானில் உள்ள பள்ளிகளுக்கு குடிநீர் வசதி செய்து தந்ததன் மூலம் 6742 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். ரோட்டரியின் இது போன்ற நல்ல காரியங்கள் தொடரட்டும் என்றார்.

இந்த ஆண்டும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த ரோட்டரி அறக்கட்டளை முடிவு செய்துள்ளது. நமது எல்லையை நாம் விரிவுபடுத்த நினைத்தாலும் அதற்கு தடையாக இருப்பது நிதிதான். எனவே நன்கொடையாளர்கள் அதிக நிதி கொடுத்தால் உதவிகரமாக இருக்கும் என்றார்.

அறங்காவலர் வாஹன்வதி, DG சிவ நாராயனராவ், பாபி இருவருக்கும் நன்றி தெரிவித்து பேசுகையில், மும்பையில் உள்ள அடோஸ் என்னும் ஐ.டி. நிறுவனத்தில் உள்ள தனது நண்பர் மூலம் சமூக நலத்திட்டங்களுக்கு ஒரு தொகை வாங்கித் தருவதாக 3142 மாவட்ட ஆளுநர் தெரிவித்தார். நான் அது ஏதோ சிறிய நிறுவனமாக இருக்கும் என்ற எண்ணத்தில் பேசுவதற்கு போன போது அந்த நிறுவனம் பிரான்ஸை தலைமையிடமாகக் கொண்ட பெரிய நிறுவனம் என்றும் அதில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை செய்துவருவதும் தெரிந்தது. ஆனால் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரியோ சமூக நலத்திட்டங்களுக்கு பணம் தராமல் ஒரு பெரிய தொகையை ரோட்டரி அறக்கட்டளைக்கு கொடுத்துவிட்டார். இதற்கு காரணம் நல்ல நிறுவனங்கள் ரோட்டரி மீது வைத்திருக்கும் நம்பிக்கைதான்.

ரோட்டரி அறக்கட்டளை பற்றி நம்மில் சிலருக்கு முழுமையாகத் தெரியவில்லை. அறக்கட்டளை தோற்றம் அதன் செயல்பாடு குறித்து விடியோ காட்சிகள் மூலம் மாவட்ட ஆளுநர்கள், உறுப்பினர்களுக்கு விளக்க வேண்டும்.

ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதி கொடுப்பதில் கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தியா தொடர்ந்து இரண்டாவது இடத்தை தக்கவைத்து க்கொண்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. ரோட்டரி மாவட்டம் 3190, 3141 மற்றும் 3011 ஆகிய மூன்றும் உலகில் முதல் பத்து இடத்தில் இருப்பதும் பாராட்டுக்குரியது. ரோட்டரி 3150 மூலம் 8 லட்சத்து 60ஆயிரம் டாலர் நிதி அளித்து, சிறப்பாகச் செயல்பட்டு வரும் முன்னாள் ரோட்டரி மாவட்ட ஆளுநர் ரமேஷ் வாங்கலாவுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் வாஹன்வதி.

புகைப்படங்கள்:
ரஷீதா பகத்

# இரண்டு டாலருக்கும் குறைவான ஊதியத்தில் வாழ்க்கை நடத்த முடியுமா?

பில் கேட்ஸ்



*சிறு வியாபாரி செரின் டோஸ்ஸா*

1983-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். நானும் மெலிண்டாவும் கென்யா, தான்ஸானியா மற்றும் ஜையர் (இப்போது காங்கோ ஜனநாயகக் குடியரசு) நாடுகளுக்குப் பயணித்தோம். அப்போது சாலையில் நடந்து செல்பவர்களை கவனித்தோம். அவர்களில் பெரும்பாலானவர்கள் காலணிகள் அணியாமல் வெறுங் காலுடன் நடந்து சென்றதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தோம்.

வறுமை என்றால் என்ன என்பதை அப்போதுதான் நேரில் பார்த்தோம். உலகில் ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு இருப்பது எனக்குத் தெரியும் என்றாலும் ஏழை மக்களின் நிலையை இப்போது தான் நேரில் பார்த்தேன். குறைந்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தும் ஏழைகள் காலணிகூட இல்லாமல் வெறுங்காலுடன் நடக்க நேர்ந்ததை பார்த்தபோது எனது மனம் சங்கடப்பட்டது.

இன்னும் சொல்லப்போனால் அவர்கள் நல்ல சுகாதாரம், தரமான கல்வி, நல்ல உணவு கிடைக்காதவர்களாக இருக்கலாம். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் முன்னேற சந்தர்ப்பம் கிடைக்காதது தான். இந்த காட்சிகளைக் கண்ட போது நாங்கள் மனம் வருந்தினோம். உலகில் ஏன் இந்த நிலை நீடிக்கிறது, இப்படிப்பட்டவர்களுக்கு நம்மால் எப்படி உதவ முடியும் என்று எங்களுக்கு நாங்களே கேள்வி கேட்டுக்கொண்டோம். அதன் விளைவாக உருவானதுதான் பில்கேட்ஸ் அறக்கட்டளை.

அந்த பயணத்தை அடுத்து நாங்கள் வறுமையை ஒழிக்க மேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். வறுமையை எதிர்த்துப் போராடுவதில் உலகில் முன்னேற்றம் ஏற்பட்டது. வறுமை கோட்டுக்கு கீழே இருந்த ஒரு பில்லியன் மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டனர். சுகாதாரம், கல்வி, வேளாண்மையில் மெல்ல மெல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. இருந்தபோதிலும் இன்னும் மக்கள் ஒரு நாளைக்கு 2 டாலருக்கும் குறைவான ஊதியத்தில் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். ஒரு நாளைக்கு 1.90 டாலர் மற்றும் அதற்குக் குறைவாக ஊதியம் பெறுபவர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்கள் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. இப்படி வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்பவர்கள் எண்ணிக்கை 700 மில்லியன். இவர்களது வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் நாம் கடுமையாக உழைக்க வேண்டும். யார் எங்கு வாழ்கிறார்கள் என்பது முக்கியமல்ல: அவர்கள் சுகாதாரமான முறையிலும் நாட்டுக்கு பயனுள்ள வகையிலும் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை நாம் ஏற்படுத்தித் தரவேண்டும். இதுவே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு 2 டாலருக்கும் குறைவாக சம்பாதிப்பவர்களால் எப்படி வாழ்க்கையை நடத்திச் செல்லமுடியும்? வறுமையின் பல நிலைகளை என்னால் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக் கூறமுடியும். ஆனால் பணக்கார நாடுகளில் உள்ளவர்களால் இதற்கு விடை சொல்லுவதுதான் கடினமாக இருக்கும். நிரந்தரமில்லாத வாழ்க்கை, குறைந்த வருமானம், ஏழைகள் சந்திக்கும் அன்றாடப் பிரச்னைகள் இவற்றை எண்ணிப்பார்த்தாலே மனம் கலங்குகிறது.

உலகில் உள்ள ஏழை மக்கள் சிலரின் உண்மையான நிலைமைகளை நாம் கேட்டால்தான், அவர்கள் வாழ்க்கையை முன்னேற்றுவது எப்படி என்பதற்கான விடை கிடைக்கும். ருவாண்டா நாட்டைச் சேர்ந்த மீனவர், எதியோப்பியாவைச் சேர்ந்த விவசாயி, நம் நாட்டில் கொல்கத்தா நகரைச் சேர்ந்த ரிக்ஷா தொழிலாளி, கென்யா நாட்டைச் சேர்ந்த பாட்டி, சாலையில் உணவு விற்கும் நைஜீரியா இளைஞர், நம்நாட்டில் ராஜஸ்தானில்




*கூலித் தொழிலாளி தேவ்லி பாய்*





டீக்குமனா ஜெர்வைஸ், மீனவர்









மேலே : *பாட்டி பெட்ரோனிலா மலெஸி*

இடது : *விவசாயி அவோக் மோஸ்*

கீழே : *லால் முகமது ரிக்ஷா தொழிலாளி*



வேலைபார்க்கும் கூலித்தொழிலாளி என ஒரு நாளைக்கு 2 டாலருக்கும் குறைவான ஊதியம் பெறும் 6 பேரின் கதையை இங்கு விவரிக்கிறேன் அப்போதுதான் உங்களுக்கு உண்மை நிலை புரியும்.

**தெருவோர வியாபாரி:** நைஜீரியாவில் லாவோஸ் நகர வீதிகளில் கஞ்சி மற்றும் கூழ் விற்று பிழைப்பு நடத்திவரும் இவரின் பெயர் செரின்டோஸா. இவர் தினமும் சம்பாதிப்பது 2 டாலருக்கும் குறைவு. இதில் தான் வாழ்க்கை நடத்தி தனது மூன்று குழந்தைகள், கணவரை காப்பாற்ற வேண்டும். இந்த நிலையிலும் அவர் சிறிது சேமித்து வருகிறார்.

**மீனவர்:** ருவாண்டாவில் உள்ள புகுசேரா நகரைச் சேர்ந்த மீனவர் நிடிகுமணா ஜெர்வைஸ். இவரது ஒரு நாள் வருமானம் 1500 ருவாண்டன் பிராங். அதாவது 1.73 அமெரிக்க டாலர். இதில் தான் மனைவி, மூன்று குழந்தைகளை காப்பாற்ற வேண்டும். குடும்பத்தின் எதிர்காலத்துக்காக கடுமையாக உழைத்து வருகிறார். மீன்பிடித்தல் தவிர, ஆடு வளர்ப்பு, விவசாயத்திலும் ஈடுபட்டுவருகிறார். இவரும் சேமித்து வருகிறார். இதன் மூலம் அவர் பின்னாளில் சிறிது கடன்பெற முடியும்.

**ரிக்ஷா தொழிலாளி:** இந்தியாவில் கொல்கத்தா நகரைச் சேர்ந்த ரிக்ஷா தொழிலாளி லால் முகமது. 15 ஆண்டுகளாக இதே தொழிலை செய்து வருகிறார். அரைக்கால் டிராயர், அரைக்கால் சட்டை, காலில் ரப்பர் செருப்பு. இவைதான் இவரின் தோற்றம். பயணிகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு ஏற்றிச் செல்வது, பார்சல்களை வண்டியில் எடுத்துச் செல்வது இவரின் வேலை. இவரது வருமானமும் ஒரு நாளைக்கு 2 டாலருக்கும் குறைவுதான். இந்த வருமானத்தில்தான் மனைவி, மூன்று குழந்தைகளைக் காப்பாற்றியாக வேண்டும். குழந்தைகள் நன்றாகப் படித்து நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற கனவுடன் இருக்கின்றனர் பெற்றோர்.

**விவசாயி:** எத்தியோப்பியாவில் அம்பா என்ற இடத்தில் சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வருபவர் அவோக் மோஸ். இவர் தனது நிலத்தில் கோதுமை, கடலை, சோளம் உள்ளிட்ட பயிர்களை வளர்த்து விற்று வருகிறார். இவர் தனது மனைவி, ஐந்து குழந்தைகள் மற்றும் தாயுடன் தனது சிறிய வீட்டில் வசித்து வருகிறார். தன்னால் முடிந்தவரை சேமித்து குழந்தைகளின் படிப்புக்காகச் செலவிட்டு வருகிறார். அண்மையில் இவரது மூத்த மகள் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

**தினக்கூலி தொழிலாளி:** இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் தினக்கூலியாக வேலைசெய்து வருபவர் டெவ்லிபாய். கட்டுமானத்தொழில் உள்பட கடுமையான வேலைகளில் ஈடுபட்டு வருகிறார். இந்த பெண்மணி. கணவரிடமிருந்து விவாகரத்து பெற்ற இவர், 10 வயது மகள், 6 வயது மகனை வளர்த்து வருகிறார். குழந்தைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பதுதான் இவரது நீண்டநாள் கனவு.

**கென்யா பாட்டி:** கென்யாவில் உள்ள நைரோபியில் கிபெரா என்னும் சேரிப் பகுதியில் வசிக்கிறார் பெட்ரோநில்லா மலேஸி என்னும் பாட்டி. மூத்த மகள் இறந்துபோனதை அடுத்து அவரின் நான்கு குழந்தைகளையும் (பேரன்) வளர்க்கும் பொறுப்பு இவரிடம் வந்தது. இது தவிர தனது இரண்டு மகள்களுக்கும் ஆதரவாக இருக்கிறார். தெருவில் ஐஸ் விற்றும், அவ்வப்போது ஏதாவது வேலைக்கும் செல்கிறார்.

ஒரு நிமிடம் அவர்களது நிலைமையை யோசித்துப் பாருங்கள். அவர்களின் கதைகளையும், அவர்கள் சந்திக்கவேண்டிய சவால்கள், அவர்களின் எதிர்கால கனவுகளையும் கேட்டால் மனம் நெகிழ்ந்துவிடும். நிச்சயமாக அவர்கள் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற என்ன செய்யலாம் என்றுதான் நீங்கள் கேட்பீர்கள்.

இதன் ஆசிரியர் பில் & மெலின்டா கேட்ஸ் ஃபௌன்டேஷனின் தலைவர் மற்றும் மைக்ரோசாஃப்ட் நிறுவனர்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# வெற்றிக் கதைகளை பகிர்ந்துகொள்ளுங்கள் – கேரி ஹுவாங்

V முத்துக்குமரன்

ரோட்டரி மாவட்ட ஆளுநர்கள், தங்களின் வெற்றிக்கதைகளை ரோட்டரி உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றார் சென்னையில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய ரோட்டரி அறக்கட்டளையின் தலைவர் கேரி ஹுவாங். மாவட்ட ஆளுநர்கள் ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதிகொடுப்பதை குறைந்தபட்சம் 5 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ரோட்டரி அறக்கட்டளை மாநாட்டில் கேரி மேலும் பேசியதாவது:

ரோட்டரி சங்கங்கள் DDF நிதியை முழுமையாகப் பயன்படுத்தினால் தான் அதன் பலன் பெரியதாக இருக்கும்.

சென்னைக்கு நான் வருவது நான்காவது முறை என்றாலும் ரோட்டரி சங்கங்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதும், ரோட்டரி உறுப்பினர்கள் உற்சாகத்துடன் சேவை செய்து வருவதும் எனக்கு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது என்று தெரிவித்தார்.

டிரஸ்டி குலாம் வாஹன்வதி பேசுகையில், கடந்த ஆண்டு நமது மண்டலம் அறக்கட்டளைக்கு 21.4 மில்லியன் டாலர் நிதி திரட்டியது. அதன் மூலம் 21 மில்லியன் டாலரை திட்டத்துக்காகப் பெற்றுக்கொண்டது. ஆனால், இரண்டாம் இடம் வகிக்கும் தைவானோ 4.5 மில்லியன் டாலர் மட்டுமே பெற்றுக் கொண்டது. அமெரிக்கா அதிகபட்சமாக

*RID 2982 DG A K நடேசன் `1.04 கோடி காசோலையை TRF தலைவர் கேரியிடம், கொரின்னா, அறங்காவலர் குலாம் வஹன்வதி, DG G சந்திரமோகன், RID 2982 PDGs தர்மேஷ் படேல், வாசு ராஜாராம் முன்னிலையில் வழங்குகிறார்.*






**இடதிலிருந்து:** *‘என்ட் போலியோ ஃபெலோ’ திட்டத்தை பிரபலப் படுத்தும் DG G சந்திரமோகன், அறங்காவலர் வஹன்வதி, TRF தலைவர் கேரி, PRID P T பிரபாகர் மற்றும் PDG E K சகாதேவன்.*

186 மில்லியன் டாலர் நிதி கொடுத்தபோதிலும் சர்வதேச திட்டங்களுக்காக 2 மில்லியன் டாலர் மட்டுமே பெற்றுக் கொண்டது. அறக்கட்டளைக்கு யார் எவ்வளவு கொடுத்தார்கள் என்று நாங்கள் பார்ப்பதில்லை. எங்கு நிதி தேவைப்படுகிறதோ அங்கு நாங்கள் நிதியை திருப்பிவிடுகிறோம் என்று குறிப்பிட்டார்.

**G சந்திரமோகன் (ரோட்டரி 3232 மாவட்ட ஆளுநர்):** அறக்கட்டளைக்கு 1.5 மில்லியன் டாலர் நிதி திரட்டிக்கொடுக்க நாங்கள் தீர்மானித்திருந்தோம். வாஹன்வதி வலியுறுத்தலால் இப்போது 2 மில்லியன் டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் 30 சர்வதேச திட்டங்களை செயல்படுத்த அறிக்கை சமர்பிக்க இருக்கிறோம்.

எங்கள் சங்கத்தில் 5,300 உறுப்பினர்கள் உள்ளனர். கடந்த ஆண்டு ரோட்டரி அறக்கட்டளைக்கு கொடுத்தது 1.16 மில்லியன் டாலர். எங்கள் மாவட்டம் 5-வது இடத்தில் உள்ளது. ரோட்டரி கூட்டுறவு அமைதி திட்டத்துக்கு இருவரை பரிந்துரை செய்ய இருக்கிறோம். அரசு பள்ளிகளுக்கு சுகாதாரம்.

**ஜமீர்பாஷா (ரோட்டரி 3000 மாவட்ட ஆளுநர்):** ரோட்டரி ஜீவன் திட்டம் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. இத்திட்டத்தின்படி ரோட்டரி உறுப்பினர் குடும்பத்தில் மகன் அல்லது மகளுக்கு ரூ.2 லட்சம் வழங்கப்படும். மாவட்டத் திட்டங்களை நிர்வகிக்க டிரஸ்ட் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரோட்டரி பேரிடர் நிவாரண நிதித் திட்டத்தை ஏற்படுத்திய அறக்கட்டளைத் தலைவர் கேரி, டிரஸ்டி வாஹன்வதி ஆகியோருக்கு நன்றி. இத்திட்டத்தின் மூலம் இயற்கைப் பேரழிவு ஏற்படும் இடங்களில் மீட்பு நிவாரணப் பணிகளுக்காக 25 ஆயிரம் டாலர் வழங்கப்படும். ரோட்டரி அறக்கட்டளைக்கு இந்த ஆண்டு 2.05 மில்லியன் டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

**ஸ்ரீதர் பலராமன் (ரோட்டரி 3231 மாவட்ட ஆளுநர்):** ரோட்டரி அறக்கட்டளைக்கு 1.15 மில்லியன் டாலர் நிதிகொடுக்க திட்டமிட்டுள்ளோம். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் 10 டாலர் நிதிகொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். 2 லட்சம் டாலர் மதிப்புள்ள சர்வதேச திட்டங்களைச் செயல் படுத்த முடிவு செய்துள்ளோம். மேலும் மூன்று டயாலிசிஸ் மையங்கள் ஏற்படுத்த திட்ட மிட்டுள்ளோம். வேலூர் கோட்டையில் ரோட்டரி மூலம் ஏற்படுத்தப்பட்ட டயாலிசிஸ் மையத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 11,000 பேர் இலவசமாக டயாலிசிஸ் செய்துகொள்ளும் வசதியைப் பெற்றுள்ளனர். வேலூரில் 17 டயாலிசிஸ் கருவிகள் உள்ளன. இதை 40 ஆக அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.

**அபிராமி ராமநாதன் (முன்னாள் ஆளுநர்):** காஞ்சிபுரம் மாவட்டம், குயில்குப்பம் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள விடுதிகளில் இருப்பவர்களுக்கு மாவட்ட ரோட்டரி சார்பில் கட்டில், தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட உள்ளன. 1987ல் நான் ரோட்டரியில் சேர்ந்த காலத்திலிருந்தே நிதி கொடுத்து வருகிறேன். இப்போது என் மனைவியின் அனுமதி இல்லாமலே 1,00,000 லட்சம் டாலர் நிதி கொடுக்க முடிவு செய்துள்ளேன் என்றார். இவர் சிறந்த சேவைக்காக TRF தலைவர் கேரியிடமிருந்து விருதுபெற்றவர் மட்டுமல்ல AKS உறுப்பினருமாவார்.

**Dr A K நடேசன் (ரோட்டரி 2982 மாவட்ட ஆளுநர்):** AKS உறுப்பினரான இவர், ரோட்டரி அறக்கட்டளை நிதியாக $1.04 கோடி கொடுத்துள்ளார். இவரது மாவட்டத்துக்குள் வரும் சங்கங்கள் பெரும்

# இதய நோய் சிகிச்சை மையம் திறப்பு விழா

## ரோட்டரி செய்திக்குழு




*TRF தலைவர் கேரி மற்றும் கொரினா பெங்களூரில் ஜெயதேவா மருத்துவமனையில், DG சமீர் ஹரியானி, PDGs சுரேஷ் ஹரி, HR அனந்த் ஆகியோருடன்.*

*பெங்களூரில் உள்ள ஜெயதேவா இதயநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ள ரோட்டரி இதயநோய் சிகிச்சை மையத்தை TRF தலைவர் கேரி ஹுவாங் திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் அறங்காவலர் குலாம் வாஹன்வதி, ரோட்டரி 3190 மாவட்ட ஆளுநர் சமீர் ஹரியானி, ஜெயதேவா இதய நோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் டாக்டர் மஞ்சுநாத், பெங்களூர் இந்திராநகர் ரோட்டரி சங்க தலைவர் மனோஜ் அகர்வால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.*

*பெங்களூர் இந்திராநகர் ரோட்டரி சங்கமும், ஜெயதேவா இதயநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளன என்று DG ஹரியானி தெரிவித்தார். இந்த மையத்துக்கான இடத்தை மருத்துவமனை வழங்கியுள்ளது. சிகிச்சைக்கான கருவிகள், சான்டோ ஆந்த்ரே, RID 4420-ன் கூட்டு முயற்சியுடன் 2,24,807 டாலர் சர்வதேச நிதியுதவியுடன் வழங்கப் பட்டுள்ளன. இந்த மையத்தில் இதய நோய் சிகிச்சைக்குத்தேவையான ECG, எக்கோ கார்டியோகிராம், பிஸியோதெரபி, மூச்சுப்பயிற்சி, யோகா பயிற்சி அளிக்கும் வசதிகள் உள்ளன.*

பாலும் ஊரகப்பகுதியிலேயே அமைந்துள்ளன. நாங்கள் மூன்று சர்வதேச நிதியுதவித் திட் டங்களை சமர்ப்பித்தோம். ஆனால், சில காரணங்களால் அவை நிராகரிக்கப்பட்டு விட்டன. இந்த ஆண்டு அறக்கட்டளைக்கு 5 லட்சம் டாலர் நிதிகொடுக்க திட்டமிட்டுள்ளோம்.

**M அம்பலவாணன் (DRFC):** மாவட்டம் 3232-ன் மூலமாக ரோட்டரி அறக்கட்டளையின் போலியோ ஒழிப்பு நிதிக்கு 1 மில்லியன் டாலர் கொடுக்க பல்வேறு வகைகளில் நிதி திரட்டி வருகிறோம். 2020-க்குள் 3 மில்லியன் டாலர் திரட்டும் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறோம். இரண்டு சொட்டு போலியோ மருந்துக்கு 2 டாலர் வீதம் இதுவரை 10 ஆயிரம் டாலர் நிதி சேர்த்துள்ளோம்.

இந்தியாவில் ரோட்டரி தொடங்கப்பட்டு நூறாண்டுகள் ஆவதையொட்டியும் அக்டோபர் 24 உலக போலியோ ஒழிப்பு தினம் என்பதாலும் கன்யாகுமரியிலிருந்து காஷ்மீருக்கு ஜோதி ஓட்டம் நடைபெற உள்ளது. ஒரு போலியோ ஜோதி இந்தியாவின் மேற்குப் பகுதிக்கும், மற்றொன்று காஷ்மீருக்கும் கொண்டு செல்லப்படும். 2020-ஜூன் மாதம் இந்த போலியோ ஜோதி இரண்டும் முறையே பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என்றார் அவர்.

DRFCs S கோபால் (ரோட்டரி மாவட்டம் 3000), M பாலமுரளிகிருஷ்ணா (ரோட்டரி மாவட்டம் 3231) இருவரும் தங்கள் மாவட்டங்கள் செய்ய உள்ள பணிகளை விளக்கினர்.

லாஸ்வேகாஸ் மாவட்ட ரோட்டரி முன்னாள் ஆளுநரும், மாவட்ட சர்வதேச நிதியுதவிக்குழு தலைவருமான செஹாப் எல் அவார், அவரது மனைவி பிரிசியா ஷாப்ஸ், ரோட்டரி முன்னாள் இயக்குநர் P T பிரபாகர் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். மற்றும் `1 லட்சம் போலியோ நிதியளிக்கும் ரொட்டேரியனை ஊக்குவிக்கும் விதமாக ஒரு விசேஷ ‘என்ட் போலியோ ஃபெல்லோ பின்’ வழங்கப்பட உள்ளது. இதனை போலியோ ஒருங்கிணைப்பாளர்கள் E K சகாதேவன் மற்றும் கேஷவ் குன்வர் வடிவமைத்துள்ளனர்.

படங்கள் : V முத்துக்குமரன்



# போலியோவை ஒழிப்போம், வாரீர்!

நண்பர்களே, உலக போலியோ தினம் இந்த மாதத்தில் வருகிறது. ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் இருந்து வரும் செய்திகள் நாம் கூடுதலாக உழைக்கவேண்டும் என தெரிவிக்கிறது. போலியோ அவ்வளவு சீக்கிரமாகவோ எளிதாகவோ ஒழிக்கக் கூடியதல்ல என்று இது காட்டுகிறது.

எல்லாவற்றையும் விட இதுவரை இல்லாத அளவுக்கு நம்முடைய பங்களிப்புத் தேவைப்படுகிறது. சாதனை புரிய நாம் நிலையாக இருந்து உழைக்க வேண்டும். நாம் இறுதி கட்டத்தில் இருக்கிறோம். குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்கும் வாழ்வைத் திருப்பித் தந்து சமூகங்களுக்கான நம்பிக்கையை மீட்டெடுப்போம்.


சர்வதேச போலியோ ஒழிப்பு முயற்சி அமைப்பில் பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் பவுண்டேஷன் உட்பட அருமையான நண்பர்கள் நமக்கு இருப்பதால் நாம் அதிர்ஷ்ட சாலிகளாக இருக்கிறோம், இது தொடர்ந்து ஒவ்வொரு நன்கொடைக்கும் இருமடங்கு பணத்தைத் தருகிறது. வைல்டு போலியோ வைரஸ் 2-ஆம் வகையை நாம் ஏற்கனவே ஒழித்துவிட்டோம், மேலும் 3ஆம் வகை விரைவில் ஒழித்துக் கட்டப்படும். இந்தியா போலியோ இல்லா நாடு. ஆப்பிரிக்கா முழுவதும் விரைவில் போலியோ இல்லாத நாடாக மாறும்.

சமீபத்திய ஆண்டுகளில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த மக்கள் கஷ்டங்களை அனுபவித் துள்ளனர். செயல்வீரர்களாக சவாலை எதிர்க்கத் துணிவோம்.

கன்பியூசியஸ் ஒரு பொன்மொழியில், “புண்ணியம் செய்தவன் தனியாக விடப்படமாட்டான். ஒத்த எண்ணங்கள் கொண்டவர்கள் ஒன்று சேர்வார்கள்,” என்று கூறினார். ரோட்டரியில் இந்த வார்த்தைகளை நாம் நன்றாகப் புரிந்துகொண்டுள்ளோம். உலகம் முழுவதிலும் உள்ள நம்மைப்போல மனப்பான்மை கொண்ட சகோதர சகோதரிகள் நம்முடன் கைகோர்ப்பார்கள். உலகத்தில் நன்மை செய்வதற்கான நமது தேவையே நம்மை ஒன்றிணைத்துள்ளது.


நோயற்ற உலகத்தை நம்மால் உருவாக்க முடியும். உங்களுடைய தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் கொடையுள்ளம் மூலம் தான் இதைச் செய்யமுடியும்.

சரித்திரத்தின் அங்கமாக மாறுங்கள்! உங்கள் நன்கொடைகளை endpolio.org/donate என்ற இணையதளத்தில் செலுத்துங்கள்.



**கேரி C K ஹுவாங்**
TRF அறங்காவலர் தலைவர்

# பன்னாட்டு நல்கைத் திட்டங்கள் - ஒரு வரப்பிரசாதம்



இந்த ரோட்டரி ஆண்டில், நான் பல பன்னாட்டு நல்கை (GG)த் திட்டங்களைச் சென்று பார்த்துள்ளேன். சமீபத்தில், அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங்குடன் நான் பல இடங்களுக்குச் சென்றேன். சங்கங்களும் மாவட்டங்களும் செய்து வருகிற மனிதத்தன்மைப் பணிகளை நேரில் கண்டேன், தேவையுள்ள சமூகங்களில், அவர்களுடைய வாழ்க்கையை மாற்றும் மாற்றங்களை இவர்கள் கொண்டுவருவதைப் பார்த்தேன். நான் பார்த்த பல பன்னாட்டு நல்கைத் திட்டங்களில் இரண்டைமட்டும் நான் சுட்டிக்காட்டுகிறேன்; சென்ற ஆண்டு கேரளத்தில் பேரழிவை உண்டாக்கிய புயல்கள் பல வீடுகளில் தீவிரச் சேதத்தை உண்டாக்கின. அப்படிப்பட்டவர்களுக்கு உத வுவதற்காகக் கொச்சினில் ரொட்டேரியன்கள் GGக்களின் வழியாகக் குறைந்த செலவில் தங்குமிடங்களை உருவாக்கியுள்ளார்கள். இதனால், பல குடும்பங்கள் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை, பெருமையுடன் தங்களுடைய புதிய வீடுகளுக்குக் குடிபெயர்கிறார்கள். இன்னொரு GGயின்கீழ், ஹைதராபாதில் ஒரு டயாலிசிஸ் மையம் தொடங்கப்பட்டுள்ளது, இது வெறும் ரூ.300 கட்டணத்தில் ஏழைகளுக்குச் சேவை வழங்குகிறது. இந்தக் கட்டிடத்தை உள்ளூர் குருத்வாரா இலவசமாக வழங்கியுள்ளார்கள்; இந்த மையத்தை மஹாவீர் அறக்கட்டளை இயக்குகிறது, இங்குள்ள கருவி TRFஆல் வழங்கப்பட்டுள்ளது: உண்மையில் ஒரு தனித்துவமான கூட்டுமுயற்சி இது!

மூன்றாவது திட்டம் ஒரு GG இல்லை, ஆனால், அதைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்: தென்கிழக்கு ரயில்வேஸ் D 3150 உடன் ஓர் MoUல் கையெழுத்திட்டுள்ளது; இதன்படி, ரயில்வே நடைமேடைகளுடைய ஒரு சிறு பகுதி ரோட்டரிக்கு வழங்கப்படும்; தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்கான தனியிட அமைப்புகள் அங்கு உருவாக்கப்படும். இது சமூகத்துக்கு மிகச்சிறந்த சேவையாகும்; அதேநேரத்தில், இதனால் ரோட்டரிக்கு மிக நல்ல PRம் கிடைக்கும்.

சாரிட்டி நாவிகேட்டர் அமைப்பு வழங்கும் மிகப்பெரிய பாராட்டாகிய “நான்கு நட்சத்திரங்களை”த் தொடர்ந்து 12வது ஆண்டாக TRF பெற்றுள்ளது அந்த நன்மதிப்பை நாம் காக்கவேண்டும்.



**குலாம் வஹன்வதி**
TRF அறங்காவலர்




இடதிலிருந்து: PDG *வினோத் பன்சல்*, RID *கமல் சங்வி*, RIPN *சேகர் மேத்தா*, RID *பரத் பாண்ட்யா மற்றும்* PRIP *கல்யாண் பானர்ஜீ.*

# 2025க்குள் இந்தியாவை முழு எழுத்தறிவு பெற்ற நாடாக்குவோம்: RIPN சேகர் மேத்தா

ரஷீதா பகத்

பல ஆண்டுகளுக்கு முன்னால், 2010-11ல், இந்தியாவை முழு எழுத்தறிவு பெற்ற நாடாக்குவதற்காக ரோட்டரி முதன்முதலாகக் கனவு கண்டது. ரொட்டேரியன்களாகிய நாம் நம்முடைய நாட்டுக்குச் செய்யக்கூடிய மிக முக்கியமான விஷயம் அநேகமாக இதுதான் என்று நான் அப்போது தெரிவித்தேன், என்று கொல்கத்தாவில் நடைபெற்ற இக்னைட் (விழிப்புணர்வூட்டுவோம்) நிகழ்ச்சியில் தெரிவித்தார் PRIP மற்றும் RILM தலைவர் கல்யாண் பேனர்ஜி.

இந்த இலக்கை மனத்தில் வைத்து, RIPN சேகர் மேத்தாவை தேர்ந்தெடுத்தார் அவர். ''காரணம், அவர் மாவட்ட ஆளுநராவதற்கு முன்பாக, 1995 முதலே எனக்கு அவரைத் தெரியும்; ஒரு வேலையைச் செய்து முடிக்கவேண்டுமென்றால் அப் பணி சிறப்பாகவும் கச்சிதமாகவும் செய்யப்படும் வரை அவர் ஓய்வெடுக்கமாட்டார்.''

2014ம் ஆண்டுவாக்கில், அவர் TEACH என்ற கொள்கையை உருவாக்கியிருந்தார். இதில் ஆசிரியர் ஆதரவு, மின்கற்றல், வயதுவந்தோர் கல்வி, குழந்தை முன்னேற்றம் மற்றும் மகிழ்ச்சியான பள்ளி ஆகியவை இடம்பெற்றிருந்தன. கல்வியின் அடிப்படைப் பகுதிகள் அனைத்தும் இதில் இடம்பெற்றிருந்தன. இந்தப் பகுதியில் பணியாற்றும் மற்ற NGOக்கள் இந்த பகுதிகளில் ஒன்றையோ இரண்டையோ தேர்ந்தெடுத்திருந்தபோது, ரோட்டரி இவை அனைத்தையும் செய்யத் தயாராக இருந்தது.

ரோட்டரி இந்திய எழுத்தறிவுத் திட்டம் (RILM) திரட்டிய குழு சிறப் பானது, அர்ப்பணிப்புணர்வுள்ளது, பணியில் உறுதியானது, அனைத்திலும் ரொட்டேரியன்கள் பங்களித்தார்கள். எல்லாம் அதனதன் இடத்தில் விழுந்தது, அவர் ஒரு மையக் குழுவைத் திரட்டித் தகவல் தொடர்புகளை, கேள்விகளைக் கையாண்டார்; பின்னர் அவர்கள் ஒரு சிறந்த, ஆர்வமுள்ள, அர்ப்பணிப்புள்ள ரொட்டேரியன்களுடைய குழுவைத் தேர்ந்தெடுத்தார்கள்.

நாட்டை எழுத்தறிவு பெறச் செய்வதில் இவர்கள் பேரார்வத்துடன் இருந்தார்கள்; ஆகவே, முயற்சி முன்னேறியது. RILM வழியாக வழங்கப்பட்ட வளங்களுடன் அல்லது அவை இல்லாமல் சங்கங்கள் முன்னேறின, பல நேரங்களில் இவை சொந்தமாக நிதி திரட்டின, தங்களுடைய சமூகம் எழுத்தறிவு பெறவேண்டும் என்று விரும்பினார்கள். அதே நேரம், இந்திய அரசும், எழுத்தறிவை மையமாகக் கொண்ட மற்ற அனைத்து NGOக்களும் RILM மற்றும் ரோட்டரி சங்கங்களுடன் கை கோர்த்து இதில் பங்கேற்றன




என்றார் பானர்ஜி. அங்கு கூடியிருந்த ஆளுநர்கள் மற்றும் பிற மூத்த தலைவர்களை (இவர்களில் பெரும்பாலானோர் RILMன் பல்வேறு குழுக்களில் உள்ளனர்) முன்வைத்துப் பேசிய RIPN சேகர் மேத்தா, 2025க்குள் இந்தியாவை முழு எழுத்தறிவு பெறச்செய்வதுதான் நோக்கம் என்று வலியுறுத்தினார். இதைச் செய்வதற்கு, போலியோவை விரட்டும் திட்டத்தை நாம் எப்படிப் பின்பற்றினோமோ அதை அப்படியே திரும்பச்செய்யவேண்டும். போலியோ ஒரு பெரிய கனவு என்றால், இந்தியாவை முழு எழுத்தறிவு பெறச் செய்வது மிகப்பெரிய கனவைவிடப் பெரிய கனவு. அது மிகச் சிக்கலானது, சவாலானது, கடினமானது.''

அதேசமயம், முதலாண்டில் RILM செய்துள்ள ஆராய்ச்சியால், ஒரு நல்ல திட்டத்தை உருவாக்க இயன்றது. இன்று வரை எந்த ஆளுநரோ NGOவோ நீங்கள் இதைத் தவறாகச் செய்துவிட்டீர்கள் என்று சொல்லவில்லை. ஏனெனில், நாம் அனைத்துப் பங்குதாரர்களிடமிருந்தும் (அரசு, அதிகாரிகள், வல்லுனர்கள், உள்ளூர், பன்னாட்டி NGOக்கள்) யோசனைகளைப் பெற்றோம், அதன்பிறகே TEACH கொள்கையை வடிவமைத்தோம்.

இத்திட்டத்தின் வளர்ச்சி காரணங்களாகப் பானர்ஜி குறிப்பிட்டவை, திட்டத்துடைய வலுவான கட்டமைப்பு, அதன் பரவலான மற்றும் முழுமையான, எழுத்தறிவின் அனைத்து முக்கியப் பகுதிகளையும் தொட்டுச் சென்ற வீச்சு. TRF அறங்காவலராக PRID சுசீல் குப்தா எடுத்த முயற்சிகளால், CSR நிதிகளை ரோட்டரித் திட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள இயலும். சங்கங்கள், மாவட்டங்கள் அவரவர் நிலைகளில் எழுத்தறிவுத் திட்டங்களை மேற்கொள்ளும் நேரத்தில், RILM குழுக்கள் மாநில, மைய மற்றும் பெருநிறுவன நிலைகளில் முயற்சிகளை எடுக்கின்றன.

இந்தியாவை முழு எழுத்தறிவு பெறச்செய்வதற்கான சரியான நாளை ஊகிக்க இயலாது என்றாலும், ஒவ்வொரு மாநிலமும் 90-க்குமேற்பட்ட சதவிகிதம் எழுத்தறிவு பெறும்வரை, நாம் முழு எழுத்தறிவு பெற்ற நாடு என்று இந்திய அரசு தெரிவிக்கும் வரை நாம் தொடர்ந்து பாடுபடுவோம்.''

RIDக்கள் பரத் பான்ட்யா, கமல் சங்க்வி. இவர்கள் எப்போதும் எழுத்தறிவுக்காக பெரிய அளவில் உதவுகிறவர்கள்.

இந்தக் கூட்டத்தில் பேசிய RIPN சேகர் மேத்தா இவ்வாறு குறிப்பிட்டார், உலகில் எந்த NGOம் எழுத்தறிவுடைய மூன்று பெரிய பகுதிகளையும் கவனிப்பதில்லை: குழந்தை, ஆசிரியர் மற்றும் சூழல் (பள்ளி). இத்துடன், பள்ளிக்குச் செல்லாதவர்கள் அல்லது வயது வந்தோரையும் சேர்க்கவேண்டும். இத்திட்டத்தில் சுமார் 100 PDGக்கள் பங்கேற்கிறார்கள், 10 பிராந்திய எழுத்தறிவுத் தலைமைகள், மற்றும் TEACH மற்றும் நிதிதிரட்டல் குழுக்கள் உள்ளன, இவை ஒவ்வொன்றிலும் தலா 15 உறுப்பினர்கள் உள்ளார்கள். இந்த அளவு பேரார்வத்தை, இப்படியொரு குறுகிய காலகட்டத்தில் இந்த அளவு அதிகப் பணிகள் நடைபெறுவதை நீங்கள் வேறு எந்தத் திட்டத்தில் கண்டுள்ளீர்கள்?''

மின்கற்றலில், குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் மத்தியப் பிரதேச மாநில அரசாங்கங்களுடன் கூட்டணி ஏற்பாடுகளைச் செய்துள்ளது RILM. அநேகமாக, மிக விரைவில் நாம் இந்திய அரசுடன் ஒரு திட்டத்தைத் தொடங்குவோம் என்று நான் நம்புகிறேன், அது போலியோவைத் தடுக்கும் திட்டத்தைப்போலிருக்கும். இதற்கான வரைவை NITI ஆயோக் ஏற்றுக்கொண்டு விட்டு, முதன்மை அமைச்சரவையிடம் உள்ளது. இந்திய அரசாங்கத்துடன் இந்த MoU கையெழுத்திடப்பட்டதும், இது இந்தியாவை முழு எழுத்தறிவு பெறச் செய்வதற்காக இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகளிலேயே மிகப்பெரியதாக இருக்கும்.''

இது ஒரு மிகப்பெரிய கனவு, இதற்கு மிகுந்த அர்ப்பணிப்பும், கடின உழைப்பும் தேவை என்று அவர் பங்கேற்பாளர்களை



RIPN *சேகர் மேத்தாவுடன்* RIDs *கமல் சங்வி மற்றும் பரத் பாண்ட்யா.*

## இந்தியாவில் 25 கோடி எழுத்தறிவில்லா வயதுவந்தோர்!

இந்தியாவின் எழுத்தறிவு வெறும் 74 சதவிகிதத்தில் நிற்கிறது; ஆனால் நம்முடைய குழந்தைகளில் 96 சதவிகிதத்தினர் பள்ளிக்குச் செல்கிறார்கள் என்றார் RIPN சேகர் மேத்தா. அப்படியானால், நாம் இன்னும் 74 சதவிகிதத்தில் இருப்பது ஏன்? இதற்குக் காரணம், நம்முடைய எழுத்தறிவில்லா வயதுவந்தோர் எண்ணிக்கை மிகப்பெரியது: 25 கோடி! வருத்தமான விஷயம், அடுத்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் போது, இந்த மக்கள் தொடர்ந்து எழுத்தறிவற்றவர்களாகவே இருக்கலாம், இதனால் நம்முடைய எழுத்தறிவு விகிதத்துடைய வெளி வரம்பு அதிகபட்சம் 80 சதவிகிதமாக ஆகலாம் என்றார் அவர்.

நாம் விரும்பும் எண்ணிக்கையிலான மக்களை நம்மால் சென்றடைய, நம்முடைய எழுத்தறிவு விகிதம் 74லிருந்து 90 சதவிகிதமாக மாறலாம். நாம் 90 சதவிகிதத்தைக் கடந்துவிட்டால், உலகில் எழுத்தறிவு பெற்ற நாடுகளில் ஒன்றாகி விடுவோம். இது சாத்தியம் தான்; ஆனால், உங்களுடைய பேரார்வமுள்ள ஈடுபாடும் கடின உழைப்பும் தேவை. இந்த ஆண்டின் ஆளுநர்கள் இங்கு உள்ளார்கள்; ''ஆனால், இக்னைட் இந்த ஆண்டு தாமதமாக நடத்தப்படுவதால், அவர்களுக்கு 10 மாதங்கள் தான் பணிக்காலமாக உள்ளன, எனினும், அவர்கள் தங்களுடைய மாவட்டங் களில் எழுத்தறிவுக் கான பயிற்சியை உடனே தொடங்க வேண்டும், ஏனெனில், RILM வெற்றியின் மையத்தில் உள்ளது, அதன் பயிற்சி.''

இரண்டு மிகச்சிறந்த மற்றும் இளம் RI இயக்குநர்களான பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி, ஒருவர் மற்றவருடைய பாணியை முழுமைசெய்கிறார்கள், இவர்களுடைய பணியால் நாம் இந்த இலக்கை நோக்கி விரைவாக முன்னேறுவோம். பரத் பல ஆண்டு களாக RILMன் முதன்மைப் பயிற்சியாளராக உள்ளார்; கமல் அதன் துணைத்தலைவராக இருந்துள்ளார்.''

அடுத்த வாரம், இன்னும் இரண்டு போராளிகள் (2021–23க்கான RI இயக்குநர்கள்), அவர்கள் யாராக இருந்தாலும் சரி, இந்த நோக்கத்தில் இணைவார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு நான் உங்களிடமிருந்து விலகியிருக்கலாம்; ஆனால், எழுத்தறிவுக்காகப் பணியாற்றுகிற ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நான் இருப்பேன். நான் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி, தொடர்ந்து எழுத்தறிவுக்காக உழைப்பேன் என்று வாக்களிக்கிறேன்.''

எச்சரித்தார். DLCCக்களுடைய (மாவட்ட எழுத்தறிவுக் குழுத் தலைவர்களுடைய) பங்களிப்பு மிகத் தீவிரமானது. யாரேனும் இதில் தீவிரமாக இல்லையென்றால், தயவுசெய்து ராஜினாமா செய்து விடுங்கள். ஏனெனில், இது நம்முடைய நாட்டுக்கான லட்சியம்; HRD அமைச்சகத்திடம் நாம் இது பற்றி உறுதிசொல்லியிருக்கிறோம்.

எழுத்தறிவுடன், அவர் கவனம் செலுத்தும் மற்ற இரண்டு பகுதிகள்: ஆக்கப்பூர்வ ஆரோக்கயிம் மற்றும் வின்ஸ் (WinS). RI தலைவர் பதவிக்கான தன்னுடைய நேர்முகத்தேர்வின்போது, 10 ஆண்டுகளில் ரோட்டரியுடைய தொலைநோக்கைப்பற்றித் தன்னிடம் கேட்கப்பட்டதாகத் தெரிவித்தார் மேத்தா. அப்போது நான் சொன்னது, ரோட்டரி உலகின் முதல் நிலைச் சேவை அமைப்பாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதை நான் உங்கள் அனைவருடைய சார்பாகவும் சொன்னேன். ஆனால், எழுத்தறிவுக் காக மட்டும் பணியாற்றுவதன்மூலம் நம்மால் அதை நிறைவேற்ற இயலாது. எழுத்தறிவுடன், நேர்வித நலன், நீர், தூய்மைக் காகவும் பணிபுரிவதன்மூலம், ரோட்டரியுடைய அனைத்து முக்கியக் கவனப் பகுதிகளையும் ரொட்டேரியன்கள் கவனிப்பார்கள்




RIPN சேகர் மேத்தா மற்றும் RID கமல் சங்வி RILMன் நிதித் திரட்டும் குழுவுடன்.

என்று தொடர்ந்து கூறினார் மேத்தா. எழுத்தறிவு, நலன் மற்றும் வின்ஸ் (WinS) ஆகிய மூன்று பகுதிகளுக்காகவும் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

RILM மற்றும் RID துணைத் தலைவரான சங்வி, பெரிய கனவுகளைக் காண்பவரான சேகர் (மேத்தா) 2025க்குள் இந்தியாவை முழு எழுத்தறிவு பெறச்செய்யும் ஓர் இலக்கை அமைத்துள்ளதாகச் சொன்னார். ''இது கடினமானதுதான், ஆனால், சாத்தியமானது. நீங்கள் ஒரு போர் நடத்தவேண்டுமானால், எழுத்தறிவின்மைக்கு எதிராகப் போர் நடத்துங்கள் என்று மகாத்மா காந்தி தெரிவித்துள்ளார். இந்தியாவின் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் தெருவிலும் நாம் அதைச் செய்வோம்.''

மாவட்டங்களில் ஆளுநர்கள் எல்லாவற்றையும் தூண்டும் போது, நீங்கள் சங்கங்களுக்கு வழிகாட்டுவதில், இலக்குகளை அமைப்பதில் உறுதியாக இருங்கள்; நீங்கள் இலக்குகளை அமைக்கா விட்டால், குறிப்பிடத்தக்க எதையும் சாதிக்க இயலாது.''

ஆஷா கிரணுக்கான இலக்கு அமைத்தல் பயிற்சியின்போது, மாவட்டங்கள் 15,000 குழந்தைகளை மீண்டும் பள்ளிக்கு அனுப்பவேண்டும் என்ற ஓர் இலக்குடன் அவர் பேசத் தொடங்கினார், இது மிகவும் குறைவு என்று பல DGக்கள் குறிப்பிட்டார் கள். ஒவ்வொரு மாவட்டமும் இந்த ரோட்டரி ஆண்டின்போது 1,000 குழந்தைகளை மீண்டும் பள்ளிக்கு அனுப்புவார்கள் என்றார்.

RI இயக்குநர் பரத் பான்ட்யா இதுபற்றிப் பேசியபோது, முழு எழுத்தறிவு என்ற பெரிய கனவை எட்டு ஆண்டுகளுக்கு முன் PRIP கல்யாண் பேனர்ஜி உருவாக்கினார், இந்தத் தொலைநோக்கை நிறை வேற்ற வேண்டும் என்பதை மேத்தா தன்னுடைய திட்டமாகக் கொண்டுள்ளார். TEACH என்பதன் ஐந்து அம்சங்களைப்பற்றிய ஒரு விரிவான சமர்ப்பித்தலை நிகழ்த்திய அவர், சங்கங்களும் மாவட்டங்களும் RILM தொகுதியில் உள்ளூர் மொழிகளைச் சேர்க்க வேண்டும்,



RID *பரத் பாண்ட்யா ரோட்டரியின் 'ஆரோக்கியம்' குழுவினருடன்.*

இதில் 90 சதவிகிதம் அனிமேஷன் இருப்பதை உறுதிசெய்யவேண்டும் என்றார். காரணம், இது குழந்தைகளை ஈர்த்துப் பங்குபெறச் செய்கிறது, அவர்களுக்கு மேம்பட்ட நினை வாற்றல், புரிந்து கொள்ளல், கவனத்தை வழங்கி உதவுகிறது. இதனால், இந்தத் தொகுதிகளைக் கற்பிப்பது இன்னும் எளிதாக இருக்கிறது என்று ஆசிரியர்களும் சொல்கிறார்கள்."

மேத்தா, பான்ட்யா இருவரும் அறிக்கையிடலுடைய முக்கியத்து வத்தை வலியுறுத்தினார்கள்; TEACH திட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பல சங்கங்கள் சிறந்தமுறையில் பணியாற்றிவருகிறார்கள், ஆனால், இது மைய RILM இணையத்தளத் தில் மேம்படுத்தப்படாவிட்டால், ரோட்டரி செய்கிற பணியின் ஒட்டுமொத்தத் தாக்கத்தை அரசு, பெருநிறுவன மற்றும் பிற கூட்டணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள இயலாது.

உலகில் 68.4 மில்லியன் அகதிகள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது, ''இவர்களில் பெரும் பாலானவர்கள் குறைந்த எழுத்தறிவு நிலைகளைக் கொண்ட நாடுகளிலிருந்து வருகிறவர்கள். உலகப் பொருளாதாரத்துக்கு வன்முறையுடைய செலவு, 14.7 ட்ரில்லியன் என்று சொல்லப் படுகிறது.''

கல்வி கற்ற பெண்களுடைய எண்ணிக்கை அதிகரித்தால், இந்தியாவின் எதிர்காலத்தை மாற்றக்கூடிய மாற்றமாக அது இருக்கும், என்றார் பாண்ட்யா.

இந்தத் திட்டத்தில் CSR நிதிகள் உண்மையாகப் பணியாற்றும் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் இயக்குநர் பாண்ட்யா. ஏனெனில், சிறுவர் கல்வி என்பது, எல்லாருடைய இதயங்களுக்கும் பிடித்த ஒரு பகுதி. 106 மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்கிய RC பெங்களூர், RID 3190ஐ அவர் பாராட்டினார். சிந்தித்துப்பாருங்கள், இந்தச் சங்கம் தன்னந்தனியாக இவ்வளவு சிறந்த, பாராட்டத்தக்க பணியைச் செய்திருக்கிறது. சேகர், நான் இருவரும் இப்பள்ளிகளுக்குச் சென்றுள்ளோம். இவற்றால் 16,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பலன்பெறுகிறார்கள். இதற்காகப் பன்னாட்டு நல்கைகளின் வழியாக எந்த நிதியையும் பெறாமல், இந்தச் சங்கமே இதைச் செய்துள்ளது; அது ஒரு மிகப்பெரிய சாதனை.''

எந்தக் குழுவோ மாவட்டமோ ஒரு பள்ளி நூலகத்தை அமைக்க விரும்பினால், RILMஐ தொடர்பு கொள்ளவேண்டும் என்றார். அந்த நூலகத்துக்காக நூல்களைப் பெரிய தள்ளுபடியில் பெறுவதற்கு RILM உதவும். அத்துடன், பள்ளிகளைப் புதுப்பிக்கும்போது சிமென்ட், குழாய்கள், இரும்பு, பெயின்ட், தூய்மைப்பொருட்கள், பள்ளி அமர்பொருட்கள் போன்றவற்றைக் கையாளும் பெருநிறுவனங்களுடன் தொடர்புகளை உண்டாக்கிக் கொண்டவர்கள் RILMக்குத் தெரிவிக்கவேண்டும்; ஏனெனில், பெரிய அளவு ஆணைகளுக்கு மிகப்பெரிய தள்ளுபடிகளைப் பெறலாம்.■

# Asha Kiran Re-Ignited

**38 District Governors from India have pledged to send 20,000 children back to school.**



*You also can...*

**1 Donate**
Sponsor a child by donating Rs. 2,500/-

**2 Nurture**
RILM to enroll a child at an intermediary center and send him/her back to school

**3 Care**
Track your child's progress online at rotaryteach.org/myashakiranchild

Rotary India Literacy Mission

For program related query mail to **childdevelopment@rotaryteach.org**
For donation related query mail to **admin@rotaryteach.org**
**www.rotaryteach.org | 033-2486 3434/ 70031 48401**

# கங்கையை துாய்மையாக்க ஓர் ஓட்டம்

ரோட்டரி செய்திக்குழு



**வலதிலிருந்து:** DG *தீபக் குப்தா,* RIPN *சேகர் மேத்தா,* PDGs *ரமேஷ் அகர்வால், ஷரத் ஜெயின் மற்றும்* DGN *அஷோக் அகர்வால்.*

RIPN சேகர் மேத்தா அண்மையில் 'பிரம்மாண்ட கங்கை ஓட்டம்' என்பதை துவக்கி வைத்து அதில் கலந்து கொண்டார். தண்ணீர் சேமிப்பு மற்றும் ஆறு புதுப்பிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மத்திய ஜல் சக்தி துறையின் கீழ் (National Mission for Clean Ganga) பரிசுத்த கங்கை தேசிய திட்டம் ஏற்பாடு செய்த முயற்சியே இது.

இந்த திட்டத்தில், 2,000 ரொட்டேரியன்கள், ரோட்டராக்டர்கள் மற்றும் இன்டரேக்டர்கள் உள்ளிட்ட 16,000 பங்கேற்பாளர்கள் பல்வேறு வகையினராக பிரிக்கப் பட்டு 21 கி.மீ, 10 கி.மீ, 5 கி.மீ அல்லது 2 கி.மீ ஓட்டத்தில் ஜவகர்லால் நேரு அரங்கில் பங்கேற்றனர். மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் கிரென் ரிஜிஜு, ஜல் சக்தி அமைச்சர் ரத்தன் லால் கட்டாரியா, இந்த ஓட்டத்தில் மற்ற பல அரசு அதிகாரிகளுடன் பங்கு கொண்டனர்.



**இடதிலிருந்து:** NMCG *இயக்குனர் ராஜீவ் ரஞ்சன் மிஷ்ரா,* RIPN *சேகர் மேத்தா,* PDG *ரமேஷ் அகர்வால், மத்திய நீர்துறை மற்றும் நதிகள் புத்துயிர்ப்பு துறை செயலாளர்* U P *சிங்,* DG *தீபக் குப்தா,* PDG *ஷரத் ஜெயின் மற்றும்* DGN *அஷோக் அகர்வால்.*

ரோட்டரி லோகோவுடன் கூடிய டீ ஷர்ட்டுகளை பங்கேற்பாளர்களுக்கு டெல்லி அசோகா ரோட்டரி கிளப், RID 3012, அளித்தது.

அப்போதைய WinS உலகளாவிய தலைவர் PRID சுஷில் குப்தா மற்றும் PRID P T பிரபாகர் NMCGயுடன், கங்கை மற்றும் பிற ஆறுகளை மிதமிஞ்சிய மாசுவிலிருந்து காப்பாற்றும் அரசின் திட்டத்துக்கு ஆதரவாக,ஒரு புரிதல் ஒப்பந்தத்தில் 2017ம் ஆண்டு மேற்கொண்டதிலிருந்து ரோட்டரி, 'பரிசுத்த கங்கை' திட்டத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது.■

Rotary PEOPLE OF ACTION

# கிராமப்புறங்களில் இதயங்களைச் சீராக்க உதவும் ரோட்டரி

ரஷீதா பகத்

1999ல் தில்லி AIIMSன் நான்கு இளம், லட்சியவாத மருத்துவர்கள் சத்திஸ்கரில் உள்ள பிலாஸ்பூருக்கு வந்தார்கள். அவர்களுடைய நோக்கம், பிலாஸ்பூரிலிருந்து 30கிமீ தொலைவிலுள்ள, பல பழங்குடிக் கிராமங்களைக் கொண்டுள்ள அசனக்மார் காட்டுப் பகுதியில் மருத்துவப் பராமரிப்புக்கான ஒரு கிராமப்புற மையத்தை அமைப்பது. அவர்கள் சிறிது நிலத்தைக் குத்தகைக்கு எடுத்தார்கள், பிலாஸ்பூருக்கும் அசனக்மாருக்கும் நடுவிலுள்ள கனியாரி என்ற கிராமத்தில் ஒரு மருத்துவமனையைக் கட்டினார்கள், அதற்காக, ஜன ஸ்வஸ்த்ய சஹயோக் (JSS) என்ற ஓர் NGOவை அமைத்தார்கள். இந்த அமைப்பின் முதன்மை நோக்கம், நலிந்தோருக்கான ஏற்கத்தக்க மருத்துவ வசதிகள் இல்லாத ஒரு பகுதியில், மிகவும் கட்டுப்படியாகக்கூடிய விலையில் தரமான நலப் பராமரிப்பை வழங்குவது. இந்தக் குழுவின் தலைவர் Dr ராமன் கடாரியா சிறுவர் நலன், இதய அறுவைச்சிகிச்சை மருத்துவர்.

JSS அமைப்பு, பல நலப் பராமரிப்புச் சவால்களைக் கொண்ட ஒரு பகுதியில், வசதியில்லாத மக்களுடைய சமூக மற்றும் நலப் பராமரிப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மதிப்புமிக்க சேவை ஆற்றிவருகிறது என்கிறார் பிலாஸ்பூர் மிட்டவுன் ரோட்டரி சங்கம், RID 3261ன் முன்னாள் தலைவர் Dr தேவேந்திர சிங். இவர் அப்போலோ மருத்துவமனையில் மூத்த ஆலோசகரான இரைப்பை, குடலியல் மருத்துவராவார். JSS தொடர்ந்து வெளிநோயாளிகள் மருந்தகங்களை நடத்துகிறது, மிகவும் ஏற்கத்தக்க ஒரு கட்டணத்துடன் உள்நோயாளிச் சேவைகளையும் வழங்குகிறது என்கிறார் இவர். JSSல் OP நோயாளிக்கான கட்டணம் வெறும் ரூ.10 தான்; உள்நோயாளிகள் பராமரிப்புக்கான கட்டணம், மிக அதிக மானியத்துடன் குறைக்கப் பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய சொந்த வளங்களை உருவாக்கி முதன்மை மற்றும் இரண்டாம் நிலை நலப்பராமரிப்பை வழங்குகிறார்கள், அதேசமயம், நோயாளிகளுக்கு மூன்றாம் நிலை நலப் பராமரிப்பு தேவைப்படும்போது, அதற்கான வசதிகள் இல்லாததால் மருத்துவர்கள் மிகவும் ஏமாற்றமடைகிறார்கள்.

இதை மேலும் சிக்கலாக்கிய ஒரு விஷயம், மருத்துவர்களுடைய சனிக் கிழமை இதய மருந்தகத்துக்குப் பெரும் எண்ணிக்கையிலான குழந்தைகள் வாதம் சார்ந்த இதய நோயுடன் (RHD) வந்தார்கள். RHDயானது, முதலில் தொண்டையைப் பாதிக்கிற ஒரு நோய்த்தொற்றால் உண்டாகிறது என்று விளக்குகிறார் Dr சிங். இது முடக்கிப்போடுகிற ஓர் இதயப் பிரச்னையாகும்; இது சில குறிப்பிட்ட இதய வால்வுகளைக் குறிவைக்கிறது; படிப்படியாகச் சேதத்தை உண்டாக்குகிறது, இதய நெருக்கடியை உண்டாக்கி அதனைச் செயலிழக்கச் செய்கிறது, இளவயதில் மரணத்துக்கு வழிவகுக்கிறது. பாதிக்கப்பட்ட நோயாளிகள் பலருக்கு, ஆதரவான சிகிச்சையின்மூலம் போதுமான அளவு பலன் கிடைத்தது. ஆனால், பலருக்கு வளர்ந்த நிலை இதய நோய் இருந்ததை Dr கடாரியா கண்டறிந்தார்; இவர்களுக்கு அவசர இதய அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டது'' என்கிறார் Dr சிங்.

### வால்வ் மாற்றல்

இதுபோன்ற நோயாளிகளுக்கு ஒற்றை அல்லது இரட்டை வால்வ்களை அமைக்க வேண்டியிருந்தது; அந்த இதய அறுவைச் சிகிச்சைக் குச் செலவழிக்கும் அளவுக்கு அவர்களுடைய பெற்றோரிடம் பணம் இல்லை. இவர்களில் பலர் விளிம்புநிலை விவசாயிகள், அல்லது அன்றாடக் கூலிவேலைக்குச் செல் கிறவர்கள்; அநேகமாக இவர்களில்



Dr *ராமன் கட்டாரியா, ஷரத் ஸக்சேனா,* Dr *தேவேந்திர சிங் மற்றும் சுஷ்மித் பயனாளிகளுடன்.*

எல்லாரும் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள்.''

JSS தலைவர் Dr கடாரியா இந்தப் பிரச்னையைப்பற்றி Dr சிங்கிடம் பேசியபோது, அவர் சில இந்திய மருத்துவர்களைத் தொடர்புகொண்டார், ஒரு TRF நல்கை சாத்தியமா என்று ஆராயப்பட்டது. தொடர்ச்சியான முயற்சிகளால், 2013முதல் 2016வரை $45,000 மதிப்புள்ள பொருத்தமான ஒரு உதவித் திட்டம் சாத்தியமானது. இதை RC ட்ரான்ஸ் அர்பா பிலாஸ்பூர் (அதன்பிறகு மூடப்பட்டுவிட்டது) மற்றும் RC ஒர்லான்டோ ஈவினிங் இணைந்து அமல்படுத்தினார்கள். பன்னாட்டுக் கூட்டு நிறுவனங்கள் சங்கத்துடைய முன்னாள் தலைவரான டாக்டர் கருணா சபர்வால் ஒட்டுமொத்தச் செயல்முறையையும் நடத்துவதில் மிகவும் ஆதரவாக இருந்தார். இந்தப் பணத்தைக் கொண்டு, இப்பகுதியிலுள்ள நலிந்த RHD நோயாளிகளுக்கு நாங்கள் 19 இதய அறுவைச்சிகிச்சைகளை நிகழ்த்தினோம் என்கிறார் அவர்.

இந்தப் பகுதியில் இதுபோன்ற அறுவைச்சிகிச்சைகளுக்கான தேவை இன்னும் அதிகமாக இருந்தது; வளர்ந்தநிலை இதயப் பிரச்னை கொண்ட பல நோயாளிகளுக்கு JSSஆல் உதவ இயலவில்லை. துடிப்பான ரோட்டரியன்களைக் கொண்ட அதே குழுவை நான் தொடர்புகொண்டேன்: 2017ன் தொடக்கத்தில், லேக் ப்யூனா விஸ்டா, ஃப்ளோரிடா RCயின் RI அறக்கட்டளைத் தலைவரான கருணா சபர்வால் மற்றும் ஃப்ளோரிடாவிலுள்ள ஜாக்ஸன்வில்லெயைச் சேர்ந்த ஒரு சிறந்த இந்திய வம்சாவளி இதயச் சிகிச்சை மருத்துவரான Dr சதீஷ் கோயல். அவர்கள் விண்ணப்பச் செயல்முறையின்போது மிகவும் ஆதரவாக இருந்தார்கள். எங்களுடைய பணியால் இன்னொரு பன்னாட்டு உதவி கிடைத்தது. பலனளிக்கும் குழு, RC பிலாஸ்பூர் மிட்டவுன், மற்றும் பன்னாட்டு ஆதரவாளர், RC லேக் ப்யூனா விஸ்டா, ஃப்ளோரிடா, RID 6980. இந்தமுறை, $72,000 உதவி கிடைத்தது. இந்த உதவிப் பணத்தைக் கொண்டு நாங்கள் 50 இதய அறுவைச்சிகிச்சைகளைச் செய்யத் திட்டமிட்டோம். இதில் 37 இதய அறுவைச்சிகிச்சைகள் செய்யப்பட்டு விட்டன என்கிறார் Dr சிங்.

JSS மருத்துவரான Dr Y S பரிஹார் மற்றும் அவருடைய குழுவினருடைய தலைமையில் இயங்கும் வார இதய நலன் மருந்தகத்திலிருந்து நோயாளிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். Dr சதீஷ் கோயல் தன்னுடைய ஜாக்ஸன்வில்லெ அலுவலகத்தில் இருந்தபடி ஸ்கைப்வழியாக அவர்களை இன்னொரு நேர்முகத் தேர்வு எடுக்கிறார்; எக்கோ கார்டியோக்ராஃபி பரிசோதனையை மீண்டும் நிகழ்த்துகிறார். நிறைவான தேர்ந்தெடுத்தல் மற்றும் ஆலோசனை வழங்கலுக்குப்பிறகு, நோயாளிகள் JSS தன்னார்வலர்களுடன் ராய்பூரிலுள்ள சங்கல்ப் மருத்துவமனைக்கு அனுப்பப்படுகிறார்கள். இங்கு, இந்தப் பகுதியின் புகழ்பெற்ற இதய அறுவைச் சிகிச்சை மருத்துவரான Dr நிஷாந்த் சன்டெல் அறுவைச்சிகிச்சைகளை நடத்துகிறார், இதற்கான கட்டணம், மானியம் நீங்கலாக ரூ.1 லட்சத்தை விடக் குறைவு.

பலன்பெற்றவர்களில் ஒருவர் 16-வயது கௌரி. நெஞ்சுத்துடிப்புகள், மூச்சுத் திணறலால் இவர் பள்ளியிலிருந்து நிற்கவேண்டியிருந்தது. அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு, அவர் நன்றாக இருக்கிறார். இப்போது, நான்காண்டு இடைவெளிக்குப்பிறகு அவர் மீண்டும் பள்ளியில் சேரப்போகிறார், என்கிறார் டாக்டர் சிங்.

பிரகலாத், 17, ஒரு கூலித் தொழிலாளியுடைய மகன், காட்டுப் பகுதிக்குள் நடத்திய ஒரு தொலைதூர மருத்துவ முகாம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவருக்கு வளர்ந்தநிலை RHD இருந்தது, இரட்டை வால்வ்களை மாற்றவேண்டியிருந்தது, ஆனால், மிகுந்த வறுமையால் அவரால் அறுவைச்சிகிச்சை செய்துகொள்ள இயலவில்லை. எங்களுடைய குழுவினர் அவருடைய குடும்பத்தினருக்கு ஆலோசனை வழங்கினார்கள், அனைத்தையும் ரோட்டரியும் JSS-ம் கவனித்துக்கொள்ளும் என்று உறுதி வழங்கினார்கள், அதன்பிறகு, அவருடைய குடும்பத்தினர் அறுவைச்சிகிச்சைக்கு ஒப்புக்கொண்டார்கள். இப்போது அவர் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டார். ஆனால், இதில் ஒரு சோகம், இரு வாரங்களுக்குமுன்னால் அவருடைய தந்தை இறந்துவிட்டார் என்கிறார் Dr சிங்.

## இரு TRF நல்கைகள்

நாங்கள் இந்தத் திட்டத்தை அடுத்த ஆறு மாதங்களில் நிறைவுசெய்வோம். இந்த இரு நல்கைகளின்மூலம், நோயாளிகளுடைய முகங்களில் உண்மையாகச் சிரிப்பைக் கொண்டுவந்துள்ளது ரோட்டரி, அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையை வழங்கியுள்ளது. அத்துடன், இந்த நோயாளிகளுக்கு பயோப்ரோஸ்தெடிக் வால்வ்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதால், அவர்கள் இதன் தொடர்ச்சியான உறைவுத்தடுப்புச் சிகிச்சையை எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. அவர்கள் JSS மருந்தகங்களில் தொடர்ந்து கவனிக்கப்படுகிறார்கள்; அனைவரும் நலமாக இருக்கிறார்கள், இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி விட்டார்கள், என்று தொடர்ந்து சொல்கிறார் டாக்டர் சிங்.

TRF திட்டத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி Dr சிங் குறிப்பிட்டது, Dr கடாரியா என்னைத் தொடர்பு கொண்ட போது, USலிருந்த சில பொதுவான நண்பர்களை நான் தொடர்புகொண்டேன். அவர்கள் உதவ விரும்பினார்கள், ஆனால், நம்பகமான ஓர் அமைப்பின்வழியாகமட்டுமே உதவ இயலும் என்றார்கள். அங்கு தான் ரோட்டரி எங்களுக்கு உதவியது. எங்களுக்கு உதவுவோர் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளார்கள். இரண்டு வாரங்களுக்குமுன்னால், மனிதக் கடத்தல் தொடர்பான ஓர் அமெரிக்கத் திட்டத்துக்கான ஒரு பன்னாட்டு நல்கைக்கு ஆதரவளிக்குமாறு அவர்கள் எங்களைக் கோரினார்கள்; இந்த நல்கையைப் பயன்படுத்தி, அமெரிக்கக் குழந்தைகளுக்கு மனிதக் கடத்தலுடைய ஆபத்துகளைப்பற்றித் தெரிவிக்கப்படும். இது ஒரு பல-மாவட்டத் திட்டமாகும், இதற்கு நாங்கள் ஆதரவளிப்போம், அவர்களுடைய பணியைத் தணிக்கை செய்யவுள்ளோம்!'' ■

Rotary PEOPLE OF ACTION

# கை கொடுக்கும் கண்ணம்மா!

V முத்துக்குமரன்

வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், மாதவிடாய் காலத்தில் சுகாதாரத்தைப் பேண முடியாத காரணத்தால் அந்த மூன்று நாட்களில் பள்ளிக்குச் செல்வதில்லை. சிலர் பள்ளிக்குச் செல்வதையே நிறுத்திவிடுகின்றனர். இவர்களின் துன்பநிலையைத் தெரிந்து கொண்ட சென்னை வடக்கு (3232) ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர் சுகிர்தா நிஷாந்த், பெரும் முயற்சியில் இவர்களுக்காகவே கண்ணம்மா என்னும் திட்டத்தை கடந்த 2018-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் செயல்படுத்தினார்.

திட்ட அமைப்பாளர் சுகிர்தா நிஷாந்த், 12 முதல் 16 வயதுக்குட் பட்ட வயதுக்கு வந்த மாணவிகளுடன் பேசிய போது பல அதிர்ச்சித் தகவல்கள் தெரியவந்தன.

பாவம், இந்த மாணவிகள். மாதவிடாய் காலத்தில் சானிடரி நாப்கின் வாங்க முடியாத காரணத்தால் பழைய துணி, சாம்பல், சருகுகள், உமி போன்றவற்றை சுகாதாரமற்ற முறையில் பயன்படுத்தி வந்துள்ளனர். அதாவது மாதத்தில் 5 நாட்கள், வருடத்துக்கு 50 நாட்கள் அவர்கள் பள்ளிக்குச்செல்வதை தவிர்க்கின்றனர். சிலர் படிப்படியாக பள்ளிக்குச் செல்வதையே நிறுத்திவிடுகின்றனர்.

இப்படி சுகாதாரமற்ற முறைகளை பின்பற்றுவதால் அவர்களின் சிறுநீர் பாதையில் நோய்த் தொற்று ஏற்படும். இன்னும் சொல்லப்போனால் கருப்பை பாதிப்பும் புற்றுநோயும் ஏற்படும் அபாயம் உள்ளது. மாதவிடாய் காலத்தில் சுகாதாரமான நாப்கின் பேடுகளை வாங்கிப் பயன்படுத்த இயலாத காரணத்தால் மாநில அளவில் கேரம் போட்டியில் சிறந்து விளங்கிய மாணவி ஒருவர், தேசிய போட்டியில் பங்கேற்க முடியாமல் போய்விட்டது. நன்கு படிக்கும் மாணவி தேர்வு நேரத்தில் மாதவிடாய் வந்ததால் சுகாதாரத்தை கடைபிடிக்க முடியாமல் மன உளைச்சலில் சரியாக படிக்க முடியவில்லை. இப்படி பல உதாரணங்களைச் சொல்லலாம்.

இதற்காகவே கண்ணம்மா திட்டத்தைத் தொடங்கி 1500 மாணவிகளுக்கு இலவசமாக சானிடரி நாப்கின் வழங்கியதுடன் மாதவிடாய் காலத்தில் சுகாதாரத்தை பேணும் வழிமுறைகள் குறித்து அவர்களுக்கு நிபுணர்கள் மற்றும் ரோட்டரி



*RC மெட்ராஸ் நார்த் தலைவர் M கணபதி, RID கமல் சங்வி, DG G சந்திரமோகன், PDG G ஒளிவண்ணன், சட்ட மன்ற உறுப்பினர் R நடராஜ், PRID P T பிரபாகர், ப.ஜ.க. பொதுச் செயலாளர் வானதி ஸ்ரீனிவாசன் மற்றும் திட்டத் தலைவர் சுகிர்த்தா நிஷாந்த்.*

உறுப்பினர்கள் மூலம் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

அடுத்த கட்டமாக வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் பெண்கள், சாலை ஓரங்களில் வசிக்கும் பெண்களைத் தேடி கண்டுபிடித்து அவர்களுக்கு கண்ணம்மா சானிடரி நாப்கின்கள் வழங்கும் பெரிய திட்டத்தையும் தொடங்கியுள்ளோம். எங்களது இத்திட்டத்தின் கீழ் பேடு மேன் அருணாசலம் முருகானந்தம் என்பவரிடம் சானிடரி பேடுகள் தயாரிக்கும் இயந்திரம் வாங்க ரூ.3.5 லட்சத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார் சத்யபாமா அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் வேந்தர் மரியஜீனா ஜான்சன். Dr MGR ஜானகி மகளிர் கல்லூரித் தலைவரும் ரோட்டேரியனு மான குமார் ராஜேந்திரன், சானிடரி நாப்கின் தயாரிக்கும் தொழில் பயிற்சி மையத்துக்கு தேவையான இடத்தை தந்து உதவியுள்ளார்.

ஆரம்பக்கட்டத்தில் இந்த மையம் மூலம் ஒரு மாதத்துக்கு 40,000 சானிடரி நாப்கின் பேடுகள்



RID *கமல் சங்வி மற்றும் சுகிர்தா நிஷாந்த் காது கேளாதோருடன் ரோட்டரி தொழிற்பயிற்சிக் கூடத்தில்.*



தயாரிக்கப்படும். இவற்றில் 8,000 பேடுகள் இலசமாக விநியோகிக்கப் படும். எஞ்சிய 32,000 பேடுகள் ஒரு பேக் ரூ.25 என்ற குறைந்த விலைக்கு விற்கப்படும் எனத் தெரிவித்தார்.

## சிறப்புப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

Dr MGR ஜானகி கலை அறிவியல் கல்லூரியில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி மையத்தின் திறப்பு விழாவில் பங்கேற்ற ரோட்டரி இயக்குநர் கமல் சங்வி, இம்மையத்தில் காதுகேளாத, வாய் பேசமுடியாத 6 பெண்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவை அளித்தார்.

இதுபோன்று இன்னும் இரண்டு மையங்கள் தொடங்க வேண்டும் என்பது என ஆசை. வடக்கு ரோட்டரி சங்கம் போலவே சென்னையில் உள்ள வேறு ரோட்டரி சங்கங்கள் இதற்கு முன்வந்தால் மொத்த செலவில் 50 சதவீதத்தை ரோட்டரி மாவட்டம் 3250 ஏற்கத் தயாராக உள்ளது என்றும் சங்வி குறிப்பிட்டார்.

ரோட்டரி முன்னாள் இயக்குநர் P T பிரபாகர் நிகழ்ச்சியில் பேசுகையில் மாதவிடாய் காலத்தில் சுகாதாரம் என்ற திட்டம் குளோபல் வின்ஸ் திட்டத்தின் ஒருபகுதியாகும் என்று குறிப்பிட்ட அவர், தாம் இதன் தலைவராக இருப்பதாகவும் சங்வி தொடர்பு இயக்குநராகவும் இருப்பதாகத் தெரிவித்தார். சென்னையில் மட்டும் மாதம் 100 டன் நாப்கின் பேடுகள் கழிவுகளாக சேகரிக்கப்படுகின்றன என்றும், இதன் தேவையை கருத்தில் கொண்டு சுற்றுச்சூழலுக்கு பாது காப்பான அதேசமயம் குறைந்த விலையிலான நாப்கின் பேடுகளை தயாரிப்பது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

கண்ணம்மா திட்டத்தை செயல்படுத்த நாடு முழுவதும் ரோட்டரி மூலம் 100 மையங்கள் ஏற்படுத்தப்பட்டு மாதவிடாய் காலத்தில் பெண்கள் சுகாதாரத்தை பேணுவது எப்படி என்று விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று ரோட்டரி இயக்குநர் சங்வியை பிரபாகர் கேட்டுக்கொண்டார். Dr MGR ஜானகி கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டுள்ள சானிடரி நாப்கின் தயாரிப்பு மையம் போல் சென்னையில் உள்ள இதர கல்லூரிகளிலும் நிறுவ ரோட்டரி சங்கம் முன்வரவேண்டும் என்று ரோட்டரி மாவட்டம் 3232-இன் மாவட்ட ஆளுநர் G சந்திரமோகன் வலியுறுத்தினார்.

மாவட்ட முன்னாள் ஆளுநரும் திட்ட ஆலோசகருமான G ஒளிவண்ணன், சென்னை, வடக்கு ரோட்டரி சங்கத்தின் தலைவர் N கணபதி மந்திரம், செயலர் ஜான் பிரெடரிக், மாநில பா.ஜ.க. பொதுச் செயலாளர் வானதி சீனிவாசன், ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரியும், சட்ட மன்ற உறுப்பினருமான R நடராஜ் ஆகியோரும் பங்கேற்றனர்.

புகைப்படங்கள்: V முத்துக்குமரன்

# பெட்டி வடிவில் ஓர் உதவி

ரோட்டரி செய்திக்குழு

இந்த ஆண்டின் ஆகஸ்ட் தொடக்கத்தில் வடக்குக் கர்நாடகத்தில் கனமழை பொழிந்தது, இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. ஹுப்ளி-தார்வாடைச் சுற்றியுள்ள பகுதிகளில், கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக அதிக அளவு மழைப் பொழிவு இருந்ததாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதில் அல்னவர் வட்டம் மோசமாகப் பாதிக்கப்பட்டது; அங்கு பெரும்பாலான கிராமப்புற வீடுகள் நீரால் அழிக்கப்பட்டிருந்தன.



PDG *கணேஷ் பட் மற்றும்* DG *கிரீஷ் மசூர்கர் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிப்பெட்டிகளை வழங்குகின்றனர்.*

சிதைந்த வீடுகளைக் கண்டு நாங்கள் வருந்தினோம்; அங்குள்ள மக்கள் தங்களுடைய உயிரைத் தவிர அனைத்தையும் இழந்துவிட்டார்கள் என்றே சொல்லலாம். அவர்களுடைய இருண்ட முகங்கள் எங்கள் இதயத்தில் கனம் சேர்த்தன என்றார் PDG கணேஷ் பட், RID 3170. மாவட்ட அலுவலகம் உடனே செயலி'ல் இறங்கி, DG Dr கிரீஷ் மசூர்கர் தலைமையில் "ரோட்டரி ஹுப்ளி-தார்வாட் இயற்கைப் பேரழிவு நிவாரணச் செயற்படை"யை அமைத்தது. "ஒவ்வொரு வரும் ஒருவரைத் தத்தெடுப்போம்" என்ற வாசகத்தின்வழியாக, மாவட்ட ரோட்டரியன்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டார்கள். ஹுப்ளி, தார்வாட், கோகக் பகுதி ரோட்டரியன்கள் இந்த அழைப்பை ஏற்றார்கள்; பணம், பொருளைத் திரட்டிக் கிராமவாசிகளுக்கு உதவினார்கள்.



PDG *பட் மற்றும்* DG *மசூர்கர் வெள்ளத்தால் இடிந்து விழுந்த வீடு ஒன்றை பார்வையிடுகின்றனர்.*

RC கல்கத்தா மகாநகர், RID 3291 உடன் நாங்கள் 100 வீட்டுச் சாமான்கள் உள்ள பெட்டிகளை வழங்கக் கேட்டுக்கொண்டோம். நான்கு நாட்களுக்குள் அவற்றைப் பெற்றோம் என்றார். உள்ளூர் மாவட்ட ஆணையர், உதவி ஆணையர், வட்டாட்சியாளர் மற்றும் நகரத் திட்டமிடல் CEO ஆகியோருடைய துணையுடன், அல்னவர், கோகக் கிராமங்களில் தேவையுள்ள குடும்பங்கள் அடையாளம் காணப் பட்டு இப்பெட்டிகள் வழங்கப்பட்டன.

பள்ளி செல்லும் குழந்தைகளுடைய புத்தகங்கள், பைகளை வெள்ள நீர் அழித்திருந்தது. ஆகவே, பள்ளிக்குத் திரும்புதல் என்ற வாசகத்துடன் நாங்கள் ரொட்டேரியன்களிடமிருந்து சீருடைகள், காலணிகள், எழுதுபொருட்கள், பள்ளிப் பைகளைத் திரட்டி, அவற்றை இந்த கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கு வழங்கி னோம், என்றார் பட்.■

# RI தெற்காசிய அலுவலக அறிவிப்புகள்

தெற்கு ஆசிய RI அலுவலகத்தின் CSR குழு, இந்திய ரோட்டரி அறக்கட்டளையை, ரோட்டரியின் போலியோ நீக்க முயற்சி களுக்காக UBS மன்றங்களுக்குப் பரிந்துரைத்துள்ளது. ஆகஸ்ட் மாதம் புது தில்லியில் நடைபெற்ற பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு மாநாடு மற்றும் விருதுகள் 2019ல் ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா) “அதிக அர்ப்பணிப்புணர்வுள்ள NGO” மற்றும் “ஆண்டின் சிறந்த NGO” ஆகிய இரு பிரிவுகளில் இரு விருதுகளை வென்றுள்ளது என்பதைப் பகிர்ந்துகொள்வதில் மகிழ்கிறோம்.

**2019–20 AKS உறுப்பினர்கள்** - நிரவ் ஷா மற்றும் தேவினா (RID 3141) மற்றும் A K நடேசன் மற்றும் பார்வதி (RID 2982).

**நிதி திரட்டல் இலக்கு**

2019–20 க்கான RFIன் நிதி திரட்டல் இலக்கு, $30 மில்லியன். இவ்வாண்டு, ரோட்டரி இந்தியா 100வது ஆண்டை நிறைவுசெய்யும். இந்த மைல்கல் ஆண்டைக் கொண்டாடுவதற்காக, மன்றங்கள் சமூகங்களில் தாக்கம் மிகுந்த திட்டங்களை நிறைவேற்றவேண்டும், இந்த இலக்கைத் தாண்டும் அளவுக்கு நிதி திரட்டவேண்டும் என்று ஊக்கப்படுத்தப்படுகின்றன.

**தனிநபர் தரவுகளுக்கான ரோட்டரியின் தனியுரிமை மற்றும் பாதுகாப்புக் கொள்கை**

RI மற்றும் TRF (தனியாக மற்றும் தொகுப்பாக, ரோட்டரி) தனிநபர் தரவுகளைத் திரட்டுதல், அணுகுதல் மற்றும் சேமித்துவைத்தலைக் கட்டுப்படுத்தும் தனியுரிமைக் கொள்கை(கொள்கை)யை அமல் படுத்தியுள்ளன. தனிப்பட்ட தரவு களுடைய தனியுரிமை மற்றும் பாது காப்பைப் பராமரிப்பது ரோட்டரிக்கு மிகவும் முக்கியமானதாகும். இந்தக் கொள்கையின் நோக்கம்:

- தனிநபர் தரவுகளாக அமைபவை எவை என்பதை வரையறுப்பது
- தரவுகளை அவற்றின் நுண்ணுணர்வு அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரித்து அமைப்பது
- தனிநபர் தரவுகளைத் திரட்டுதல், அணுகுதல், பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் சேமித்தலுக்கான குறைந்த பட்சத் தேவைகளை நிறுவுதல்
- ஒரு தனிநபர் தரவுப் பாதுகாப்பு மீறலைப்பற்றிப் புகார் செய்வதற் கான செயல்முறையை அமைத்தல்
- தனிநபர் தரவுகளைப் பாதுகாக்கும் பொறுப்பு யாருடையது என்று அடையாளம் காண்பது

இந்தத் தரவுகளை அணுகக் கூடியவர்கள் இந்தக் கொள்கையை அறிந்து வைத்திருந்து இதற்கு இணங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரோட்டரியுடைய தனியுரிமைக் கொள்கை பற்றிய கூடுதல் தகவல்களை இங்கு பெறலாம்: https://my.rotary.org/en/privacy-policy

**FCRA-பதிவுசெய்த ரோட்டரி அமைப்புகள்:** இதற்குமுன், கொடையாளிகளுடைய தாராள மனப்பான்மை காரணமாக RF(I)யிடம் போதுமான அளவு INR நிதிகள் இருந்தன, இதன்மூலம் TRF நல்கைகளை RF(I)-INR கணக்கிலிருந்து வழங்க இயன்றது. 2018–19ல், முந்தைய ஆண்டான 2017–18ல் நிதியளித்த நல்கைகளை விட அதிக நல்கைகளுக்கு நிதியளிக்கவேண்டியதாயிற்று. நாம் எதிர்பார்த்ததைவிட விரைவாக நாம் RF(I)-INR நிதிகளைச் செலவழித்து விட்டோம்.

நல்கை வழங்குதல்களுடைய எண்ணிக்கை சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு (2019–20) குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்க லாம் என்று நாம் எதிர்பார்க்கிறோம். சாத்திய முள்ள நிதி இடைவெளியைச் சரிசெய்வதற்காக, FCRA பதிவுசெய்த மாவட்டங்கள்/சங்கங்களுக்கு RF(I)-F-CRA கணக்கிலிருந்து நல்கையை வழங்க RF(I) தீர்மானித்துள்ளது.

ஆகவே, FCRAன் கீழ் பதிவு செய்துள்ள மாவட்டங்கள் மற்றும் சங்கங்கள் தங்களுடைய FCRA பதிவு மற்றும் புதுப்பித்தல் சான்றிதழ்களை ராய் ஜான்க்கு roy.john@rotary.org என்ற மின்னஞ்சல் முகவரியில் அனுப்பிவைத்துத் தாங்கள் சரியான நேரத்தில் நல்கைத் தொகைகளைப் பெறுவதை உறுதிசெய்யலாம்.

**கற்றல் மையம்:** ரோட்டரி இணையத் தளத்தில் கற்றல் மைய வசதிகளை நீங்கள் பார்த்தீர்களா? பங்கேற்பாளர் கள் இப்போது மெய்நிகர் பதக்கங் களைச் சம்பாதிக்கலாம், ஒரு பொறுப்பு அல்லது தலைப்பில் தொடர்ச்சியான பயிற்சிகளை எடுத்துக்கொள்வதற்கான ஒரு கற்றல் பாதையைப் பின்பற்றலாம்.

நீங்கள் பழைய கற்றல் மைய முகவரியைப் புத்தகக்குறியிட்டுச் சேமித்திருந்தால், இப்போது மாற்ற வேண்டும், அப்போது தான் நீங்கள் புதிய தளத்தை விரைவாக அணுக இயலும்: Rotary.org/learn.

நீங்கள் கருத்தில் கொள்ளக்கூடிய சில பயிற்சி வகுப்புகள் இதோ: இலக்குகளை அமைத்தல் மற்றும் போக்குகளைப் புரிந்து கொள்ளுதலுக்கான வீடியோ, எப்படி செய்வது கையேடுகளைக் கொண்ட ரோட்டரி சங்க மைய வளங்கள்; உறுப்பினர்களைச் சேர்த்தல் மற்றும் குழுக்களை மேம் படுத்துதலுக்கான புதிய வியூகங்களைப் பரப்பும் உறுப்பினர் பயிற்சிவகுப்புகள்.■



TRF (RISAO) *தலைவர் சஞ்சய் பர்மார், திட்டக்குழுத்தலைவர் பாவ்னா வர்மா, நிஸ்ஸான் இந்தியா* V P *அபிஷேக் மஹா பாத்ராவிடமிருந்து விருது பெறுகின்றனர்.*

Rotary PEOPLE OF ACTION

# RC உடுப்பி மணிப்பாலின் 60 ஆண்டுகள்

ஜெய்ஸ்ரீ

சரியாகப் பத்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மணிப்பாலுக்கு வருவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. ரோட்டரி என்பது, ஆற்றல் அல்லது பதவி தொடர்பானது இல்லை. மனிதகுலத்துக்கு நாம் செய்யும் சேவைதான் இங்கு முக்கியம்; இந்த 60 ஆண்டுகளில் உங்களுடைய சமூகத்தில் இப்படியொரு பெருந்தன்மையான மாற்றத்தைக் கொண்டுவந்ததற்காக, இந்தச் சங்கத்திலுள்ள ஒவ்வொரு ரொட்டேரியனை நான் வாழ்த்துகிறேன் என்றார் PRIP கல்யாண் பேனர்ஜி. RC உடுப்பி மணிப்பால், RID 3182ன் வைர விழாக் கொண்டாட்டங்களின்போது, RID 3181 மற்றும் 3182ன் முன்னாள் மற்றும் இப்போதைய ஆளுநர்கள், ரொட்டேரியன்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் மத்தியில் அவர் இவ்வாறு பேசினார். சங்கத்தில் இளம் உறுப்பினர்கள் மற்றும் பெண்களைச் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ரோட்டரியை முன் மாதிரியாகக் கொள்ளவேண்டும் என்கிற ஆசை உள்ளுக்குள் பரவியிருக்கிற இளம் உறுப்பினர்களை நாம் நாடவேண்டும். பெண்களும் விரைவாக முன்னேறு கிறார்கள், ஆண்களுடன் போட்டியிடுகிறார்கள், பொதுவாக, அவர்களை விடச் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள், என்றார்.

சிறப்பான இந்த ஆண்டின் நினைவாக, ரூ.8.8 லட்சம் மதிப்புள்ள மின்கற்றல் கருவிகளைப் பள்ளிகளுக்கும், 120 நலிந்த பெண்களுக்குத் தையல் இயந்திரங்களையும் வழங்கியது இச்சங்கம். மணிப்பாலில் உள்ள அஜீவநகரா உயர் தொடக்கப் பள்ளியில் உள்கட்டுமான வசதிகள் மேம்படுத்தப்பட்டன. நம்முடைய சங்கம் ஐந்து ஆளுநர்களை வழங்கியுள்ளது. நாம் எழுத்தறிவு மற்றும் WinS ஆகியவற்றை முன்னிறுத்துவதில் ஆர்வமாக உள்ளோம்; இரு அம்சங்களும் குழந்தைகள், சமூகத்தினர் மத்தியில் பெரிய மாற்றத்தை உண்டாக்கும் என்றார் வைர விழா சங்க தலைவர் அமித் அரவிந்த்.




*சங்கத்தின் வைர விழா கொண்டாட்டங்களை PRIP கல்யாண் பானர்ஜி, IPDG அபிநந்தன் ஷெட்டி, PDG H சாந்தாராம், IPP அமித் அரவிந்த் மற்றும் DGE ராஜாராம் பட் முன்னிலையில் துவக்கி வைத்தார்.*

நிகழ்ச்சியின் தலைவர் PDG Dr H சாந்தாராம், கடந்த பல ஆண்டுகளில் சங்கத்துடைய குறிப்பிடத்தக்க திட்டங்களைப்பற்றிப் பேசினார். மணிப்பால் கூட்டுறவுச் சங்கத்தில் கட்டப்பட்ட ரோட்டரி விளையாட்டு வளாகம் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு வரமாக உள்ளது. 2005ல், ஷிர்டி புற்றுநோய் மருத்துவமனையில் அமைக்கப்பட்ட ரோட்டரி நூற்றாண்டு மருத்துவப் பிரிவு, மணிப்பால் கஸ்தூரிபா மருத்துவக் கல்லூரியின் கண் மருத்துவப்பிரிவுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட கருவிகள், உடுப்பியிலுள்ள மாவட்ட அரசு மருத்துவமனையில் காசநோயைக் கண்டறிவதற்கான ரூ.25 லட்சம் மதிப்புள்ள மரபணு வல்லமை இயந்திரம் ஆகியவை நலப் பராமரிப்புக்காக இச்சங்கம் நிறை வேற்றிய திட்டங்களில் சில. இவற்றுடன், பள்ளிகளுக்குக் கழிப் பறைகள், தூய்மை மையங்கள், நீர்ச் சுத்திகரிப்புக் கருவிகளையும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அட்லஸ் வரைபடங்கள், அகராதிகளையும் இச்சங்கம் வழங்கியுள்ளது.



*ஊனமுற்ற பெண்மணி ஒருவருக்கு சங்க சார்பில் IPP அமித் அரவிந்த் சக்கர நாற்காலி வழங்குகிறார்.*

கேரள வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவுவதற்காகவும், ரோட்டரியின் ‘குடகை மீண்டும் கட்டமைப்போம்’ திட்டங்களுக்கும் ஒவ்வோர் உறுப்பினர்களும் பங்களித்தார்கள் என்றார் அரவிந்த்.

சங்கத்தைப் புதிய உயரங்களுக்கு வழிநடத்திச்செல்லுமாறு சங்கத் தலைவர் ராஜவர்மா அரிகா மற்றும் செயலாளர் ஸ்ரீஷா ஹெக்டே ஆகியோரைக் கேட்டுக்கொண்டார் DG B N ரமேஷ், கீதாகௌசிக் தலைவராக இருந்த போது 33 விருதுகள் வென்றதை சுட்டிக் காட்டினார். உங்கள் சங்கம் வளர்ந்தால், ரோட்டரி வளர்கிறது. திட்டத்தைத் தயாரியுங்கள், இலக்கை அமைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய இலக்கில் கவனம் செலுத்துங்கள், நீங்கள் வெல்வீர்கள் என்றார்.■

# ரொட்டேரியன் நடத்தை விதி

இதோ புதுப்பிக்கப்பட்ட ரோட்டரியன் நடத்தை விதி, இறுதி அம்சம் ஜனவரி 2019 யிலிருந்து சேர்க்கப்பட்டுள்ளது.

**ரொட்டேரியன் என்ற முறையில், நான்:**

- எனது சுய மற்றும் தொழில் வாழ்க்கையில் நேர்மையையும் உயர்ந்த நெறிமுறையையும் கடைப்பிடிப்பேன்.
- மற்றவர்களுடன் நியாயமாக நடந்து கொண்டு அவர்களையும் அவர்களின் தொழில்களையும் கௌரவத்துடன் நடத்துவேன்.
- எனது தொழில் தொடர்பான திறன்களை இவற்றுக்கு பயன்படுத்துவது: இளைஞர்களை வழிநடத்துவது, சிறப்புத் தேவைகள் எதிர்நோக்குபவர்களுக்கு உதவுவது, எனது இனத்திலும் உலகத்தில் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது.
- ரோட்டரி அல்லது பிற ரொட்டேரியன்களை இழிவாக சித்தரிக்கச் செய்யும் நடத்தைகளை தவிர்ப்பது.
- ரோட்டரி கூட்டங்களில், நிகழ்வுகளில், நடவடிக்கைகளில் துன்புறுத்தல்-இல்லா சூழ்நிலை நிலவும் வகையில் உதவுவது, சந்தேகத்துக்குள்பட்ட துன்புறுத்தல் பற்றி தெரிவிப்பது, அத்தகைய துன்புறுத்தல் தகவல்களை தருபவர்களுக்கு எந்தவித பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படாதபடி உறுதிப்படுத்திக் கொள்ள உதவுவது (ஜனவரி 2019 Mtg., Bd. டிசம் 119).

Source: COL 89&148; Amended by May 2011 Mtg., Bd. Dec. 204; September 2011 Mtg., Bd. Dec. 87; October 2013 Mtg., Bd. Dec. 31; January 2014 Mtg., Bd. Dec. 88; October 2014 Mtg., Bd. Dec. 60; January 2019 Mtg., Bd. Dec. 119

ஆதாரம்: rotary.org

# இரத்த புற்றுநோயிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுவோம்!

ரோட்டரி செய்திக்குழு

RC ஹைதராபாத் டெக்கான் (3150), நகரிலுள்ள பசவதாரகம் இந்தோ-அமெரிக்க புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி கழகத்துக்கு ரூ.66 லட்சம் செலவில் இரத்தத்தில் உள்ள அணுக்களை அளவிடும் சைடோமீட்டர் (Cytometer) கருவியை கடந்த ஜூன் மாதம் நன்கொடையாக வழங்கியுள்ளனர். இதற்கான நிகழ்ச்சியில் மாவட்ட ஆளுநர் (2018-19) ரமேஷ் வாங்கலா கலந்துகொண்டு இந்த கருவியின் செயல்பாட்டை தொடங்கிவைத்தார். இந்த மருத்துவமனையில் ஆண்டுக்கு சராசரியாக 12,000 புற்றுநோயாளிகள் சிகிச்சை பெறுவதாகக் கூறப்படுகிறது.

சைடோ மீட்டர் கருவி மூலம் ஒருவரின் உடலில் உள்ள இரத்தத்தில் கலந்திருக்கும் வென்னை அணுக்களை கணக்கிட்டு அவருக்கு சிவப்பு அணுக்களை விட வெள்ளை அணுக்கள் அதிகம் இருந்தால் அவர் இரத்த புற்று நோயால் பாதிக்கப் பட்டுள்ளார் என்பதை கண்டறிய முடியும். குறிப்பாக குழந்தைகளுக்கு இரத்தப் புற்றுநோய் வரலாம் என்பதால் அதை முன்கூட்டியே கண்டுபிடித்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்க இது உதவும்.


ஹைதராபாத் புற்று நோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி கழகத்துக்கு சைடோமீட்டர் கருவியை வாங்கி அளிப்பதற்கான திட்டச் செலவு ரூ.66 லட்சமாகும். அமெரிக்காவில் உள்ள RC நாபர் வில்லி RID 6450 மற்றும் ரோட்டரி அறக்கட்டளை ஆகியவற்றின் உதவியுடன் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப் பட்டதாக சங்கத்தின் முன்னாள் தலைவர் உதய் பிலானி தெரிவித்தார்.



**இடதிலிருந்து:** *பசவதாரகம் மருத்துவமனை CEO Dr சுப்ரமணியேஷ்வர் ராவ், IPDG ரமேஷ் வங்கலா, மருத்துவமனை அறங்காவலர் ஸ்ரீபரத், RC ஹைதராபாத் டெக்கான் முன்னாள் தலைவர் உதய் பிளானி மற்றும் திட்ட இயக்குனர் அனு கேண்ட்ரி.*

இரத்தத்தில் வெள்ளை அணுக்கள் அதிகம் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்கான சிகிச்சையை இந்தக் கருவி மூலம் ஒரு முறை செய்து கொள்வதற்கு கிட்டதட்ட ரூ.25,000 செலவாகும். ரோட்டரி இந்த கருவியை (சைடோமீட்டர்) நன்கொடையாக அளித்திருப்பதன் மூலம் ஏழை, எளிய மக்கள் இலவசமாக இந்த சிகிச்சையைப்பெற முடியும். மருத்துவர்கள் இந்தக் கருவி மூலம் ஒரு குழந்தைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைக் கண்டறிந்து அதற்கு தகுந்தாற்போல் மருத்துவச் சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும்.

தெலங்கானா, ஆந்திரா மற்றும கர்நாடகத்தின் வடக்குப் பகுதியைச் சேர்ந்த, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்து வரும் MNJ புற்றுநோயியல் மற்றும் பிராந்திய புற்றுநோய் சிகிச்சை மையமும் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்த மையம் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு இலவசமாக பரிசோதனையும்நோயின் தன்மைக்கு ஏற்ப சிகிச்சையும் அளித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 10,000-த்துக்கும் மேலானவர்கள் சிகிச்சைக்காக தங்கள் பெயர்களை இங்கு பதிவு செய்து வருகின்றனர். இது தவிர 1,10,000 பேர் தொடர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.■



*மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள சைட்டோ மீட்டர் கருவி.*

# DYNAMIC THERMOPACK INDUSTRIES

**Plot No.B-35(A2) RIICO Indl.Area Khushkhera Distt.Alwar (Raj.)**
**Mobile No. 9928860684, 9785505151,**
**Email: dynamic.thermopack@gmail.com**

**Manufacturers : All Kinds of Thermocol products Thermocol Molding,Thermocol hand molding,Thermocol Sheets, Thermocol Pipe Section,Thermocol Cut Chips, Thermocol Beads,Thermocol Blocks,Thermocol Boxes,etc.**



AUTOMATIC M/C PRODUCTION





PRODUCTION



SEMI AUTO MACHINE





FINISHED ITEMS AFTER PACKING



BLOCK MOULD



BLOCK

# தியாகிகளுக்கு பிரார்த்தனைக் கூட்டம்

V முத்துக்குமரன்



**வலதுபுறத்திலிருந்து:** RC *மெட்ராஸ் பே சிட்டி தலைவர் சுரேஷ் கிருஷ்ணசாமி, அண்ணா பல்கலைக்கழகம் துணைவேந்தர்* M K *சூரப்பா,* PDG ISAK *நாசர்,* DG G *சந்திரமோகன் மற்றும் ரஷ்ய நாட்டுத் தூதரக ஜெனரல் ஒலக்* N *அவ்தீவ்.*

சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் ஒரு சர்வ சமய பிராத்தனை கூட்டத்தை மெட்ராஸ் பே சிட்டி RID 3232 ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்தது. இந்த கூட்டத்தின் மூலமாக, தங்களின் இன்னுயிரைத் தியாகம் செய்த நமது வீரர்களின் செய்தியினை குடிமக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்குக் கொண்டு செல்கிறோம், மேலும் பணியில் இருக்கும் அலுவலர்கள் மற்றும் மூத்த வீரர்களின் தியாகங்கள் வீணாகக்கூடாது, என்று தொடர்ச்சியாக எட்டாவது ஆண்டாக நடைபெறும் இந்த பிராத்தனைக் கூட்டத்தில் பேசும் போது கூறினார் DG G சந்திரமோகன். மேலும், இந்த விஷேசமான நிகழ்ச்சியை நடத்துவதற்கு அவர் அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் M K சூரப்பா அவர்களுக்கு நன்றி தெரிவித்தார், இதில் NCC வீரர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மலர் அஞ்சலி செலுத்திய பிறகு, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கான கப்பற்படை அதிகாரி அட்மிரல் K J குமார் தனது உரையில், பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த வீரர் களும் அதிகாரிகளும் 'மதச் சார் பின்மைக்கு முன்னு தாரணமாக' இருக்கிறார்கள், அவர்கள் பலதரப்பட்ட பின்புலத்திலிருந்து வந்து "தீரா வேட்கையுடன்" பணி புரிகிறார்கள் என்று தெரிவித்தார். அத்துடன், நிலத்திலோ, நீரிலோ அல்லது வானத்திலோ தேசத்தைப் பாதுகாப்பதில் வீரர்கள் மற்றும் அதிகாரிகளின் கடினமான பணிகளை குறிப்பிட்டுக்காட்டும் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி இளைஞர்களின் மனதில் தேசப்பற்றை ஆழமாகப்பதிக்க கல்வி நிலையங்கள் முன்வர வேண்டும் என்றார்.

மேலும் குமார், "சர்ச்சைக்குரிய பிரச் சனைகளில் கவனம் செலுத்துவதை விட அவர்களின் வீரசாகசங் களைக் கொண்டாடுவோம், இது பாதுகாப்புச் சேவைகளில் இணைய இளைஞர்களுக்கு நீண்ட காலத்திற்கு உத்வேகம் கொடுக்கக் கூடியதாக இருக்கும்," என்று கூறி இராணுவ படைகளின் சாகசங்களை வெளிக் காட்டுமாறு ஊடகங்களைக் கேட்டுக்கொண்டார்.

துணை அட்மிரல் B கண்ணன், CEO, லார்சன் அன்ட் டாப்ரோ ஷிப்பில்டிங், டெல்லியில் இந்தியா கேட் அருகில் புதிதாகத் திறந்துவைக்கப் பட்ட தேசிய போர் நினைவுச் சின்னத்தைக் குறிப்பிட்டு, "சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்த நாடு சந்தித்த பல்வேறு போர்களில் கலந்துகொண்டு, தங்கள் இன்னுயிரை ஈத்த 25,000-க்கும் அதிகமான வீரர்களின் பெயர்களை கல்வெட்டுக்களில் வாசிக்கும் போது உங்கள்

கண்கள் கலங்கி தொண்டை அடைத்துக் கொள்ளும்,'' என்று கூறினார்.

"நமது தேசத்தைப் பாதுகாக்க நமது இராணுவப் படைகள் அச்சுறுத்தலான சூழ்நிலைகளில் இருக்கிறார்கள் என்பது நிறைய பேருக்குத் தெரியாது, என்று தான் DRDO தலைவராக இருந்த நாட்களை நினைவுகூர்ந்தார் கிறிஸ்டோபர், இப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர். லேவில் அதிக உயரத்தில் அமைத்திருக்கும் இராணுவ ஆய்வகத்தில் சரியாக மூச்சுவிடவோ அல்லது சுதந்திரமாக அசையவோ அவரால் முடியவில்லை, "ஆனால் பூரண கவனத்துடன் இந்த உயரங்களில் நமது வீரர்களால் செயல்பட முடிகிறது.'' விசாகப்பட்டினத்தில் நீர் மூழ்கிக் கப்பலில் ஒரு ஏவுகணை சோதனையைத் தொடங்குவதில் இருந்து ஒரு எலக்ட்ரானிக் சாதனத்துடன் AWACAS விமானத்தை பொருத்துவது வரை, "அந்த இடத்திற்குச் சென்று இயல்பாக இருப்பது எவ்வளவு கடினம் என்பதைக் கண்டறிந்தேன்.''

இந்த அஞ்சலி நிகழ்ச்சியை RC மெட்ராஸ் பே சிட்டி சங்கத்தின் கமாண்டர் K P ராமச்சந்திரன் IPP தொகுத்து வழங்கினார் மற்றும் சங்கத் தலைவர் சுரேஷ் கிருஷ்ணா நன்றியுரை வழங்கினார்.

சென்னை ஐடி சிட்டி, மெட்ராஸ் சென்ட்ரல் ஆதித்யா, சென்னை ஸ்பாட்லைட், கிண்டி, அண்ணாநகர் ஆதித்யா, சென்னை பிரஸ்டீஜ் மற்றும் மெட்ராஸ் வடபழனி போன்ற ரோட்டரி சங்கங்கள் இந்த நிகழ்ச்சியை இணைந்து நடத்தின. இந்த நிகழ்ச்சியில் சுமார் 250 NCC படைவீரர்கள் மற்றும் மாணவர்களுடன் சேர்ந்து, PDG ISAK நாசர், சங்கத் தலைவர்கள் மற்றும் ரொட்டேரியன்கள் கலந்துகொண்டனர். ரஷ்ய நாட்டுத் தூதரக ஜெனரல் ஒலக் N அவ்தீவ் மற்றும் ஜப்பான் நாட்டுத் தூதரக ஜெனரல் கோஜிரோ உச்சியாமா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

**சமூகக் காடுவளர்ப்புக் கலை**

வளாகத்திற்குள் DG சந்திரமோகன் சமூக காடுகளை வளர்க்கும் திட்டத்தைத் துவக்கி, இதில் வளாகத்துடன் இருக்கும் குடியிருப்புகள் மற்றும் கல்வி நிலையங்களில் மரம் வளர்ப்பதும் உள்ளடங்கும். "இதை சரியான வழியில் செயல்படுத்த, இந்த வளாகத்தில் 20 மரக் கன்றுகளை நட்டுள்ளோம். எங்களின் ROOTS (ரோட்டரி ஒருங்கிணைக்கும் மர அமைப்புகளின் பராமரிப்பு) திட்டப்பணியின் அங்கமாக இந்த பசுமை செயல்பாடு இருக்கிறது. கார்கால மழைக்குப் பிறகு நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்த பிறகு இத்திட்டம் வேகம் பிடிக்கும் என நம்புகிறோம்,'' என்றார் கிருஷ்ணசுவாமி.■

## அறுவைசிகிச்சை இல்லாத் தீர்வு தரும் பன்வேல் ENT முகாம்

ரோட்டரி செய்திக்குழு


பட்வர்தன் மருத்துவமனையில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ENT கண்டறியும் மற்றும் சிகிச்சை முகாமை RC பன்வேல் எலைட் சங்கம் சமீபத்தில் ஏற்பாடு செய்தது. RSS ஜனகல்யான் சமிதி உடன் இணைந்து இந்த முகாம் நடத்தப்பட்டது. "RC ஜெய்பூர் ஈஸ்ட் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் பிரகாஷ் கோலேச்சா இந்தத் திட்டப்பணியை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க அளவில் நோயாளிகளை பரிசோதிப்பதற்கும் உதவினார். "மற்ற முகாம்களிலிருந்து இது வேறுபட்டு இருப்பதற்கான காரணம், இங்கேயே அறுவை சிகிச்சை இல்லாமல் அனைத்து சிகிச்சைகளும் அளிக்கப்பட்டது தான்,'' என்று கூறினார் சங்கத் தலைவர் ரிதேஷ் முனோத்.




150 பேர் பங்கேற்ற இந்த முகாமின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் சிலவற்றைக் குறிப்பிட்டுப் பேசுகையில், காது கேட்கும் திறனை இழந்து பாதிக்கப்பட்ட 94 வயது நோயாளி, அங்கேயே அவருக்கு காது கேட்க ஆரம்பித்தது என்று முனோத் கூறினார். "மற்றொரு பெண் நோயாளிக்கு அறுவை சிகிச்சை இல்லாமல் செவிப்பறை சரியான இடத்தில் பொருத்தப்பட்டது, இதன்பிறகு அவருக்கு காதுகேட்க ஆரம்பித்தது. இதற்குமுன், அவருக்கு காது கேட்காமலேயே இருந்தது.''

வழக்கமாக செவிப்பறை பொருத்துவதற்கு சுமார் ரூ.50,000 வரை செலவாகும், "ஆனால் எவ்வித அறுவைசிகிச்சை இல்லாமல் இலவசமாக இந்த நடைமுறையை எங்களால் வழங்க முடிந்தது. எங்கள் சங்கத்திற்கு மிகப்பெரும் சாதனையாக இருந்தது,'' என்றார். ■

# With best compliments from




# Jitendra Dhingra

**District Governor, RID 3080**

# சுற்றிப்பார்க்க வேண்டிய சுற்றுப்புறத் தீவுகள்

ஹேன்க் சர்டின்



ஜூன் 6 முதல் 10 வரை ஹோனோலுலுவில் நடைபெறும் ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டுக்காக நீங்கள் திட்டமிடும்போது, ஒவாஹுவைத் (Oahu) தாண்டி இருக்கும் அருகாமையிலுள்ள அதன் தீவுகளுக்குச் செல் வதற்கும் திட்டமிடுங்கள்.

கவாயில் (Kauai), இயற்கையை நேசிப்பவர்கள் நா-பாலி கோஸ்ட் ஸ்டேட் பார்க் (படத்தில் உள்ளது) மீது மோகம் கொள்வார்கள். பாலி என்றால் செங்குன்று, உங்களுக்கு சில ஆச்சர்யமூட்டும் விஷயங்களும் இருக்கும், அதாவது கடற்கரை முழுவதும் உள்ள பள்ளத்தாக்குகளில் ஆங்காங்கே நீர்வீழ்ச்சிகள் இருக்கும். இந்த கடற்கரையை ஜுராசிக் பார்க் படத்தில் பார்த்தது போல உங்களுக்குத் தோன்றலாம்; இந்த படத்தின் சில பகுதிகள் இங்கேதான் படமாக்கப்பட்டது.

மாவுய்(Maui)-இல், 64 மைல் தூரம் கொண்ட ஹனா நெடுஞ் சாலையில் நீங்கள் பயணம் செய்யலாம், இந்த சாலை கஹுலுய் (Kahului)-லிருந்து தொடங்கி ஹனா-வின் மிகச்சிறிய நகரத்தின் வழியாகச் சென்று, வடக்கு கடற்கரையைத் தழுவி, பிறகு கிபாஹுலு (Kipahulu)-ஐ அடைகிறது. இந்த சாலையில் 600 கொண்டைஊசி வளைவுகள் மற்றும் 46 ஒருவழி பாலங்கள் இருக்கிறது. நீங்கள் இந்தப் பகுதியை நன்றாகக் கண்டுகளிக்க வேண்டுமென்றால், ஒரு சுற்றுலாப் பேருந்தை ஏற்பாடுசெய்யுங்கள், வண்டி ஓட்டும் கவலையை இன்னொருவருக்குப் போகட்டும்.

பிக் ஐலேண்டில், ஹவாய் எரிமலைகள் தேசிய பூங்காவில் இயற்கையின் பேராற்றலைப் பார்த்து வியக்கலாம். பூங்காவில் உள்ள எரிமலை குறித்த தகவல்களுக்கு nps.gov/havo என்ற வலைத்தளத்தைப் பார்வையிடவும். பிக் ஐலேண்ட்டில் நீங்கள் இருக்கும்போது நீங்கள் சுவைக்கும் காஃபிக்குத் தேவையான காஃபி செடியை கவனமாக வளர்க்கும் கோனா பிராந்தியத்திற்குச் சென்று வாருங்கள். நிறைய காஃபி பண்ணைகள் சுற்றுலாவுக்கு அனுமதியை வழங்குகிறார்கள், மேலும் புகைப்படம் எடுப்பதற்காக இன்னொருவரையும் கூட்டிச் செல்வது நல்லது.

**ஹோனோலுலுவில் நடைபெறும் 2020ம் ஆண்டு ரோட்டரி மாநாட்டைத் தவறவிடாதீர். riconvention.org இணைய தளத்தில் டிசம்பர் 15-க்குள் பதிவு செய்யுங்கள்.**

# மாற்றுத்திறனாளி குழந்தை இல்லத்திற்கு தண்ணீர் வசதி

ரோட்டரி செய்திக்குழு



*IPDG முகுல் சின்ஹா மற்றும் சங்கத் தலைவர் ரித்விக் கங்கூலி வாய்ஸ் ஆஃப் தி வேர்ல்டு இல்லத்தில்.*

கொல்கத்தா சால்டிகாட்டில் உள்ள மாற்றுத்திறனாளி குழந்தை இல்லத்தில் RID 3070, RC ரபீந்திர சரோபர் அமைத்த அடிகுழாயை IPDG முகுல் சின்ஹா தொடங்கிவைத்தார். சுமார் 300 குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் உள்ள இல்லத்தில் தண்ணீர் பற்றாக்குறையால் ஏற்பட்டது. இல்லத்தை நடத்திக் கொண்டிருக் கும் வாய்ஸ் ஆஃப் தி வேர்ல்டு என்ற NGO உதவிக்காக இச்சங்கத்தை அணுகியது. கிழக்கிந்திய ரோட்டரி நலவாழ்வு அறக்கட்டளை மற்றும் RC சென்ட்ரல் மெல்போர்ன், ஆஸ்திரேலியா RID 9500 சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் சுமார் ரூ.1,43,000 மதிப்பில் இந்த அடிகுழாயை இந்த சங்கம் அமைத்துள்ளது.■

# மராத்வாடாவில் RC ஒமெர்காவின் தண்ணீர் சேகரிப்பு முயற்சி

ரஷீதா பகத்



ரஷீதா பகத்

PDG *ராஜீவ் பிரதான் (இடதிலிருந்து ஏழாவது),* PDG *தீபக் மற்றும் அவர் மனைவி சுசேத்தா போஃபலே,*
RC *ஒமர்கா முன்னாள் தலைவர் சஞ்சய் ஆஸ்வாலே, விவசாயிகளுடன்.*

மகாராஷ்டிரா சோலாப்பூரில் இருந்து மிகச்சிறிய நகரமான ஒமெர்காவுக்கு நாங்கள் செல்கையில், வானில் மேகங்கள் ஊர்வலம் சென்றுகொண்டு, இலேசாகத் தூறிக்கொண்டிருந்தது, அங்கே, 2015–16 ஆம் ஆண்டில் RID3132ன் மாவட்ட ஆளுநராக தீபக் போஃபலே இருந்தபோது, ஒமெர்கா மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களில் நீர் மேலாண்மையில் ஒரு சிறிய புரட்சியை அவர் ஏற்படுத்தியுள்ளார்.



RC ஒமெர்கா சங்க உறுப்பினரான போஃபலே, இதே சங்கத்தைச் சேர்ந்த மற்ற ரொட்டேரியன்கள் மற்றும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த PDG ராஜீவ் பிரதான் ஆகியோருடன் சேர்ந்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட இந்த பிராந்தியத்தில் இந்த சங்கம் செய்த நீர் சேமிப்புத் திட்டப்பணிகளால் ஏற்பட்ட விளைபலன்களைக் காண நாங்கள் புறப்பட்டோம். இது ஜூலை மாதத்தின் நடுப்பகுதி, மேலும் மும்பையும் புனேவும் அளவுக்கதிகமான பருவ மழையினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த மராத்வாடா பகுதியில் மீண்டும் ஒருமுறை பருவமழை குறைந்து விடுமோ என்ற அச்சம் உள்ளது.

1993 ஆண்டில் லாதூர் மற்றும் உஸ்மானாபாத்தில் பூகம்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்திய ரொட்டேரியன்கள் புதிதாகக் கட்டியிருந்த ரோட்டரி நகர் என்ற கிராமத்தை வேகமாகப் பார்த்தோம், அழகாக கட்டப்பட்ட வீடுகள் ரோட்டரியின் சமூக சேவைக்கு சான்றாக விளங்குகிறது, அதன்பின் நாங்கள் பல்சூர் மற்றும் கர்தோரா என்ற இரண்டு கிராமங்களுக்குச் சென்றோம், RC ஒமெர்கா மற்றும் மாவட்டத்தின் பிற சங்கங்கத்தைச் சேர்ந்த கடின உழைப்பாளிகளைப் பார்த்தோம், இவை அனைத்தையும் போஃபலேயின் தலைமையின் கீழ் செய்துள்ளனர், அவருடைய DG பதவிக்காலம் 2016ல் முடிவடைந்த நிலையிலும் இது தொடர்கிறது.

ஒரு வறண்ட நீரோடையில் விவசாயிகள் மற்றும் ரொட்டேரியன் குழுவினர் கூடியிருந்தனர், மண்மூடி இருந்த அந்த நீரோடையில் JCB இயந்திரம் மூலம் மண் தோண்டப்பட்டு, தூர்வாரப்பட்டுள்ளது, அப்போது கலந்துரையாடுகையில் விவசாயிகளிடம் அவர்களின் மிகப்பெரிய பிரச்சினை என்ன என்று கேட்டேன்.

தண்ணீர், என்பது தான் ஒட்டுமொத்தக் குரலாக ஒலித்தது.

*பல்சூர் நதி*



இந்த ஒற்றை வார்த்தை பதிலில், ரொட்டேரியன்கள் புன்னகைக்கத் தொடங்கினர்.

### மனக்கவலை இல்லா விவசாயிகள்

இன்றைய காலகட்டத்தில் இந்தியாவில் ஒரு விவசாயி பயிரிடுவது பயன் தரக்கூடியதா? மண்ணில் போடும் பணத்திற்கு அவர்கள் என்ன வகையான வருமானத்தைப் பெறுகிறார்கள்? ஒரு விவசாயியும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான கோவிந்த் தேவானி, இல்லை என்பது தான் வெளிப்படையான பதில். நாங்கள் போட்ட மூலதனம் கூட எங்களுக்குக் கிடைப்பதில்லை மேடம் என்று கடுமையாக பதிலளித்தார்.

### பின்னர் விவசாயி ஏன் தொடர்ந்து பயிரிடவேண்டும்?

''அவர் விவசாயத்தை விரைவில் கைவிடுவார்,'' என்று அவர் உறுதியுடன் கூறுகிறார்.

கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு விவசாயிகள் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து, கூலி வேலைகளைச் செய்வது பற்றி PDG போஃபலே எனக்கு விளக்கும்போது, மற்றொரு விவசாயி அருண் பாட்டீல், எங்கள் பிரச்சினை என்னவென்றால், இந்த பிராந்தியத்தில், ஒரு வருடத்திற்கு மழை பெய்கிறது, மூன்று வருடத்திற்கு வறட்சி இருக்கிறது, என்று கூறுகையில், மூன்றாவது விவசாயி குறுக்கிட்டு, உண்மையிலேயே ஒரு வருடத்திற்கு மழை, வறட்சி 10 வருடத்திற்கு இருக்கிறது! என்று சொன்னார்.

இங்குள்ள பல விவசாயிகளைப் போல, அருண் பாட்டீலுக்கும் ஐந்து ஏக்கர் நிலம் உள்ளது, இப்போது ரொட்டேரியன்களின் நீர் சேமிப்புப் பணிகள் வெற்றி பெற்றிருப்பதால், அவர்களுக்கு கொஞ்சம் தண்ணீர் கிடைக்கிறது, பயிரிடப்பட்ட சோயா பீன், பெரும்பாலும் லாதூர் சந்தை வழியாக அனுப்பப் படுகின்றன, மேலும் கொஞ்சம் அதிக நீர் இருக்கும்போது, கோதுமை பயிரிடப்படும்.

அவர்களுக்கு வங்கிகளிடமிருந்து கடன் கிடைக்குமா? இல்லை என்பது ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லாத பதில். "வங்கிகள் பணத்தை சுருட்டி ஊரை விட்டுச் செல்லும் தொழிலதிபர்களுக்கு மட்டுமே கடன் கொடுக்க விரும்புகின்றன,'' என்று அவர் கூறுகிறார். வங்கிக் கடன்கள் இல்லாத நிலையில், அவர்கள் அதிக வட்டிக்கு அதாவது 60 சதவீதம் மற்றும் அதற்கு மேல், கந்துவட்டிக்காரரிடமிருந்து மட்டுமே கடன் வாங்க வேண்டும். "நான் அந்தத் தவறை செய்தேன், அவர் எனது நிலத்தில் பாதியை விழுங்கிவிட்டார்'' என்று பாட்டீல் கூறுகிறார். மீதமுள்ள 5 ஏக்கர் இது தான் என்று மனம் உடைந்து கூறுகிறார்!

### தொடக்கம்

2015-16 ஆம் ஆண்டில், போஃபலே DG ஆக இருந்தபோது, எங்கள் மாவட்டத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டது, சாதாரண மழையில் வெறும் 20 சதவீதத்தை மட்டுமே பெய்தது. நீர் சேகரிப்பில் கவனம் செலுத்த முடிவு செய்தேன், மாவட்ட நல நிதியில் இருந்து ஒரு JCB வாங்கினேன்,'' என்று நினைவுகூறுகிறார்.

இதற்கு ரூ.25 லட்சம் செலவானது, மேலும் கூடுதல் இயந்திரத்தையும் வாங்க ஏற்பாடு செய்தார். "அப்போதிருந்து நாங்கள் நீர் திட்டப்பணிகளில் பணிபுரிந்து வருகிறோம், இன்றுவரை நிலம்/மண்/வண்டல்மண் கொண்டு மூடியிருந்த சுமார் 80 கி.மீ தூரம் வரையிலான நீரோடைகள், ஆறுகள் மற்றும் கால்வாய்கள் போன்றவை தூர்வாரப்பட்டு புத்துயிர் பெற்றன.'' மொத்தமாக செலவிடப்பட்ட தொகை ரூ. 6 கோடி; அதில் நான்கில் ஒரு பங்கு அரசாங்க நிதி.

எந்தவொரு நீர் சேமிப்பு அமைப்பும் தண்ணீரை சேமித்து வைக்க பள்ளமாக இருக்கவேண்டும், இது நிலத்திற்குள் தண்ணீர் ஊடுருவ அனுமதிக்கிறது; இப்படித்தான் நிலத்தடி நீர் உயர்த்தப்படுகிறது. ஆனால் பல ஆண்டுகளாக, நீரோடைகள், கால்வாய்கள் மற்றும் சிறிய ஆறுகள் கூட சமநிலையாக



PDG *ராஜீவ் பிரதான், தீபக் போஃபலே,* RC *ஓமர்கா தலைவர் விநோத் தேவார்கர் மற்றும் சங்கத்தின் முன்னாள் தலைவர் நிதின் ஹோலே.*

ரஷீதா பகத்

இருக்கின்றன, இதன் விளைவாக தண்ணீர் நிற்காமல் ஓடிவிடுகிறது, இதனால் நிலத்திற்குள் தண்ணீர் செல்வதையும் நிலத்தடி நீர் உயர்வதையும் தடுக்கிறது.

"கடந்த நான்கு ஆண்டுகளில், சிறிய திட்டப்பணிகளின் மூலம் இந்த நீர்நிலைகளைத் தூர்வாரிக் கொண்டிருக்கிறோம், நீரோடைகள், ஏரிகள் மற்றும் ஆறுகளை தூர் வாருவது மட்டுமல்லாமல், ஆழமான பள்ளங்களையும் அகலமாக மாற்றம் செய்து தடுப்பணை களையும் அமைக்கிறோம், என்கிறார் போஃபலே.

கடந்த நான்கு ஆண்டுகளில் இது போன்ற 110 திட்டப்பணிகளை RID 3132 இல் உள்ள 42 சங்கங்கள் செய்து ள்ளன, இதனால் 2 லட்சத்திற்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளனர். மேலும் இந்தப் பணி இன்றுவரைத் தொடர்கிறது. அதற்குப்பின்னர், ஒமெர்கா நதியைப் பார்வையிட்டோம், இந்த ரொட்டேரியன்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இதற்குப் புத்துயிர் கொடுத்தனர், இப்போது இதில் தொடர்ந்து தண்ணீர் இருக்கிறது, போஃபலே சிரித்தபடி, இந்தத் திட்டப்பணியால் நான்தான் மிகவும் பயனடைந்தேன், என் வீட்டில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது, அதற்கு இந்த ஆறு தான் காரணம், என்று கூறுகிறார்.

RC ஓமெர்காவின் முன்னாள் தலைவர் சஞ்சய் அஸ்வாலே, கடந்த நான்கு ஆண்டுகளில் ஒமெர்கா நகரத்தில் உள்ள அனைத்து கிணறுகளும் வறண்டுபோகாமல் இருந்தால், அனைத்து பெருமை களுக்குக் காரணம் PDG தீபக்கின் தலைமை தான். அவர் ஒரு பயபக்தி யுள்ள ஒரு ரொட்டரியன்; ஒரு பரபரப்பான மருத்துவர், ஒவ்வொரு வார இறுதியிலும் அவர் ரோட்டரித் திட்டப்பணிகளில் பணிபுரிகிறார் உதாரணமாக கடந்த சனிக்கிழமை, அவர் ரோட்டரி பணிகளுக்காக அமராவதியில் இருந்தார், என்றார்.

அஸ்வாலே 2016–17 ஆம் ஆண்டில் இந்த சங்கத்தின் தலைவராக இருந்தார், மேலும் அவரது பணிக்காலத்தில் தான் ககல்கான் பகுதியில் உள்ள நீர்நிலைகள் மறுசீரமைக்கப்பட்டது.



*தூர்வாரும் பணியில் சஞ்சய் ஆஸ்வாலே RC ஓமர்கா சங்கத்தினருடன்.*

### விவசாயிகள் பலன்

வீட்டு உபயோகங்களுக்காக ஒமெர்காவாசிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதுடன், இந்த பிராந்தியத்தைச் சுற்றியுள்ள விவசாயிகளும் பயனடைந்துள்ளனர்.

எண்ணெய் வித்துக்கள், கோதுமை மற்றும் சோளம் போன்ற இந்த பிராந்தியத்தில் வளர்க்கப்படும் பயிர்களில் எண்ணெய் வித்துக்கள் தான் மிகவும் பொதுவானது என PDG ராஜீவ் பிரதான் விளக்கினார். மேலும், இப்போது விவசாயிகளிடம் தண்ணீர் இருப்பதால், அவர்கள் சோயா பீன், துவரம் பருப்பு போன்றவற்றை வளர்த்து வருகின்றனர்.

### கூட்டணி அமைத்தல்

அவர்களுக்கு மகாராஷ்டிரா அரசும் உதவி செய்துகொண்டிருக்கிறது. சில இடங்களில் அரசாங்கம் எங்களுக்கு நிதி அளிக்கிறது. கல்லாம் நதி ஒரு பெரிய நதி, ரோட்டரி மட்டும் தனியாக வேலையைச் செய்ய முடியாது. சுமார் ரூ.86 லட்சம் இதற்குத் தேவைப்பட்டது, எங்களால் இவ்வளவு பெரிய தொகையைத் திரட்ட முடியவில்லை. கல்லாம் பகுதியைச் சேர்ந்த எங்கள் ரொட்டேரியன்கள் ஆணையரைத் தொடர்பு கொண்டனர், அவர் ஒரேநாளில் மிகப்பெரியத் தொகையான ரூ.50 லட்சத்தை நிதி ஒதுக்கினார்.

இந்த ரொட்டேரியன்கள் தங்கள் கடுமையான, விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்புமிக்க பணியின் மூலம் அரசாங்கத்திலும் உள்ளூர் சமூகத்திலும் கட்டியெழுப்பிய நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்திற்கு இது ஒரு சான்று. ரொட்டேரியன்கள் நிதியை நிர்வகிக்கப் போகிறார்கள் என்றால் மட்டுமே நாங்கள் நன்கொடை அளிப்போம், என்று இப்போது இங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். ரோட்டரிக்கு மிகப்பெரிய நற்பெயர் கிடைத்துள்ளது என்று இந்த சங்கத்தின் உறுப்பினர் நிதின் கூறுகிறார்.

வறண்டுபோன, நீர்நிலைகளை மறு சீரமைத்ததன் மூலம் விலை மதிப்பற்ற இயற்கை வளத்தை பாதுகாத்துள்ளோம், ஒட்டுமொத்தமாக, இதுவரை சுமார் 6 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. நாங்கள் ஒரு மாவட்ட மானியநிதியான ரூ.15 இலட்சத்தைப் பயன்படுத்தியுள்ளோம்; இதில் உலகளாவிய மானியம் எதுவும் இல்லை, அனைத்து நிதியும் ரொட்டேரியன்கள், உள்ளூர் சமூகம் மற்றும் சில அரசாங்க நிதியிலிருந்து திரட்டப்பட்டது. மாவட்டங்கள் 3131 மற்றும் 3141-ஐ சேர்ந்த சங்கங்களும் இந்த திட்டப்பணிக்கு எங்களுக்கு நிதி அளித்துள்ளன, என்கிறார் பிரதான்.

இத்திட்டப்பணியின் அதிசயமான நிகழ்வு என்னவென்றால், மற்ற சங்கங்களும் நீர்சேமிப்புத் திட்டப் பணிகளுக்கு JCBயை பயன்படுத்தி யுள்ளன, இதில் பிரதான் அவர்களின் சொந்த சங்கமான RC சோலாப்பூரும் அடங்கும்.

### சோலப்பூர் மாவட்டத்தில் கிணறுகளைத் தூர்வாருதல்

2017–18 ஆம் ஆண்டில் இந்த சங்க தலைவர் ஜெயேஷ் படேல், வறட்சியால் பாதிக்கப்பட்ட பிராந்தியத்தில் போர்க்கால அடிப்படையில் நீர்சேமிப்புப் பணிகளை மேற்கொண்டார். PDG பிரதான் அவர்கள் போஃபலிடமிருந்து JCBயை கடன் வாங்கியதை நினைவு கூர்ந்தார், மேலும் ஹராலி என்ற கிராமத்தில் 75 கிணறுகளில் தூர்வார நிதியைத் திரட்டினர். மாவட்டம் 3131 எங்களுக்கு உதவியது; RC புனே லக்ஷ்மி ரோடு சங்கத்தலைவர் சுனிதா ஷிர்குப்பி சோலாப்பூரில் ஒரு திட்டப்பணி செய்ய விரும்புவதாகக் கூறி என்னை அணுகினார், ஜெயேஷ் படேல் இதற்குத் தலைமை வகித்தார், நாங்கள் சுமார் 75 கிணறுகளைத் தூர்வாரினோம்.

ஹராலி, தொம்பா, உதத்பூர் மற்றும் சோலாப்பூர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள பிற கிராமங்களில் உள்ள நீர்சேமிப்புத் திட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றிய படேல், இப்பகுதியில் சுமார் 54 கிணறுகள் முற்றிலும் வறண்டுபோய் இருந்ததை அடையாளம் கொண்டு, நிலத்தைவிட மூன்று மீட்டர் ஆழத்திற்கு சறுகலாக தோண்டினோம், மழை பெய்தபோது, மழைநீர் இயல்பாகவே கிணறுகளில் பாய்ந்தது. கூடுதலாக 75 கிணறுகளும் தூர்வாரப்பட்டது; பருவமழை குறைவாக இருந்தாலும் கூட இன்று வரை அந்த கிணறுகளில் தண்ணீர் உள்ளது. 12 கிராமங்களில் உள்ள மக்களும் விவசாயிகளும் இந்த பணியின் மூலம் பயனடைந்தனர், என்று கூறினார்.

### பல்சூர் நதி

நாங்கள் சோலாப்பூரிலிருந்து 80 கி.மீ தூரத்தில் உள்ள பல்சூருக்குச் செல்கிறோம். இதுவும் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதி; 2.76 கி.மீ நீளமுள்ள பல்சூர் நதி தூர்வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட்டு, விரைவாக தண்ணீரில் நிரப்பப்பட்டது. இதேபோல், பல நீரோடைகள் மற்றும் கால்வாய்களைச் சுத்தம் செய்யப்பட்டு, தூர்வாரப்பட்டு,




RC *புனே லஷ்மி ரோடு மற்றும் சோலாப்பூர் ரொட்டேரியினர் சோலாப்பூரில் ஒரு திட்டப்பணியில்.*

ஆழப்படுத்தப்பட்டுள்ளன. பருவமழை இந்த நீர்நிலைகளை நிரப்பி, இங்குள்ள கிராம விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் பயனளிக்கிறது. சில நீரோடைகள் வறண்டு மீண்டும் மண்மூடி காணப்படுகிறது; ஆனால் இந்த ரோட்டரி குழு அடுத்த மழைக்காலத்திற்குள் அவற்றை சுத்தம் செய்ய ஒருபோதும் சோர்ந்து போவதில்லை.

ரொட்டேரியன்கள் செய்து கொண்டிருக்கும் பணியைப் பார்த்து, பணம் வந்து கொண்டே இருக்கிறது; RC புனே காந்தி பவனைச் சேர்ந்த ஒரு ரொட்டேரியனின் தந்தை TRF-க்கு 30,000 டாலர் நன்கொடை அளித்துள்ளார், இந்த பணம் எங்கள் நீர் சேமிப்புத் திட்டப்பணிக்காக உள்ளது என்று போஃபலே கூறுகிறார்.

வெவ்வேறு கிராமங்களில் ரொட்டேரியன்கள், பல்வேறு உள்ளூர் குழுக்களுடனும் ஆர்ட் ஆஃப் லிவிங் ஃபவுண்டேஷன் என்ற அமைப்புடனும் இணைந்து செயல்படுகிறார்கள்.

ஆனால் தற்கொலைகள் அடிக்கடி ஏற்படுவதாக கூறப்பட்ட மராத்வாடாவில் ஏராளமான விவசாயிகளை ஒருங்கிணைத்து குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவது என்பது ஒரு கடினமான பணியாகும். போஃபலே சொல்வது போல், இந்த பிராந்தியத்தில் உள்ள ஐந்து ஏக்கர் நிலத்தை மேற்கு மகாராஷ்டிராவில் உள்ள அதே அளவிலான நிலத்துடன் ஒப்பிட முடியாது. ராஜீவ் பிரதான், மேற்கு மகாராஷ்டிராவில், ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் நிலம் இருந்தால், அவர் கரும்பு பயிரிடலாம், அது பணம் தரும் பயிர், ஏனெனில் அங்கு தண்ணீர் கிடைக்கிறது. மேலும், அங்கு மக்கள் வேளாண் தொடர்பான கூடுதல் வேலைகளைச் செய்து சிறிது வருமானம் பெறுகிறார்கள், என்று விவரிக்கிறார்.

இந்த “கூடுதல் வேலை'' என்பது பசுக்கள், எருமைகளை வைத்திருப்பது போன்றவை ஆகும். இங்கேயும் இந்த சங்கம் ஆடுவழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என்று போஃபலே கூறுகிறார். இதில் அவர்கள் ஒரு ஆடு ஒரு பெண்ணுக்குக் கொடுக்கிறார்கள், அதை அவர் வளர்ப்பார்; பிறகு, “ஆடு இரண்டு குட்டி போடும்போது, அந்த பெண்மணி ஒரு குட்டியை எங்களிடம் திருப்பித் தர வேண்டும், இதை வேறொரு பெண்ணுக்கு கொடுப்போம், இப்படியாக இத்திட்டம் தொடரும்.''

நான் சந்திக்கும் விவசாயிகள் அனைவரும் ரோட்டரிக்கு நன்றியை வெளிப்படுத்தினர், ரோட்டரி எங்களுக்கு நிறைய உதவியுள்ளது. அவர்கள் நீரோடையை ஆழப்படுத்தும் போது, தண்ணீர் பெறுவதுடன், தூர்வாருகையில் நிலத்திலிருந்து வளமான கறுப்பு மண்ணையும் பெற்றேன், அதை எனது நிலத்தில் போட்டு எனது விளைச்சலை மேம்படுத்தினேன், என்று சொல்லி பாட்டீல் புன்னகைக்கிறார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி



# ரோட்டரிக் கலை ஒலிம்பியாட்

ரோட்டரி செய்திக்குழு

கடந்த ஆண்டு தேசிய அளவிலும் அமெரிக்கா, இங்கிலாந்து, அர்ஜென்டினாவில் பன்னாட்டளவிலும் மிகப் பெரிய ஓவியப் போட்டியை அறிமுகப் படுத்தியது RC புனே சின்ஹகட் சாலை, RID 3131. புனேயில் இந்தப் போட்டி பண்டிட் பீம்சென் ஜோஷி கலைக் காட்சியகத்தில் நடைபெற்றது.

“மாணவர்கள், பொதுமக்களிடம் உள்ள கலைத்திறமையை இந்த நிகழ்ச்சியின் மூலம் அடையாளம் கண்டு, பன்னாட்டளவில் இன்னும் பெரிய அங்கீகாரங்களுக்கு அவர்களை முன்னிறுத்த நாங்கள் விரும்புகிறோம். வெற்றியாளர்களுக்கு வடிவமைப்பு ஊடகம், திறன் இந்தியாத் திட்டங்களின் வழியாகப் பலவிதமான கலைப் பாணிகளில் பயிற்சியளிக்கப்படும்” என்றார் சங்கத் தலைவர் (2018–19) ஸ்ரீகாந்த் படன்கர்.

கலையைப் பயிற்றுவித்தலில் 25 ஆண்டு அனுபவமுள்ள சங்க உறுப்பினர் நூதல் லோதா இந்தத் திட்டத்தை முன்னிறுத்தியுள்ளார். இந்த நிகழ்வுக்குப் பல நாடுகளிலிருந்து 30,000க்கும் மேற்பட்ட ஓவியங்கள் வந்தன, 500 மாற்றுத்திறனாளிப் பங்களிப்பாளர்களும் இதில் கலந்து கொண்டிருந்தார்கள். இந்தியப் பங்கேற்பாளர்களுக்கு எண்பத்தேழு ரொக்கப் பரிசுகளும் 800 தகுதிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அமெரிக்கா, அர்ஜென்டினாவைச் சேர்ந்த ஓவியர்களுக்கு 25 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. வெற்றியாளர்களைப் புகழ்பெற்ற ஓவியர்களைக் கொண்ட ஒரு குழு தேர்ந்தெடுத்தது. ரோட்டரியன்கள், பொதுமக்கள் முன்னிலையில் வெற்றியாளர்களைக் கௌரவித்தார் DGE ரஷ்மி குல்கர்னி. முன்னதாக, பங்கேற்பாளர்களுடைய கலைப் படைப்புகள் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டன.

பங்கேற்பாளர்களில் ஒருவர், சீனாவில் நடைபெறவிருக்கும் மூத்த பன்னாட்டு வடிவமைப்பு ஒலிம்பியாட் 2021ல் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளத் தேர்வுபெற்றார். அவர் ஏற்கெனவே திறனை வளப்படுத்தும் 20 நாள் பயிற்சியில் கலந்துகொண்டுள்ளார், திறன் இந்தியா முன்னெடுப்பின் கீழ் தொடங்கப்பட்டுள்ள திட்டத்தின்படி அவர் இன்னும் குறைந்தபட்சம் இரண்டாண்டுகளுக்குத் தீவிரப் பயிற்சி பெறுவார். இன்னொரு பங்கேற்பாளர், 2023ல் ரஷ்யாவில் நடைபெறவிருக்கும் இளையோர் பன்னாட்டு வடிவமைப்பு ஒலிம்பியாடில் இந்தியப் பிரதிநிதியாகப் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என்றார் படன்கர்.

US, அர்ஜென்டினா பங்கேற்பாளர் களுடைய வெற்றி பெற்ற கலைப் படைப்புகள் பூனாவில் காட்சிப் படுத்தப்பட்டன, பின்னர், சர்வதேச ரோட்டரி சங்கங்களுடைய ஏற் பாட்டின் வழியாக, அவை பிற நாடுகளில் உள்ள கலைக் காட்சியகங் களிலும் காட்சிப்படுத்தப்பட்டன.

$9,500 மதிப்புள்ள இந்த முயற்சி, நாட்டளவிலும் பன்னாட்டளவிலும் 30,000க்கும் மேற்பட்ட நேரடிப் பங்கேற்பாளர்களுக்கும் இன்னும் பலருக்கும் பலனளித்தது என்றார்.■



# "THE FUTURE BELONGS TO THOSE WHO BELIEVE IN THE BEAUTY OF THEIR DREAMS"

DARE TO DREAM
Rotary


**Rotary Institute**
**Indore**
Zone 4,5,6&7 • 6-8 Dec 2019



Our distinguished guests:

Rtn. Mark Daniel Maloney
Rotary International President
and Rtn. Gay Maloney.

## Convener's Message




Dear Rotary Leaders,

Today we stand at a very crucial juncture in the history of Rotary, as our organisation has an important role to play in the times ahead. The new vision statement and the Strategic Plan no doubt, have the potential to make Rotary bigger, better & bolder. And so, don't miss out on the opportunity to learn more about these initiatives from our world leaders. Be there at the Zone Institute at Indore from 6-8 December,2019 as we gear up to celebrate and welcome the 4th RI President from our Zones - RIPN Shekhar Mehta and his gracious partner Rashi Mehta. Know more about "Dare to Dream" and recognise individuals who have tread the extraordinary path by Daring & Dreaming.

Madhavi & I invite you to imbibe the warm hospitality, excellent fellowship and an outstanding program at the Rotary Zone institute. Come.....Experience Excellence.

Dr. Bharat Pandya
RI Director, 2019-21

## Chairman's Message



My dear friends,

We are now on the last lap of registrations for the Rotary Zone Institute to be held at Indore, from 6th to 8th December 2019. And for the information of all late entrants, we regret that both Venue and Radisson hotels are now sold out and no further rooms are available there.

However, for your convenience, we have negotiated yet again and made available limited accommodations at the Marriott. So kindly ensure that you register without any further delay and book your rooms as soon as possible. Kindly note that there will be NO SPOT REGISTRATIONS.

Director Bharat and the Institute team have planned a program which promises to be different, yet enthralling and absorbing. We are in the process of finalising the same, which will be intimated to you in due course.

And as for our Guest Speakers, I have been sharing some names with you in each of my letters. Adding to the list: General Secretary John Hewko, Dr. Prakash Amte, social reformer and Smt. Smriti Irani, Hon'ble Minister for Women and Child Development and Textiles to name just a few.

I also request those who have already registered and those who are in the process of registration to kindly provide information about their Modi Jacket size, Veg or Non-Veg meal, flight/train arrival and departure details as well as call name on the badge. The transport will be available only for those staying at the Venue, Marriott and Radisson. The details must be sent to the Registration Chair Bansi Dhurandhar with a copy marked to me at chairindoreinstitute@gmail.com. Early response will be highly appreciated.

Vidhya and I look forward to receiving you at the cleanest city of India and foodie's paradise – Indore.

T.N.Subramanian
Chairman, Rotary Zone Institute, 2019

# Incredible Indore Awaits You


Indore Rajwada


Lalbagh Palace


Omkareshwar Jyotirlinga


Annapurna Mandir


Daly College


Mandav

## TRAINING TEAM

| | |
|---|---|
| GETS | Chair: J B Kamdar |
| | Co-Chair: Rajiv Pradhan |
| GETS Partners Program | Chair: Madhavi Pandya |
| | Co-Chair: Marlene Kamdar |
| DGN Training | Chair: Vijay Gupta |
| | Co-Chair: Arun Prakash Gupta |
| DGN Spouses Program | Chair: Sonal Sanghvi |
| District Trainers' Seminar | Chair: Jayant Kulkarni |
| DG Review | Chair: RID Kamal Sanghvi |

## SCHEDULE OF EVENTS & TARIFFS

| REGISTRATION | | | |
|---|---|---|---|
| **Institute Registration** | | Couple | Single |
| Applicable till 31st Oct 2019 | | INR 25000 | INR 15000 |
| GETS (Couple) | 3rd - 5th Dec 2019 | INR 55000 | |
| DGs Review Meeting | 5th Dec 2019 | INR 7500 | INR 4000 |
| DGN Training Seminar | 5th Dec 2019 | INR 7500 | INR 4000 |
| Dist Trainers Seminar | 5th Dec 2019 | INR 7500 | INR 4000 |
| TRF Dinner | 5th Dec 2019 | INR 4500 | INR 2500 |
| TRF Seminar | 6th Dec 2019 (Morn) | INR 4500 | INR 2500 |
| **Hotel Accommodation** | | | |
| Marriott Hotel | Double | INR 8000 per night | |

Institute Brochure and the Registration Form are available on website for download at **www.rotaryinstitute2019indore.org**
For Institute Registration (Select any one method)
1 Please visit & complete online registration formalities.
2 You can download the Registration Form from website & send it to:

**PDG Bansi Dhurandhar**, Chair-Registration.
Microtrol Sterilisation Services Pvt. Ltd, A 101 & 102,
Tara Co-op Hsg Society, Srushti Complex, Saki Vihar Road,
Mumbai – 400072. Tel: 91 22 40579600


Brilliant Convention Centre

*For the Pre and Post Institute tours, contact*
**Shirang Aditi (Avani Tours and Travels)** Ph: 7869902020, 958489688
**Mayank Sikarwar (Religious Tourism)** LG 24-25,BCM Heights,Vijay Nagar, Indore
info@religioustourism.com www.religioustourism.com Ph: 077719 77799

*For details and other Institute information please contact*
**PDG T. N. (Raju) Subramanian,** Institute Chair
Add: 303, Bhagyodaya, 79, Nagindas Master Rd., Fort, Mumbai- 400001
Email: rtn.subramanian@gmail.com Cell: 9322223732 / 9653623732

Rotary ROTARY INTERNATIONAL

# ஆளுநர்களுடன் சந்திப்பு

ஜெய்ஸ்ரீ



## அவருடைய முக்கியத்துவம் பாதுகாப்பான நீர்

**தெபஷீஷ் மிஷ்ரா,** பட்டயக் கணக்காளர்,
RC புபனேஸ்வர் ராயல், RID 3262

ஒடிஷா மாநிலத்தைப் பெரிய மழை தாக்குவதால், பாதுகாப்பான குடிநீர் என்பது தெபஷீஷ் மிஷ்ராவுக்கு ஒரு முக்கியமான, பெரிய கவலையாக இருந்தது; அவருடைய திட்டங்கள் இந்த இலக்குடன் செயல்படுகின்றன. 'ஜல்தாரா' திட்டம், பள்ளிகளுக்கு RO அமைப்புகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது. 95 சங்கங்களும் தலா ஒரு பள்ளியைத் தத்தெடுத்துக் கொள்ளும். ஒரு நீர் ATMன் விலை ரூ.40,000, அதில் பாதி விலையைச் சங்கம் ஏற்றுக் கொள்ளும், மீதமுள்ள விலைக்கு DDFலிருந்து நிதியளிக்கப்படும், என்றார் அவர். இதேபோன்ற ஒரு வசதி, மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் வழங்கப்படும். இங்கு, இந்த வசதிக் கான சங்கத்தின் பங்களிப்பு TRFக்கு வழிநடத்தப்படும், திட்டத்துக்கு CSR ஆதரவளித்தலின் வழியாக நிதியளிக்கப்படும். இது இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றுவதால், இருவருக்கும் வெற்றி என்றார் அவர்.

2004 முதல் மிஷ்ரா ரொட்டேரியனாக உள்ளார். 2010ல் தன்னுடைய தலைமையாண்டின்போது தான் எப்படிச் சேவைக்குள் இழுக்கப்பட்டோம் என்று அவர் நினைவுகூர்கிறார். ராய்ப்பூரில் நடைபெற்ற எங்களுடைய தலைவர்கள் அறிமுக நிகழ்ச்சியில் RIPN சேகர் மேத்தா பேசினார். யாருக்கேனும் ஒரு கண் மருத்துவமனையை அமைக்க ஆர்வமிருக்குமா என்று அவர் கேட்டார். நான் அதற்குத் தன்னார்வம் காட்டினேன்; அதன்பிறகு, விஷயங்கள் மாறிவிட்டன.'' புபனேஷ்வரிலுள்ள மருத்துவ மனையொன்றின் தளமொன்றில் பொருந்தும் நல்கையொன்றுடன் ஒரு கண் மருத்துவ மனையை அமைத்தார் அவர்; விரைவில் இன்னொரு திட்டமும் அவரைத் தேடி வந்தது. இந்தமுறை, அது ஒரு முழுமையான ரோட்டரி கண் மருத்துவமனை, இதற்காக அவர் பன்னாட்டுக் கூட்டமைப்பான RC சிங்கப்பூருடன் பணியாற்றினார். இந்தப் பகுதியிலுள்ள பல நலிந்த மக்களுக்கு இது சேவை புரிகிறது.'' ஆனால், அவருடைய உள்ளத்தை மிகவும் தொட்ட நிகழ்வு, நியூ சிலாந்தைச் சேர்ந்த ஒரு ரொட்டேரியன் இந்த மருத்துவமனைக்கு வந்தபோது நிகழ்ந்தது. இந்த மருத்துவ மனையால் பலன் பெற்ற வயதான ஒரு மூதாட்டி என் தலையில் தன் கையை வைத்து என்னை ஆசிர்வதித்தார், அவர் தன்னுடைய பேரப்பிள்ளைகளைப் பார்க்க உதவிய ஒரு கண்புரை அறுவைச்சிகிச்சைக்காக எனக்கு நன்றி தெரிவித்தார். இந்த நிகழ்வை அவர் பதிவுசெய்துள்ளார். சியோல் மாநாட்டில் நாங்கள் சந்தித்தபோது, தன்னுடைய நாட்டில் பல சங்கங் களில் அவர் இந்த வீடியோவைக் காட்டியதாகவும், அதைப் பார்த்து ஊக்கம் பெற்ற ரொட்டேரியினர் பல்லாயிரக்கணக்கான தொகையை நன்கொடையாக வழங்கியதாகவும், அதை அவர் தேவையுள்ள பிற சங்கங்கள் பலவற்றுக்குப் பங்களிப்பாக வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். அது உண்மையில் என்னை உலுக்கிவிட்டது என்கிறார் மிஷ்ரா.

இந்த மாவட்டத்துடைய திட்டமான 'பார்வை 30,000', தேவையுள்ள 30,000 மக்களுக்குக் கண்புரையைக் குணப்படுத்தும் என்று அவர் நம்புகிறார். பெருநிறுவன நிதிவழங்கலின்வழியாக 200 பள்ளிகளுக்கு வகுப்பறை அமர்பொருட்களை வழங்குதல், மாவட்டம் முழுவதும் பெரிய அளவில் மருத்துவ முகாம்களை நடத்துதல் ஆகியவையும் அவருடைய திட்டப்பட்டியலில் உள்ளன.

உறுப்பினர் எண்ணிக்கையை 10 சதவிகிதம் அதிகரிக்க இயலும் என்றும் மிஷ்ரா நம்புகிறார். பல திட்டங்களின்வழியாக, 95 சதவிகித உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்து டன் அவர் இயங்கிவருகிறார்; அந்தத் திட்டங்களில் ஒன்று, ஏற்கெனவே உள்ள ரொட்டேரியன்கள் புதிய ரொட்டேரியன்களுக்கு வழிகாட்டுவது.

TRFக்கான அவருடைய இலக்கு, $3.5 லட்சத்தைத் திரட்டுவது. TRFக்குப் பெருநிறுவனங்களிலிருந்து பெரிய அளவில் ஆதரவைப் பெற இயலும் என்று அவர் நம்புகிறார். ■

## எடுத்துக்காட்டாக இருந்து வழிநடத்துதல்



**A K நடேசன்,** கல்வித்துறை நிர்வாகி, RC கொமாரப்பாளையம், RID 2982

அவர் விரைவில் AKS உறுப்பினராவார், அநேகமாக அவருடைய மாவட்டத்தில் இதைச் செய்கிற முதல் நபராக அவர்தான் இருப்பார். சமீபத்தில், TRF அறங்காவலர் தலைவரான கேரி ஹுவாங் அவர்களிடமிருந்து AKS அங்கீகாரத்தைப் பெற்று அலங்கரிக்கப்பட்டபோது, நடேசன் பரவசமடைந்தார். 2000லிருந்து ரோட்டரியில் உள்ள இவர் NSSஉடன் இணைந்து செயல்பட்டவர். RID 5330ன் PDG சேஹுப் எலவாரால் (இவரும் ஓர் AKS வட்ட உறுப்பினர்தான்) ஊக்கம் பெற்றவர், ஆகவே, TRFக்கு DG தாராளமாகப் பங்களிப்பது இயல்புதான். ஐந்தாண்டுகளுக்கு முன்னால், RC சான் பெர்னார்டினோ சன்செட் உறுப்பினரான எலாவரால் ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்துக்காக எங்களுடன் தங்கினார்; உலகெங்குமுள்ள மக்கள் வாழ்க்கையில் அறக்கட்டளை நிகழ்த்தும் சிறந்த மாற்றத்துக்காக அதைப் புகழ்ந்தார். உலகத்தின் காயங்களை ஆற்றுவதற்கு அறக்கட்டளைக்கு நாம் உதவவேண்டும் என்று சொல்வார், அது எனக்குள் ஆழமாகப் பதிந்தது என்கிறார் நடேசன். அவருடைய பங்களிப்பு, நலம், தூய்மை மற்றும் அடிப்படைக் கல்வித் திட்டங்களுக்கு உதவும்.

சங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து, மாவட்டத்தில் குறைந்தபட்சம் 30 பள்ளிகளுடைய தரத்தை மேம்படுத்துகிற ஒருங்கிணைந்த பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை முன்னிறுத்துவதிலும் நடேசன் ஆர்வமாக உள்ளார். மாமோகிராஃபி வேன் மற்றும் டயாலிசிஸ் வசதிகளும் திட்டப் பட்டியலில் உள்ளன. 100 மகிழ்ச்சிப்பள்ளிகள், 100 ரோட்ராக்ட் சங்கங்கள், 100 இன்ட்ராக்ட் சங்கங்கள் மற்றும் 50 லட்சம் மரக்கன்றுகளை நட்டுப் பராமரித்தல் ஆகியவை ரோட்டரி இந்தியாவுடைய நூற்றாண்டைக் கொண்டாடுவதற்கான யோசனைகள்.

TRF பங்களிப்பு இலக்கான 7 லட்சத்தையும், 10 சதவிகித உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பையும் எட்ட இயலும் என்றார். ரொட்டேரியன்களுடன் ஊடாடுவதற்காகச் சுவையான திட்டங்களை உருவாக்கி, 100 சதவிகிதப் பேரைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் இயங்கிவருகிறார். ரூ.200 மதிப்புள்ள 60,000 பங்களிப்புப் படிவங்களைப் பள்ளிகள், கல்லூரிகளுக்கு விநியோகித்து, அதன் மூலம் போலியோவுக்கு நிதி திரட்டவேண்டும் என்றும் திட்டமிடுகிறார்.

அவருடைய கனவுகள், மாவட்டத்தை உயர்த்துவது, தன்னுடைய குழுவினர் மத்தியில் கொடுக்கும் பழக்கத்தைக் கற்பிப்பது.■

## ரொட்டேரியென்களின் ஆர்வத்தைக் கவனித்துக்கொள்ளுதல்



**Dr சமீர் ஹரியானி,** பல் மருத்துவர், RC பெங்களூர் தென்மேற்கு, RID 3190

எனக்கு ரோட்டரி மிகவும் பிடித்திருக்கிறது. இந்த 22 ஆண்டுகளில் ஒவ்வொரு மாவட்டச் செயல்பாட்டையும் மகிழ்ந்து அனுபவித்திருக்கிறேன் என்கிறார் சமீர் ஹரியானி. இவர் 24 வயதில் ரோட்டரியனாக ஆனவர். ரோட்டரியுடைய மிகச்சிறந்த நினைவுகள், 2012ல், பன்முகத் திறமைகளைக் கொண்ட நான்கு இளைஞர்களுடைய ஒரு குழுவை ஒரு GSEல் ஜெர்மனிக்கு வழிநடத்திச் சென்றது. அவர் கொண்டாடுகிற இன்னொரு கணம், வெளி நீட்சிக்கான இயக்குநராக அவர் பணிபுரிந்த காலகட்டம். அப்போது அவருடைய மாவட்டம் ஒரே ஆண்டில் 52 புதிய சங்கங்கள், 1,900 புதிய உறுப்பினர்களை நிறுவி உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சியில் ஓர் உலக சாதனையைப் படைத்தது. 2015-16ல் நாங்கள் 220 நாட்கள் பயணத்தில் இருந்தோம், ரோட்டரி சங்கங்களை நிறுவுவதற்காகச் சாத்தியமுள்ள 120 இடங்களுக்குச் சென்றோம், என்று சிரிக்கிறார் ஹரியானி.


இந்த ஆண்டு, உறுப்பினர் எண்ணிக்கையை 12 சத விகிதம் அதிகரிக்க வேண்டும் என அவர் விரும்புகிறார். அதே சமயம், உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்வது தான் சவால் என்றும் உடனே சுட்டிக்காட்டுகிறார். அவர்கள் ரோட்டரியில் தொடர்ந்து இருப்பதற்கான, அதை விரும்புவதற்கான காரணங்களை நாம் கண்டறிய வேண்டும். சில நேரங்களில், நாம் சொந்த ரொட்டேரியன்களையே மறந்துவிடுகிறோம், அவர்களுடைய ஆர்வங்களைக் கருத்தில் கொள்வதில்லை என்று தோன்றுகிறது.'' ஆகவே, இந்த ஆண்டில் அவர்களுடைய குடும்பத்தினரையும் இதில் பங்கேற்கச் செய்ய நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

TRF இலக்குகளைப் பொறுத்தவரை, சென்ற ரோட்டரி ஆண்டில் Rtn D ரவிசங்கருடைய மிகப்பெரிய ரூ.100 கோடிப் பங்களிப்பால் அவருடைய மாவட்டம் ஓர் உச்சப் பங்களிப்பாளராக இருந்ததையும், இப்போது அது குறைந்தபட்சம் ஐந்து சதவிகிதம் அதிகமாகப் பங்களிக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படும் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்கிறார். ''நாங்கள் இதுவரை 1 மில்லியன் மதிப்புள்ள உறுதிப்பாடுகளைப் பெற்றுள்ளோம்,'' என்றார்.

ரோட்டரி இந்தியாவின் நூற்றாண்டுத் திட்டமாக மாவட்டம்முழுவதும் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்படும். இப்போது இது ஒரு நாடுதழுவிய திட்டமாகிவிட்டது. இந்தியாமுழுவதும் ஒரே நாளில் ஒரு மிகப்பெரிய மரக்கன்று நடுதல் இயக்கம் திட்டமிடப்படுகிறது, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மரக்கன்றுகளைப் பராமரிப்பதும் இந்தத் திட்டத்தில் உண்டு.''

ஹரியானியுடைய மனைவி ரூபாவும் இந்தச் சங்கத்தின் ஓர் உறுப்பினர்; இன்னர் வீல் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.■

## பொறுப்புள்ள இளைஞர் படையை வடிவமைத்தல்



R **மாதவ் சந்திரன்,** IT வலைப்பின்னலாக்கம்
RC கொச்சின் டவுன்ட்டவுன், RID 3201

2001ல், ரோட்டரியில் சேர்ந்தார் இவர். ரோட்டரியில் அவருடைய சிறந்த நினைவுகளில் ஒன்று, 2007ல் சங்கத் தலைவராக இருந்தபோது அவர் தன்னுடைய சங்கத்தை 100 சதவிகிதம் PHF ஆக்கியது, அப்போது அதைப்பற்றி யாரும் கேள்விப்பட்டிருக்கக்கூட இல்லை. சங்கம் அமைத்த கான்க்யூர் அறக்கட்டளை படிப்படியாக வளர்ந்து, இப்போது ரூ.30 கோடி மதிப்புள்ள ஒரு தனி அமைப்பாகியிருப்பதை எண்ணி அவர் மகிழ்கிறார். ‘‘நாங்கள் நிறையப் புற்றுநோய், சிகிச்சைகளைச் செய்கிறோம்,’’ என்றார் மாதவ் சந்திரன்.

“திட்டம் 2020 பொறுப்புள்ள இந்தியா” என்ற ஒரு சிறப்புத் திட்டத்தின் வழியாக இளைஞர்களுக்கு மதிப்பீடு களைக் கற்றுத்தருவதில் ஆர்வமாக இருக்கிறார் சந்திரன். இதுவரை, மாவட்டம்முழுவதும் கிட்டத்தட்ட 100 பள்ளிகளுடன் சங்கங்கள் ஒப்பந்தம் அமைத்துள்ளன, அங்கெல்லாம் வசதிகளுக்கு ஆதரவளிப்பதுடன், ரொட்டேரியன்கள் மாணவர்களை மேம்பட்ட குடிமக்களாக ஆக்குவதற்காக இரண்டு நிமிட வீடியோக்கள் அல்லது சிறுகதைகளைக் காண்பிக்கிறார்கள். இந்தத் திட்டத்துக்காகமட்டும் ஓர் இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது; இந்த ஆண்டு நிறைவடைவதற்குள் இது 800 பள்ளிகளைச் சென்றடையும் என நம்பப்படுகிறது. அவர் கவனம் செலுத்தும் இன்னொரு திட்டம், மனிதப் பால் வங்கிகளை அமைத்தல்.

சென்ற ஆண்டில் அவருடைய மாவட்டத்தில் 5,700 உறுப்பினர்கள், 145 சங்கங்கள் இருந்தன; இன்னும் 600ஐச் சேர்த்தால் உலகின் மிகப்பெரிய மாவட்டமாகிவிடலாம் என்று DG தன் குழுவை ஊக்கப்படுத்தியுள்ளார். ‘‘ஆனால், உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் நான் தீவிரக் கவனம் செலுத்தவேண்டும்.’’ கட்டாயத் துணைவர்-பங்கேற்பு மற்றும் பெண் உறுப்பினர் சேர்க்கைக்கு அவர் ஓர் உந்துதலை வழங்கியுள்ளார். ‘‘என் மனைவி சுஜாதா என்னுடைய சங்கத்தின் வருங்கால தலைவர். அவர் பெண்கள் பங்களிப்பைப் பெரிய அளவில் தூண்டுகிறார்.’’

TRF பங்களிப்பைப் பொறுத்தவரை, சென்ற ஆண்டு திரட்டப்பட்ட $1.03 மில்லியனைவிட அதிகமாகத் திரட்டுவதில் ஆர்வமாக இருக்கிறார் சந்திரன்; ஒவ்வொரு ரொட்டேரியனும் தன்னால் இயன்றதை அறக்கட்டளைக்குப் பங்களிக்கவேண்டும் என்று ஊக்குவிப்பதன்மூலம் இதை எட்டுவதற்குத் திட்டமிடுகிறார். ■

## இவருடைய முக்கியத்துவம், குழந்தைகள் நலன்

Dr **தெபஷீஷ் தாஸ்,** குழந்தைகள் மருத்துவர், RC ஷில்லாங், RID 3240



இவர் ரொட்டேரியனாக ஆவதற்கு முன்பாகவே, அவருடைய பணி அவரை ரோட்டரியை நோக்கி இழுத்தது. ‘‘நான் மருத்துவ முகாம்கள், NIDக்களில் தன்னார்வலராகப் பதிவுசெய்துகொள்வேன்; அப்போதைய DG மனஸ் சௌத்ரியால் ஊக்கம் பெற்று 2003ல் ரோட்டரியில் சேர்ந்தேன்.’’

ரோட்டரியுடைய இதய அறுவை சிகிச்சை திட்டங்களை தாஸ் விரும்புகிறார்; தன்னுடைய மருத்துவமனையான தி சில்ரன்ஸ் ஹாஸ்பிடல் (சிறுவர் மருத்துவமனை) குழந்தைகளுக்குப் பிறவி இதய நோய்கள் உள்ளனவா என்று வடிகட்டுகிறது, பின்னர் அவர்கள் திருத்தச் சிகிச்சைக்காகத் துர்காபூர் அல்லது தில்லிக்கு அனுப்பப்படுகிறார்கள் என்று மகிழ்கிறார். அறக்கட்டளைக்கு அவருடைய சமீபத்திய பங்களிப்பு, ஹெய்டியைச் சேர்ந்த 10 குழந்தைகளுக்கு, இந்தியாவில் இதய அறுவைச்சிகிச்சை செய்ய பயன்படுத்தப்படும்.

தற்போதுள்ள 3,000 உறுப்பினர்களுடன் 10 சத விகிதத்தைச் சேர்க்கவேண்டும் என்ற இலக்குடன் பணியாற்றுகிறார் அவர்; பெண் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை வெறும் 13 சதவிகிதம் தான்; ‘‘சங்கத் தலைவர்கள் அதிகப் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்க்கவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.’’

TRFக்குத் தன்னுடைய மாவட்டத்தின் பங்களிப்பு தாஸுக்கு நிறைவளிக்கவில்லை. கடந்த 4-5 ஆண்டுகளில் நாங்கள் சிறப்பாகச் செயல்படவில்லை. இந்த ஆண்டுக்கான என்னுடைய இலக்காகிய $5 லட்சத்தை நான் எப்படி எட்டுவேன் என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை.’’

இந்தியாவில் ரோட்டரியுடைய 100 ஆண்டுகளைக் கொண்டாடுவதற்காகக் கௌஹாத்தியில் ஒரு ரோட்டரி கண் மருத்துவமனை, ரத்த வங்கி மற்றும் ஓர் எலும்பு மறுவாழ்வு மையத்தை அமைக்கும் தன்னுடைய திட்டங்களை அவர் மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்கிறார். 200 பள்ளிகளுக்கு வின்ஸ் (WinS) அம்சங்களை வழங்குவதும் அவருடைய திட்டப்பட்டியலில் உள்ளது.■

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

Rotary PEOPLE OF ACTION

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு

ஜெய்ஸ்ரீ



*திட்டத்தலைவர் விஜயலஷ்மி நாயர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வீட்டு சாமான்கள் வழங்குகிறார்.*

2018 ஆகஸ்டில் கேரள, கர்நாடக மக்களுடைய வாழ்க்கைகளை, வாழ்வாதாரங்களை அடித்துச் சென்ற வெள்ளக் கொடுமைகளை யாரால் மறக்கமுடியும்? மிகப்பெரிய அளவில் வெள்ளத்தைச் சந்தித்த கேரளப் பகுதிகளில் சில, குட்டநாடு, ஆலப்புழை. நாடு முழுவதுமுள்ள ரோட்டரியன்கள் இந்தத் தருணத்தில் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினார்கள்; இரு மாநிலங்களிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பணமும் பொருளும் தந்து உதவினார்கள். வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு முன்னால், இந்த ஆகஸ்டிலும் கேரளத்தைப் பெருமழை தாக்கியது. இப்போதும், வானில் கருமேகங்கள் திரண்டால் பலர் அஞ்சி நடுங்குகிறார்கள் என்கிறார் RC ஆலப்புழை, RID 3211 உறுப்பினரான விஜயலஷ்மி நாயர்.

குட்டநாட்டின் மையத்தில் 1,500 குடும்பங்களைக் கொண்ட ஒரு குடியிருப்புப் பகுதி காயல்புரம். அங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல கட்டங்களில் மறுவாழ்வு அளிக்கும் பணியை இந்தச் சங்கம் மேற்கொண்டது. அதற்கு இவர் திட்ட ஒருங்கிணைப்பாளராகத் தலைமை தாங்கினார். பெருமழையின் போது இங்கு மிக மோசமான சூழ்நிலையை நாங்கள் கண்டோம், ஆகவே, இந்த இடம் எங்களுடைய இதயங்களுக்கு நெருக்கமானது என்றார் அவர். ரொட்டேரியன்கள் மழைக்கு நடுவில் நடந்துசென்று, அல்லது, படகுகளில் பயணம் செய்து மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றார்கள், அல்லது, வெளியேற இயலாமல் தவித்த மக்களுக்கு உணவு, நீரைக் கொண்டு சென்றார்கள் என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் இந்தப் பகுதியைத் தத்தெடுத்துக் கொண்டுள்ளோம்; முதல் கட்டத்தில், மோசமாகச் சேதமடைந்துள்ள எட்டு வீடுகளைப் பழுதுபார்க்க உதவியுள்ளோம்.'' இங்கு ஒரு புதிய வீடும் கட்டப்பட்டது; தேவையுள்ள மாற்றுத்திறனாளி ஒருவருக்கு வழங்கப்பட்டது. மழைநீர் சேகரிப்பு வசதி மற்றும் RO அமைப்பு ஆகியவை நிறுவப் பட்டன. வெள்ளத்தில் சேதமடைந்த கட்டில்களைச் சரிசெய்வதற்காக, வீடுகளுக்குப் ப்ளைவுட் ஷீட்கள் வழங்கப்பட்டன.

அடுத்த கட்டத்தில், மிகப்பெரிய மருத்துவ முகாம்கள் வரிசையாக நடத்தப்பட்டன, இங்கு வாழ்வோருக்கு நீரால் பரவும் நோய்கள், பொதுவான பிரச்னைகளுக்குச் சிகிச்சையளிக்கப் பட்டது. மெத்தைகள், போர்வைகள், வீட்டுப் பொருட்கள், மளிகைச் சாமான்கள், குழந்தைகளுக்கான எழுது பொருட்கள் வழங்கப்பட்டன.

மூன்றாவது கட்டத்தில், இங்கு வசிப்போருடைய நம்பிக்கையை வளர்க்கும் நிகழ்வுகள் நடைபெற்றன. அன்புக்குரியவர்களை, சொத்துகளை இழத்தல், வீட்டிலிருந்து வெளியேற்றப்படுதல் ஆகியவற்றால் ஏற்பட்ட உளவியல்-சமூகப் பின்விளைவுகள் மோசமானவையாக இருந்தன. தூக்கமின்மை, கெட்ட கனவுகள் ஆகியவை இங்குள்ள மக்களுடைய பொதுவான புகார்களாக இருந்தன; இவர்களுடைய தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு, குறிப்பாக, குழந்தைகள், இளைஞர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளுக்கு நாங்கள் ஏற்பாடு செய்தோம் என்றார் சங்கத்துடைய உறுப்பினரான PO தாமஸ்.

மரங்களின்மூலம் சுற்றுச்சூழலை உயிர்ப்பிப்பதற்காக, சமீபத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் ரோட்டரியன்கள் பலாக்கன்றுகளை வழங்கினார்கள். இந்தப் பகுதியில் தோட்டவேலையும் நெல் விளைவித்தலும் பரவலாகப் பின்பற்றப்படுவதால், பண்ணைத்தொழிலில் ஈடுபடும் குடியிருப்பாளர்களுக்குக் கன்றுகளும் உரமும் வழங்கப்பட்டது.■

Rotary PEOPLE OF ACTION

# மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

ரோட்டரி செய்திக்குழு

RC படான், RID 3292 வழங்கும் PEEF கல்வி உதவித் தொகையைப் பெற்ற தகுதி மிக்க மாணவர்களுக்குக் கமல்மணி கல்விச் சிறப்பு விருதுகள் (KEEA) வழங்கப்படுகின்றன. இச்சங்கத்தின் முதன்மைத் திட்டமான பிரஜாபதி கல்வி மானிய நிதி (PEEF) பொதுப் பள்ளிகளில் பயிலும் தேவையுள்ள மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குகிறது.

KEEA நிதியானது, மறைந்த Rtn கமல்மணி தீக்ஷித் தொடக்க ஆதரவுத் தொகையுடன் 2013ல் அமைக்கப் பட்டது. அதன் பிறகு, சங்கத்தின் மற்றும் தீக்ஷித் குடும்பத்தினருடைய கூடுதல் பங்களிப்புகளால் விரிவடைந்துள்ளது. PEEF கல்வி உதவித்தொகை பெறுவோரிடையே ஒன்பதாம் வகுப்பில் பயிலும் திறமைமிக்க மாணவர்களுக்குச் சான்றிதழ்கள், 10 மாணவர்களுக்கு மொத்தம் `100,000 ரொக்கப் பரிசு களை வழங்கிப் பெருமைப்படுத்து கிறது KEEA.



*பீர் தோர்ஜ் தமங் தன் தாய் மற்றும் ஆசிரியருடன்.*

KEEA விருது விழாவில், முதல் பரிசை வென்ற பீர் தோர்ஜ் தமங், PEEF-ஆதரவு பெற்ற பள்ளிகளிலிருந்து விருது பெற்ற அனைவருடைய சார்பாகவும் படான் உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

தமங் தன்னுடைய கல்வி வெற்றிக்கு இமடோலில் உள்ள ஸ்ரீ மகேந்திர ஆதர்ஷ மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த தன்னுடைய ஆசிரியர்கள், வழிகாட்டி கள், தன்னுடைய மூத்த அண்ணன், தாய் ஆகியோரைக் காரணமாகக் குறிப்பிட்டார். அவருடைய தாய்க்குப் படிக்கும் வாய்ப்பு கிடைக்க வில்லை, அதேசமயம், தன்னுடைய குழந்தைகளை நன்கு படிக்கவேண்டும் என்று ஊக்கப்படுத்தினார்.■

# கொல்கத்தாவில் மருத்துவ முகாம்



ரோட்டரி இந்தியாவுடைய நூற்றாண்டுக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, பேலூர் ரோட்டரி சங்கம், RID 3291, மற்றும் 34 சங்கங்கள் இணைந்து, பூங்காச் சாலை மெட்ரோ நிலையத்தில் ஒரு பெரும் மருத்துவ முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தன. இந்த முகாமில், சுமார் 600 பேரை பயனடைந்தனர்.

இந்தியாவில் ரோட்டரியுடைய 100வது ஆண்டைக் கொண்டாடு வதற்காக, கொல்கத்தாவிலுள்ள அனைத்து ரோட்டரி சங்கங்களும் ஜூன் 2020வரை மருத்துவ முகாம்கள், பெரும் நிகழ்ச்சிகள், தனித்துவமான திட்டங்கள் உள்ளிட்ட பலவிதமான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளன.■

DG *அஜய் அகர்வால் மருத்துவ பரிசோதனைப் பெறுகிறார்.*

# உண்மையாகவே உலகத்தை இணைக்கிறது ரோட்டரி

டாக்கின் ஜமீன்தார்

விடுமுறையில் வெளிநாடு செல்லும்போது பாஸ்போர்ட் தொலைந்தாலே கெட்ட கனவு தான். அது உங்களுடைய சுற்றுலா திட்டங்களை பாதிப்பது மட்டுமல்ல, உங்களை ஒரு பீதி நிலைக்கு தள்ளிவிடும்.

அண்மையில் ஜூலை மாதத்தில் 60 தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுடன் ஒரு நான்கு நாள் பயணமாக கொலலாம்பூர் செல்லும் பொழுது, என் குடும்பத்தின் 4 பாஸ்போர்ட்டு களை-எனது இரண்டு பிள்ளைகள், மனைவி மற்றும் என்னுடையது - தொலைத்த விளைவுகளை சந்திக்க நேர்ந்தது. சுற்றுலா வழிகாட்டியின் அஜாக்கிரதையால் பாஸ்போர்ட்டுகள் வைத்திருந்த எமது பெட்டி தொலைந்து போனது; இது கூட திரும்புவதற்கான விமானம் ஏற விமான நிலையம் அடையும்போதுதான் எங்களுக்கு தெரியவந்தது.

கொலாலம்பூர் ஏர்போர்ட் காவல் நிலையத்தில் தொலைந்து போன பாஸ்போர்ட்டுகளுக்கும் பெட்டிக்கும் ஒரு FIR கொடுத்து எமது ஓட்டலுக்கு திரும்பினோம். அடுத்து வருவது வார இறுதி விடுமுறை நாட்கள். யாரிடம் எப்படி அணுகி தொலைந்து போன பெட்டியையும் பாஸ்போர்ட்டுகளையும் மீட்பது என்று திண்டாடினோம். அப்பொழுதுதான் எங்களைக் காப்பாற்ற உதவிக்கு வந்தது ரோட்டரி. முகநூல் மூலம் ரொட்டேரியன் ஸரீஃப் அவர்களைத் தொடர்பு கொண்டு உள்ளூர் ரோட்டரி கிளப் பற்றி கேட்டோம். ஸரீஃப் உதவினார்.

உடனே, RC கொலாலம்பூர் டிராஜா தலைவர் செட் ஸரிமன், RID 3300, அவர்கள் எங்களை சந்திக்க ஓட்டலுக்கு Rtn சையத் ரெஸ்டா ஷா உடன் வந்தார். அவர்கள் எமக்கு எல்லா உதவிகளும் செய்வோம் என்றும் எமது பெட்டியும் பாஸ்போர்ட்டுகளும் கிடைக்கத் தேவையான நடவடிக்கை களை மேற்கொள்கிறோம் என்றும் கூறினர்.

Rtn தத்தோ ராம் நாயர் எமது நிலையை மலேசிய அரசருக்கு தெரிவித்த உடனே அவருடைய செயலாளர் எம்மை தொடர்பு கொண்டு தகவல்கள் கேட்டறிந்தார். எமது அதிகாரபூர்வ வெளியேறும் நடைமுறைகளுக்கு துரிதமாக ஓகே சொல்லப்பட்டன.

திங்கள்கிழமை காலை, இரண்டு மணி நேரத்தில், எமெர்ஜென்சி சான்றிதழ் (வெள்ளை பாஸ்போர்ட்) கிடைத்தது; அடுத்து எக்ஸிட் பாஸ் நடைமுறையை முடித்தோம். திங்கட் கிழமை இரவு இந்தியா வந்து சேர்ந்தோம். இதுதான் 'ரோட்டரி சக்தி'. ரோட்டரி, அந்நியர்களின் ஒரு பெரிய உலகக் குடும்பம் என்பதனையே இது உறுதிப்படுத்துகிறது.

ரெஸ்டா ஷா எம்முடன் இரண்டு நாட்கள் கூடவே இருந்து, பாஸ்போர்ட் புகைப்படங்களை எடுப்பது, ஆன்லைன் விண்ணப்பப் படிவ நடைமுறையை கைகொள்வது, இன்னொரு FIR அளிப்பது ஆகிய வற்றில் உதவினார். ஞாயிற்றுக் கிழமை ஏர்போர்ட்டில் பின்னிரவு வரை இருந்து 'தொலைந்தது -கிடைத்தது' துறையில் தேடி பிறகு தொடர்ந்து குடியேற்றம் (immigration) அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார்.


அவர் எமது பிள்ளைகளை இங்குள்ள அழுத்தத்தை மறைக்கும் பொருட்டு ஜென்டிங் ஹைலேண்ட்ஸ் க்கும் அழைத்துச் சென்று மகிழ்ச்சியடையச் செய்துள்ளார்.

எமது பாஸ்போர்ட்டுகளும் பெட்டியும் தொலைந்து போனது எமக்கு மிகுந்த மன அழுத்த அனுபவம் கொடுத்திருந்தாலும், உரிய நேரத்தில் உதவிய ரொட்டேரியன்களுக்கு நாம் மனமார நன்றி கூறுகிறோம். KLல் இது ஒரு புதிய உறவு ஏற்படுத்தியது. ரோட்டரி நிச்சயமாக ஒரு விருத் தியடைந்த உலக குடும்பம்தான்.

(கட்டுரை ஆசிரியர் RC பரூச் RID 3060 உறுப்பினராவார்)

**வலதிலிருந்து இடது:** *சய்யது ரெஸ்டாஷா, டாக்கின் ஜமீந்தார், RC கொலாலம்பூர் டிராஜா தலைவர் செட் ஸரிமன் மற்றும் ஜீஹையர், ஜீநேரா, ரிஜ்வானா ஜமீந்தார்.*





# அந்தமான் மழையில் தீவு-தாவல்

கிரண் ஜெஹ்ரா

மழைக்குப் பின் நீங்கள் ஒரு கண்கவரும் வானவில் பார்க்கலாம்! ஆனால் எந்த ஒரு முன்னதான புக்கிங்கையும் செய்யாதீர்கள்-ஓட்டல்கள், படகு சவாரிகள் அல்லது நீர் விளை யாட்டுகள் எதற்கும். ஏனெனில் அந்தமானில், எதுவும் மழையை பொறுத்தே அமைகிறது. கடைசி நிமிட கேன்சலேஷன்களும் ஏற்படலாம்,வங்காள விரிகுடா மற்றும் அந்தமான் கடல் பகுதியில் 572 தீவுகள் கொண்ட அழகான தீவுக் குவிப்புக்கு எமது தேன்நிலவுக்காக செல்வது என திட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு நண்பர் எனக்கும் எனது கணவருக்கும் எச்சரித்திருந்தார். ஆகவே, எதுவுமே புக்கிங் செய்யாமல், வெறும் விமான டிக்கெட்டுகள் மட்டுமே கையில் வைத்துக் கொண்டு நாங்கள் போர்ட் பிளேயர் விமான நிலையத்தை அடைந்தோம். ஐந்து தீவுகளை கண்டு களித்தவுடன், பருவமழை தனது வித்தையை காண்பித்ததனால் நிலம் இளங்கறுப்பும் ஈரமுமாக்கியிருந்தும் இன்னமும் நிறைய செய்யவேண்டியது உள்ளன என எங்களுக்குப் புரிந்தது.

முதல் நாள், ஒரு சுமாரான ஓட்டலில் அறையெடுத்து அடுத்த நாள் காலை 9 மணிக்கு ஹேவ்லாக் செல்ல படகு சவாரி எடுத்தோம். இந்த சவாரி மகிழ்ச்சி தருவதாக அமையவில்லை. பல சுற்றுலா பயணிகள் இச்சவாரியில் கடல் நோய்க்கு ஆளாகினர்.


### ஹேவ்லாக்

ஜனசந்தடி நிறைந்த ஹேவ்லாக் ஜெட்டியில் இறங்கியதும், நாங்கள் ஒரு உள்ளூர் ஆட்டோ ஓட்டுனரை நண்பனாக்கிக் கொண்டு, அவர் மூலம் அருகிலுள்ள வசதிமிக்க கிரீன் வேலி ரிஸார்ட் என்ற ஒரு ஓட்டலில் அறை எடுத்தோம். தென்னை மரங்கள் மத்தியில் காட்டேஜ்கள், பின்பக்கம் கற்கள் குவிந்த ஒரு கடற்கரை, வெப்ப மண்டல மரங்களிலிருந்து தொங்கும் ஊஞ்சல்கள் இவை ஓட்டலின் சிறப்பம்சங்கள். காட்டேஜுக்கான கட்டணம் ஓர் இரவுக்கு ரூ.1,700-இது சிறப்பான பருவ காலத்தில் இரவுக்கு ரூ.4,500 எனவும் ஆகியிருக்கும். பருவமழையின் ஆசிர்வாதத்தில் மூழ்க நாங்கள் விரைவில் கற்றுக் கொண்டோம்-கூட்டம் பிறகு

குறைந்தது, மழைதான் அந்தமானை கண்கவர் வகையிலும் மலிவாகவும் ஆக்குகிறது- கிட்டத்தட்ட 50% அளவுக்கு.

ஓட்டல்கள் வரிசையாக இருப்பதால், உங்கள் விருப்ப உணவுக்கு வெவ்வேறு ஓட்டல்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள வாய்ப்பு கிடைக்கிறது. எங்கள் ரிசார்ட்டில் ஒரே ஒருமுறைதான் சாப்பிட்டோம், காரணம் ஒரு இரவு முழுதும் காலை வரை விடாமல் பெய்த மழைதான். மதிய வேளை அளவில், மழைகோட்டுகள் அணிந்து ஒரு வாடகை ஸ்கூட்டரில் (நாளொன்றுக்கு ரூ.350) தீவை சுற்றிப்பார்ப்பதற்கு நாங்கள் வெளியே செல்ல முடிந்தது. தீவின் கிழக்குப்புறமாக இருக்கும் அற்புதமான ராதாநகர் பீச்சை அடைந்தோம். உயரமான மரங்கள் இடையே ஓட்டிச் சென்றது பிரமாதமாக இருந்தது.

பீச்சில் குளுமையிற்கு பிறகு சூடேற்றிக் கொள்ள, கடற்கரைப் பகுதியில் அமைந்திருக்கும் சம்திங் டிஃபெரென்ட் (Something Different) என்ற ஒரு ரெஸ்டோ-பார்க்கு நேராக நீங்கள் சென்று விடலாம். ஒரு பைனாப்பிள் கோப்பையில் பைனா கொலாடா வை அருந்தி கண்டிப்பாக நீங்கள் வெங்காயத்தாள் இஞ்சி சேர்க்கப்பட்ட மீனை சுவைக்க வேண்டும். ஓட்டல் நடைபாதை வழியே ஒரு அமைதியான கடற்கரை மற்றும் பவளப்பாறைகளை பார்க்க நீங்கள் வெளியே செல்ல முடிவெடுத்தால், பவளப் பாறை காண கூடுதல் கட்டணம் ரூ.100 வசூலிக்கப்படும். எங்கள் ஸ்கூபா குதிப்புக்கு, அருகிலுள்ள விளையாட்டு மையங்களுக்கு சென்று சீசன் இல்லாத இக்காலத்தில் என்ன இருக்கிறது என பார்த்தோம். மூன்று மையங்களுக்கு சென்று ஸ்கூபா பயிற்சி, அரை மணிநேரத்துக்கு 10 மீட்டர் குதித்தல், நீருக்கடியில் புகைப்படம், வீடியோ உள்பட ஆளுக்கு ரூ.2,000க்கு ஒப்புக்கொண்டோம் (மாறாக இது 4500). பாதுகாப்பு குறித்த அறிவுரைக்குப் பிறகு, கடலின் 8.5 மீட்டருக்கடியில் நாம் இருந்தோம்! சிறிய சிவப்புத் தேள் மீன், மஞ்சள் வால் ஸ்னாப்பர்கள், வண்ணமய கிளிமீன்கள், பாசிகளை தின்று கொண்டிருக்கும் அழகான சிறிய மஞ்சள் நிற பெட்டி மீன், சைப்ரெஸ் மரங்கள் வடிவத்தில் சிவப்பு-ஆரஞ்சு வண்ணப் புழுக்கள் ஆகியவை அந்தமானில் இது தவறவிடக் கூடாத ஒன்றாக்கும்.



ராஸ் தீவுகளின் அழிவுகள்.



யோகா செய்யும் ஒரு நாய்.

### நீல் தீவுகள்

நீல் தீவுகளுக்கு செல்ல அரசு படகு சவாரி எடுத்துக் கொள்ளுங்கள். உள்ளூர் மக்களுக்கு சவாரி கட்டணம் ரூ.62 என இருந்தால் சுற்றுலாப் பயணிகள் ரூ.550 கட்டணம் செலுத்த வேண்டும். முழு சவாரி காலத்துக்கும் நீங்கள் மேல்தளத்தில் உட்கார்ந்து கொள்ளலாம் மேலும் நீங்கள் கடல்நோய்க்கு ஆளானால், படகு ஓட்டுபவர்களில் ஒருவர் உங்களை எலுமிச்சையும் உப்பும் கொண்டு வந்து தருவார். போர்ட் பிளெய்ர்க்கு தெற்காக 37 கி.மீ தொலைவில் உள்ள நீல், அந்தமான் தீவுகளின் தாவரக் கிண்ணம் என குறிப்பிடப்படுகிறது. பெரிய அளவு ஓட்டல்கள் எதுவும் நீல் தீவில் கிடையாது. ஒரு சுமாரான மீன் சாப்பாடு ரூ.140லிருந்து



தொடங்குகிறது. கடுகு வெண்டைக் காய் மிகவும் சுவையானது. மிகவும் அற்புத சுவை கொண்ட ரொஸகுல்லாக்கள் நீல் தீவில் மட்டுமே கிடைக்கின்றன.

எவருமே அண்டாத பவளப் பாறைகள், யாருமே நடமாடாத வெள்ளை மணல் கடற்கரைகள் மற்றும் வெப்பமண்டல மரப்பகுதிகள். நாய்களும், அணில்களும் யோகாப் பயிற்சி செய்வதை நீங்கள் கவனிக்கலாம்! உள்ளூர் வழிகாட்டிகள் அவர்களை பயன்படுத்திக் கொள்ள தொந்தரவுகள் தந்தாலும், நீல் தீவில், இயற்கை பவள பாலத்துக்கு செல்ல, கடற்கரை 2ல் நீங்கள் தனியாக நடந்து செல்லுங்கள். இந்த பாலமே ஒரு பெரிய அழகாகும் மேலும் ஆழமற்ற கல் நிறைந்த கடற்கரையில் அற்புதமான கடல் வாழ் உயிரினங்கள் நிறைந்துள்ளன. பச்சை கடற்கரை நண்டுகளுடன் நூற்றுக்கணக்கில் நீங்கள் ஸ்டார் மீன்களையும் கடல் குக்கும்பர்களையும் பார்க்கலாம்.

### ரோஸ் தீவின் அழிவுகள்

போர்ட் பிளேய்ர்லிருந்து ஒரு 15 நிமிட படகு சவாரி தூரத்தில் உங்களுக்குக் கிடைப்பது ரோஸ் தீவு. இங்கு நீங்கள் மூன்று மணிநேரம் செலவழித்து தற்போது அத்தி மரங்கள், அரச மரங்கள், பச்சைப் பாசி போன்றவைகளால் மூழ்கிக் கிடக்கும் ஒரு காலத்தில் ஆங்கிலேயர்கள் வாழ்ந்த இந்த ரோஸ் தீவு இன்று பயங்கரமான நிலையில் அழிந்து போய் கிடப்பதை காணலாம். மந்த நிலையை மழை கூடுதலாக்க ஒரு பீதி ஏற்படுத்தும் அழிவுப் பகுதிகளை பார்க்க தீவின் மேற்குப் பகுதியில் இருக்கும் 1857ம் ஆண்டின் புதைகாட்டுக்கு சென்று பாருங்கள். முக்கியப் பாதையிலிருந்து சற்றே விலகிச் சென்றால் மக்கள் நடமாட்டத்திலிருந்து உங்களை விலக்கி கடலுக்கு அப்பால் உள்ள ஒரு பாலம் உங்களை ஒரு பழைய கலங்கரை விளக்கம் மற்றும் ஒரு தனியான மாலுமியின் சிலைக்கு கொண்டு செல்லும்.

2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் பெரும்பாலான பாதிப்பை ஏற்றுக்கொண்டு ஒரு பெரிய அழிவிலிருந்து போர்ட்பிளேய்ர் நகரத்தை காப்பாற்றியது இந்த ரோஸ் தீவுதான். ஒரு ஸ்கூபா குதிப்பு அல்லது ஸ்னார்கெலிங் மேற்கொள்வது என்று முடிவெடுத்தாலொழிய நார்த் பே தீவுக்கு செல்லும் நேரம் வீண்தான் மேலும் மழை காலத்தில் மவுன்ட் ஹாரியெட் முழுதும் அட்டைகள் நிரம்பி வழியும் என்பதால் அங்கு செல்லவேண்டாம் என முடிவு செய்தோம்.

### பரடாங்க்

மிகவும் மகிழ்ச்சி அளித்த பயணம் போர்ட் பிளேய்ர்லிருந்து 150 கி.மீ தொலைவில் உள்ள பரடாங்க் தீவுகள். ஜிர்காதங்க் பகுதிக்கு சென்றடைந்ததும், ஒரு அணிவகுப்பு உங்களை 49 கி.மீ தூரத்துக்கு அழைத்துச் சென்று ஜார்வா ரிசர்வ் வனத்தை சேர்க்கிறது. போகிற வழியில் நீங்கள் எங்கும் இறங்கவும் முடியாது எந்த புகைப்படமும் எடுக்கக் கூடாது. ஜார்வா ரிசர்வ் வனத்தின் மறுபக்கம்



*செல்லுலார் சிறை.*

உள்ளது மிடல் ஸ்ட்ரெய்ட் ஜெட்டி. 15 நிமிடங்களில் உங்களை ஒரு படகு, ஸ்ட்ரெய்ட்டின் மறுபக்கத்துக்கு அழைத்துச் செல்கிறது. சிறிய படகுகள் பரடாங்கின் சதுப்புநிலக் காடுகளுக்கு அழைத்துச் செல்லும். இங்கிருந்து ஒரு கடினமான 1.8 கி.மீ நடை, உங்களை இயற்கையான சுண்ணாம்புகல் குகைகள் அடையச் செய்யும். இயற்கையாக உருவான இவைகள் உங்களை மலைக்க வைக்கும் மேலும் உங்கள் வழிகாட்டியுமான ரிசர்வ் வனத்திலிருந்து நாங்கள் திரும்ப வந்து கொண்டிருக்கும்போது இரண்டு ஜார்வா இனத்து ஆண்கள் ஒரு பெரிய பச்சை இலையின் கீழ் மழையில் நடந்து சென்று கொண்டிருப்பதை பார்த்தோம்.

### போர்ட் பிளேயர்

நகரத்து பயணத்தில், இந்திய துணைகண்டத்தில் ஆங்கிலேயர் ஆட்சியின் இருண்ட காலத்தை நினைவு கூரும் செல்லுலர் ஜெயிலும் அடங்கும். சுதந்திர வீரர்களை தனியாக தனி அறைகளில் அடைத்து வைத்ததனால் இந்த சிறைக்கு செல்லுலர் ஜெயில் என அழைக்கின்றனர். சில அருங்காட்சியகங்களை பார்வையிட்ட பிறகு, எஞ்சிய மாலை வேளையை கழிக்க நீங்கள் கோர்பின் கோவ் பீச்சுக்கு செல்லலாம். பல ஜப்பானிய இரண்டாம் உலகப்போர் குழிகளை தாங்கியிருக்கும் இது எவரும் விரும்பும் மிகவும் பிரபலமான பீச்சாகும்.



ஞாயிற்றுக்கிழமை சந்தை



முறையே 30, 35 கி.மீ தொலைவில் உள்ள வான்டூர் மற்றும் சிடியா டாபு ஆகியவை கட்டாயம் பார்க்கவேண்டிய பீச்சுகள். வான்டூர் செல்லும் வழியில் 15 ஆண்டுகளுக்கு முன்னால் சுனாமி காரணமாக இன்னமும் கடல்நீர் வெள்ளத்தால் சூழ்ந்து இருக்கும் அழிந்து போன வீடுகள், வயல்கள் ஆகியவற்றை பார்க்க நேரிடுகையில் எமது ஆட்டோ ஓட்டுனர், 2004 சுனாமியிலிருந்து தப்பித்த பல கதைகளை கூறிக் கொண்டே வந்தார். ஒட்டும் தன்மையுடைய நிலம் நீரையும் எமது நினைவையும் உலர விடுவதில்லை. கிட்டத்தட்ட 10,000 உயிர்கள் இழந்தன அப்பொழுது என்றார் மனம் கனக்க அவர்.

நாம் இங்கு தங்கியிருந்த ஒவ்வொரு இரவும் போர்ட் பிளேயர் மார்க்கெட்டுகளில் சுற்றினோம். இம்மார்க்கெட்டுகளை பெரும்பான்மையாக நடத்துவது பெண்கள்; நிரம்பியிருப்பது அப்பொழுதுதான் பிடித்துக் கொண்டு வரப்படும் கடல் உயிரினங்கள். இங்கு விற்கப்படும் காய்கறிகளும் பழங்களும் புத்துணர்ச்சியுடன் மழையில் பளபளப்பாக காட்சி தரும். பயணத்தின் முடிவில், ATMகள் எங்கெங்கு உள்ளன என்று எங்களுக்கு தெரிந்தது, நாங்கள் தங்கியிருந்த பகுதியில் சுற்றிக்கொண்டிருந்த நாய்களுக்கு பெயர்களையே வைத்துவிட்டோம், ஜெட்டியருகே மீன் விற்பனை செய்து கொண்டிருந்த பெண் ஒருவருடன் நண்பர்களாகி விட்டோம், சோமுவின் பானிபூரி கடை திறக்கும் நேரத்தை தெரிந்து கொண்டு விட்டோம் மற்றும் புவனேஸ்வரி அக்காவின் எலுமிச்சை சோடா கடை இருக்கும் இடத்தை கண்டறிந்து விட்டோம்.

இளநீர் குடிப்பது, வாழைப்பழம் சாப்பிடுவது, ஒவ்வொரு ஓட்டலிலும் விற்கப்படும் வறுத்த மீனை உண்பது என்பது வழக்கமாகிவிட்டது. ஒன்றுமறியாதிருந்த இந்நிலம் திடீரென நமது வீடு தரும் புத்துணர்ச்சி யை தந்தது, அதன் விளைவாக இன்னும் கொஞ்ச நாட்கள் கூடுதலாக தங்கியிருக்கலாமே என்ற ஆசையும் பிறந்தது. ■

# உங்கள் இதயம் அழகால் திறக்கட்டும்

பரத் — ஷலன் சவூர்

மனம் காலியாக உள்ளபோது, உலகின் மாயமான, நெஞ்சைத் தொடுகிற அழகான பொருட்கள் அனைத்தும் இதயத்தை ஆழமாக நெகிழச்செய்கின்றன. சமீபத்தில், 'கானரி டா மாட்டா' என்ற பழுப்பான சிறு பறவையொன்றின் வீடியோவை நான் பார்த்தேன். இந்தச் சிறு பறவை ஒரு மரக்கட்டையில் அமர்ந்திருக்கிறது, அரைவட்ட விசிறியொன்றைப்போல் தன்னுடைய இறக்கைகளை விரிக்கிறது, வானத்தைப் பார்த்தபடி அவற்றை சொர்க்கத்தை நோக்கி உயர்த்துகிறது. அப்பறவை இதை ஒருமுறை செய்தது. இருமுறை செய்தது. பின்னர் மூன்றாவதுமுறையும் செய்தது நாள்தோறும் காலையில் அப்பறவை இதைச் செய்கிறதாம். அதன் அழகு என் இதயத்தை நிரப்பும்போது, நான் பேச்சற்றுப்போகிறேன்.

வாழ்க்கை மர்மமானவகையில், மந்திரமானவகையில் அழகானது. அதன் அழகு உங்களுடைய ஒவ்வொரு நாளிலும் நுழைய அனுமதியுங்கள். ஏனெனில், அழகை அனுபவிப்பது என்பது, உங்களுடைய உள் நலனை ஒரு முழுமையான, மகிழ்ச்சியான வகையில் முழுவதுமாக அனுபவிப்பதாகும். சொல்லப்போனால், தூய அழகு உடல்நலப் பிரச்னைகளை ஆற்றக்கூடிய ஓர் ஆற்றலாகும். நாம் நம்முடைய மூச்சை அதன் அற்புதமான அதிர்வுகளுடன் உள்ளிழுக்கிறோம், நம்முடைய அதி ஆழங்கள்வரை அது சென்று கலக்கச்செய்கிறோம்.

ஓர் உண்மைப் பரிசோதனை. அழுத்தம் நம்மை எப்படிப் பாதிக்கிறது என்பது பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். அழகும் அதே வழியில்தான் செயல்படுகிறது, ஆனால், எதிர்மறையான தாக்கத்தை உண்டாக்குகிறது. நமக்குள் எல்லாவிதமான கிருமிகள், பாக்டீரியாக்களும் எப்போதும் உள்ளன என்பது நமக்கு ஏற்கெனவே தெரியும். இந்தச் சிறிய, எப்போதும் மிதந்துகொண்டிருக்கிற உயிர்களுடன் நாம் எப்படிச் சேர்ந்து செயல்படுகிறோம் என்பதைப்பற்றி நாம் இப்போது கொஞ்சம் அதிகம் தெரிந்துகொள்கிறோம். ஓர் அறிவியலாளர், இரண்டு பெட்ரித் தட்டுகளில் செல்களை வைக்கிறார். ஒரு தட்டில் அவர் ஊட்டச்சத்துகளைச் சேர்க்கிறார், இன்னொன்றில், நச்சுப்பொருட்களைச் சேர்க்கிறார். அரைமணிநேரத்துக்குப்பிறகு, முதல் தட்டில் செல்கள் ஊட்டச்சத்துகளை நோக்கி நகர்ந்துள்ளதை அவர் கவனிக்கிறார் இரண்டாவது தட்டில், செல்கள் நச்சுப்பொருட்களிடமிருந்து விலகி நகர்ந்துள்ளன, அவை அதிகம் நெருங்கியுள்ளன! ஓர் அழகிய சூரிய உதயத்தையோ, 'கானரி டா மாட்டா'வுடைய ஊக்கம் தரும் செயல்பாடுகளையோ நீங்கள் பருகும்போது உங்களுக்குள் என்ன நடக்கிறது என்பதைக் கொஞ்சம் கற்பனை செய்துபாருங்கள்! உங்கள் மனம் ஹைப்போதலாமஸுக்கு, 'இது ஓர் ஆதரவான சூழல்' என்று சமிக்ஞை அனுப்புகிறது. அது இந்த நேர்விதச் சமிக்ஞைகளைப் பிட்யூட்டரிச் சுரப்பிக்கு அனுப்புகிறது, அது இவற்றை உடலிலுள்ள அனைத்துச் செல்களுக்கும் அனுப்புகிறது.

சிலிர்க்கவைக்கும் ஓர் அனுபவத்தை நீங்கள் உணரும் போது, அது பிராணாயாமம், உடற்பயிற்சி இரண்டையும் சேர்த்துச் செய்ததற்குச் சமம். உண்மையில், அழகியல் என்ற சொல் 'நான் ஆழமாக மூச்சுவிடுகிறேன்' என்ற சொற்றொடரிலிருந்து, அல்லது, அதன் பேச்சு வழக்கு வடிவமான 'நான் திகைக்கிறேன்' என்ற சொற்றொடரிலிருந்து உண்டாக்கப்பட்டது. உண்மையான, அப்பாவியான மகிழ்ச்சி மற்றும் ஆனந்தம் இப்படிப்பட்ட விளைவை நம்மில் உண்டாக்குகின்றன. நாம் இதற்குமுன் எப்போதும் மூச்சு விடாததுபோல் மூச்சுவிடுகிறோம், ஒழுங்கு மற்றும் உணர்வாற்றல் ஒருங்கிணைய, நல்லிணக்கம் நிறைந்த ஓர் உள் சூழலில் உடலை, உள்ளத்தை முழுமையாக உணர்கிறோம். அறிஞர்கள் சொல்வார்கள், 'உங்களுக்குள் செல்லும் மூச்சுக்காற்றுதான் கடவுள்.'

லாரன்ஸ் ஆன்டனி என்ற புகழ்பெற்ற மனிதர் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தவர், வனவிலங்குகளை மனிதர்களுடைய கொடூரங்களிலிருந்து காப்பாற்றுவதற்காக மிகுந்த துணிவையும் வளமுழுமையையும் வெளிப்படுத்தியவர், 'யானைக்



கிசுகிசுப்பாளர்' என்ற நூலை எழுதியவர், அவரைப்பற்றிய உண்மை வாழ்க்கைக் குறிப்பொன்றை வாசித்த போது நான் இதை மிகவும் தீவிரமாக உணர்ந்தேன், இதை நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். உலகெங்கிலுமிருந்து அவர் பல யானைகளுக்குப் புனர்வாழ்வு வழங்கியதை அனைவரும் அறிவார்கள். 2003ல் க்கு ஆக்கிரமிப்பின்போது பாக்தாத் விலங்குக்காட்சியக விலங்குகளை அவர் காப்பாற்றியது புகழ்பெற்ற நிகழ்வாகும்.

மார்ச் 7, 2012 அன்று ஆன்டனி இறந்தார், அவருடைய மனைவி, மகன்கள், பேரன்கள் வாடி நின்றார்கள். இரண்டு நாள் கழித்து, வனத்தின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து 31 யானைகள் அவருடைய வீட்டுக்கு வந்து, அவரை வழியனுப்பின. அவருடைய மரணத்தைப் பற்றி அந்த யானைகள் எப்படி அறிந்தன? அது ஒரு மர்மம். அந்த யானைகள் 12 மணி நேரத்துக்கு மேல் நடந்து அவருடைய தென்னாப்பிரிக்க இல்லத்துக்கு வந்ததாகச் செ ால்கிறார்கள். அவை இரண்டு நாட்கள் அவருடைய வீட்டுக்கு வெளியில் தங்கின, எதுவும் சாப்பிடவில்லை, துக்கத்தை வெளிக்காட்டின, ஆழமான மதிப்பை, அன்பை, நன்றியுணர்வைக் காண்பித்தன. மூன்றாம் நாள், அவை வந்ததுபோலவே அமைதியாகவும் மதிப்புடனும் அங்கிருந்து சென்று விட்டன.



ஓர் அழகுச் சாளரம் நம்பிக்கை யின்மை, கசப்பு, குற்றவுணர்ச்சி, வெறுப்பு, நோய்க்குணம் போன்றவற்றின் கடினமான ஆக்கிரமிப்பை மெதுவாகவும் உறுதியாகவும் கரைத்து, ஓர் இதமான, ஒளிர்கிற உள் அமைதிக்கு இடமளிக்கவேண்டுமென்றால், நாம் ஒவ்வொருவரும் எட்டிப்பார்ப்பதற்கு அப்படிப்பட்ட ஓர் 'அழகுச் சாளரம்' தேவை.

ஒரு நாள் விடுமுறை போட்டு விட்டு எதையும் செய்யாமலிருக்கலாம், அல்லது, வாரத்தின் மற்ற நாட்களில் நீங்கள் செய்யாத ஒன்றைச் செய்ய லாம். தொலைதூரத்துக்கு மெதுவாக நடக்கலாம், உங்களுடைய கால்கள் வரவேற்கும் நிலத்தைத் தொடச் செய்யலாம், உங்களுடைய கண்கள் குளிர்விக்கும் பசுமையைத் தொடச் செய்யலாம், உங்களுடைய தோல் தழுவும் தென்றலைத் தொடச்செய்யலாம்.

சிறு விளக்குகளை ஏற்றுங்கள். ஜமைக்காவிலுள்ள கிங்ஸ்டனில் அதிகக் குற்றவியல் நிகழ்வுகள் நடைபெறுகிற ஒரு பகுதியில், தெருக்களில் இருந்த கிறுக்கல்கள், குப்பைகள் தூய்மைப்படுத்தப்பட்டன, உடைந்த விளக்குகள் சரி செய்யப்பட்டன, பூக்கும் செடிகள் விதைக்கப்பட்டன அது நம்பிக்கையை, பாதுகாப்புணர்வைக் கொண்டுவந்தது. இந்தத் தூய்மைத் திட்டத்தின் நம்பிக்கைதரும் தொடர்ச்சியாக, திறன் மேம்பாட்டுப் பயிற்சிவகுப்புகள், குடும்ப ஆதரவுத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. இதனால், குற்றச்செயல்களின் விகிதம் நம்பமுடியாதபடி குறைந்தது. வாழ்க்கை கடினமாக உள்ளது என்று நீங்கள் நினைத்தால், அதில் அழகைச் சேர்ப்பதறான வழிகளைச் சிந்தியுங்கள். உங்களுக்குச் சொந்தமான சிறுவிளக்குகளை ஏற்றுங்கள். பாப் தவெஸுடைய வெளிப்படை யானது மற்றும் ஊக்கமளிப்பது என்ற கார்ட்டூனில் ஒருவர் திரைச்சீலைகளை விலக்கிய படி இன்னொருவரிடம் சொல்கிறார், 'நான் திரைச்சீலைகளைத் திறக்கும்போது சூரிய ஒளியை உள்ளே அனுமதிக்கிறேன் என்று நினைக்க வில்லை. இருள் வெளியேறுகிறது என்று நினைக்கிறேன்.'

மறுநாள் காலை தன்னை மேகங்கள் மறைக்குமா என்று சூரியனுக்கு எப்போதும் தெரியாது, ஆனாலும் அது தொடர்ந்து ஒளிர்கிறது. மறுநாள் என்ன, அடுத்த கணம்கூட ஒரு மர்மம்தான். தொடர்ந்து ஒளிருங்கள், உங்களுடைய சிறந்த திறமையைக் காட்டுங்கள். வாழ்க்கை என்னும் துணிகரச்செயலை உணருங்கள். தாமரையைப்போல் இருங்கள், அனைத்துச் சூழல்களிலும் சிறந்து விளங்குங்கள்: தாமரை இலையுடைய பரப்புச் செயல்பாட்டைப் பிரதியெடுத்து, விலக்கக்கூடிய பூச்சுகளை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அழகின் மூலம் எதிர்மறைத்தன்மையை விலக்குங்கள், தாமரை இலையைப்போல. ஒரு மாயப் பயணமாக நீங்கள் வாழ்க்கையை நினைத்தால், வானம் என்றென்றின் அளவாகவும், பூக்கள் ஒரு மில்லிவிநாடியுடைய அளவாகவும் இருக்கிற, முரண்கள் மற்றும் நம்பமுடியாத தீவிரம் கொண்ட ஒரு நிலத்தில் மனம், உடல் மற்றும் ஆன்மாவில் கனமில்லாமல் பயணம் செய்வது, வியப்பில் வாழ்வதன் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்துகொள்ளத்தொடங்குவீர்கள். ஆன் ஜ்விங்கெர், பீட்ரிஸ் வில்லார்ட் தங்களுடைய மரங்களுக்குமேலுள்ள நிலம் என்ற புத்தகத்தில் அல்பைன் டுன்ட்ராவைப்பற்றி எழுதிய, நம்பமுடியாத அழகைக்கொண்ட சொற்கள் இவை.

நமக்குள் இருக்கிற விளக்கை நாம் எழுப்பும்போது நம்மை மர்மமானவர்களாக, ஒளிர்பவர்களாக ஆக்குவது இதுதான். நாம் அனைவரும், வாழ்க்கையுடைய கணங்களில் இருக்கும் அழகில் கவனம் செலுத்துவதும், நம்முடைய அனைத்துக் கோபங்கள், எரிச்சல்கள், அழுத்தத்தை அமைதியாக மாற அனுமதிப்பதும் முக்கியம்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# ரோட்டராக்டர்கள் தற்கொலையை அலசுகின்றனர்

ஜெய்ஸ்ரீ

துரதிருஷ்டவசமாக, மனநோய் அல்லது வாழ்க்கையின் சூழ்நிலைகள் காரணமாக சிலர் எவ்வளவு மன அழுத்தத்துக்கு ஆளாகின்றனர் என்றால், அவர்களின் உணர்ச்சிபூர்வ வலியிலிருந்து தப்பிக்க தற்கொலை செய்து கொள்வதை முடிவாக கருதுகின்றனர். அவர்கள் உண்மையாக மரணமடைய விரும்புவதில்லை; அவர்களை ஆட்டி வைத்துக்கொண்டிருக்கு வலியை எப்படி சகித்துக் கொள்வது அல்லது விடுபடுவது என்பது குறித்து அவர்களுக்கு தெரிவதில்லை. இத்தகைய ஆழமான எண்ணங்களை RAC ISME, RID 3141 தலைவர் துருவ் பாரிக் பகிர்ந்து கொண்டார்.

தற்கொலைக்கு எதிரான பிரச்சாரத்துடன் உலக தற்கொலை தடுப்பு தினத்தை (செப்டம்பர் 10) ரோட்டராக்டர்கள் அனுசரித்தனர். தற்கொலையை தடுக்க கூட்டாக செயல்படுவது என்பதே இக்கிளப்பின் இந்த வருடத்திய கரு. பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அலுவலகங்களுக்கும் ரோட்டராக்டர்கள் வருகை புரிந்தனர்.





கோஷங்கள் வரைவது போன்ற போட்டி நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதில் தற்கொலை மனப்பான்மையை ஒழிக்கும் ஆக்கபூர்வ செய்திகளையும் தற்கொலை எண்ணம் கொள்பவர்களுக்கு ஊக்கம் தரும் பேச்சையும் போட்டியாளர்கள் எழுத வேண்டியிருந்தது. வளாகங்களில் அனைவரும் பார்க்கக் கூடிய வகையில் வரைபடங்களும் கட்டுரைகளும் காட்சிக்காக வைக்கப்பட்டன.

உங்கள் இதயத்தின் மீது உங்கள் கை வையுங்கள், உங்களால் அதனை உணர முடிகிறதா? அது தான் குறிக்கோள் என்பது. நீங்கள் தளர்ந்து போவது போல் உணரும்போது, இத்தனை காலம் ஏன் ஒரு பிடிப்புடன் இருந்தீர்கள் என்ற காரணத்தை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் உங்களையே மாய்த்துக் கொண்டால், உங்களை விரும்புபவர்களையும் நீங்கள் கொல்கிறீர்கள். மகிழ்ச்சியும் வலியும் வாழ்க்கையின் இரண்டு பக்கங்கள். இவைகளை பிரிக்க முடியாது. தற்சமயம் நாணயத்தின் வலிதரும் பக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தால், பிற்சமயம் மகிழ்ச்சி தரும் பக்கத்தை கண்டிப்பாக அனுபவிப்பீர்கள்-அலையின் திசை மாறும்.

சில வளாகங்களில் ரோட்டராக்டர்கள் வழங்கிய பேச்சுக்களின் சுருக்கமே இவை: திட்டத்தின் இறுதியில், நாங்கள் எவ்வளவு திருப்தி அடைந்தோம் என்றால் உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பாதிப்புகள் கூடிய ஆனால் சிறிதளவே அங்கீகரிக்கப்படும் பிரச்சினையை எங்களால் எளிதில் கையாள முடிந்தது என்றார் பாரிக்.

RAC S K சோமையா கல்லூரியுடன் RC பம்பாய் பொவாயுடனும் சேர்ந்து சுய மேம்பாடு குறித்த கருத்தரங்கை ISME வளாகத்தில் கிளப் நடத்தியது. ஷர்மீ திவான், பாவன் பத்லானி மற்றும் ராஜ்ஷமானி ஆகியோர், சுய-அன்பு, இடர்களை மேற்கொள்தல், தோல்விகளை சந்தித்தல், பிறருக்கு தரும் கலை ஆகியவை குறித்து ஊக்கப் பேச்சுக்கள் வழங்கினர். சுய சவால்களை தொடர்புப்படுத்தி உயர்வாக எண்ணம் மேற்கொள்ள மாணவர்களுக்கு ஊக்கமளித்து உதவும் வகையில் இந்த கருத்தரங்கு அமைந்தது என்றார்.■

# டால்மியாபுரத்தில் விதைப்பந்துகளைத் தயாரித்த மாணவர்கள்

ரோட்டரி செய்திக்குழு

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, RC டால்மியாபுரம், RID 3000, டால்மியா சிமென்ட்டுடன் இணைந்து "விதைப்பந்துத் திருவிழா"வுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்தத் திட்டத்தின் நோக்கம், தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்திலுதிம், சுற்றியுள்ள கிராமங்களிலும் பசுமைச் சூழலைக் கொண்டுவருவது.

டால்மியா உயர்நிலைப்பள்ளி, டால்மியா வித்யா மந்திர் மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணா டால்மியா தொழிற்பயிற்சிக் கல்வியமைப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாகச் சேர்ந்து சுமார் 20,000 விதைப் பந்துகளை உருவாக்கினார்கள். வேப்பமரம், புங்கைமரம், ஆலமரம், மூங்கில் உள்ளிட்ட 16 வகையான விதைகள் இந்த விதைப்பந்துகளை உருவாக்கப் பயன்படுத்தப்பட்டன.



DG *ஜமீர் பாஷா மற்றும் சங்கத்தினர் டால்மியா மேல்நிலை பள்ளி* NCC *மாணவர்களுடன்.*

DG பாஷாவுடன், USA ஃப்ளோரிடாவிலுள்ள RC சரசோடா சன்ரைஸ், RID 6960ஐச் சேர்ந்த புவன் உன்ஹெல்கரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். ரொட்டேரியன்கள், மாவட்டத் தலைவர்களுடன், டால்மியா மகளிர் சங்க உறுப்பினர்கள், டால்மியா சிமென்ட், டால்மியா ரீஃபேக்டரீஸ் ஊழியர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாணவர்களை ஊக்குவித்தார்கள். சுற்றுச்சூழலுக்கான நம்முடைய சமூகப் பொறுப்பை வெளிப்படுத்தும் ஒரு வழி விதைப்பந்துத் திருவிழா; இளம் தலைமுறையினர் மத்தியில் ரோட்டரியை முன்னிறுத்த உதவியது, என்றார் RC டால்மியா புரத்தின் செயலாளர் A மரியா செல்வா ரெக்ஸ்.■

# பள்ளிப் பிள்ளைகளுக்கு வெற்றி மந்திரம்



*வெற்றி மந்திரம் நிகழ்ச்சியில் சங்கத்தினருடன்* DG *ரவி தோத்ரே (வலது).*

புனே நகரம் முழுதும் பரவலாக "வெற்றி மந்திரம்" என்ற தொடர் வழிகாட்டி மற்றும் ஆலோசக வகுப்புகளை 10ம் வகுப்பு மாணவர்களுக்கு புனே யுவா ரோட்டரி கிளப், RID 3131 நடத்தி வருகிறது. ஆண்டு முழுக்க நடை பெறும் இவ்வகுப்பு, வாரிய தேர்வுகள் எழுதும் பிள்ளைகளுக்கு ஊக்கம் தருவது மற்றும் இது தொடர்பாக ஏற்படும் அச்சத்தை போக்கச் செய்வதை குறிக்கோள்களாக கொண்டு செயல்படுகிறது. கல்வி கற்கும் நுட்பங் களையும் பதில் தருவதற் கான வழிகளையும் கல்வி நிபுணர்கள் வழங்குகின்றனர். இச் செயல்விளக்கக் கூட்டங் களில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பங்கு கொள்கின்றனர்.

இத்திட்டம் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளிலிருக்கும் சுமார் 5,000 மாணவர்களுக்கு பலனளித்துள்ளது என்கிறார் கிளப் தலைவர் ராஹுல் கட்காரி.■



**RC சிதம்பரம் ஹோம் டவுன்** — RID 2981
பிளாஸ்டிக்குக்கு எதிரான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, சுமார் 1,000 துணிப் பைகள் பொதுமக்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

**RC சேலம் சென்ட்ரல்** — RID 2982
இந்திய ரோட்டரியின் 100வது ஆண்டு தினத்தை அனுசரிக்கும் வகையில் மாவட்ட கவர்னர்கள் டாக்டர் A K நடேசன் (2982) மற்றும் டாக்டர் சமீர் பாஷா (3000) ஆகியோர் ஒரு ரோட்டரி அஞ்சல் தலை வெளியிட்டனர். இதனை அவர்கள் RID கமல் சிங்வி மற்றும் PRID C பாஸ்கர் ஆகியோருக்கு வழங்கினர்.






**RC எலூரு** — RID 3020
மேற்கு கோதாவரி மாவட்டத்தின் வீரம்மகுன்டா கிராமத்து பல்வேறு பகுதிகளில் 200 செடிகள் வினியோகம் செய்யப்பட்டன. பள்ளி வளாகத்தில் செடிக்கன்றுகளை நடவு செய்ய ஜில்லா பரிஷத் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

**RC மதுரை நார்த்** — RID 3000
இந்திய பார்வையிழந்தோர் சங்கம் நடத்தும் IAB உயர்நிலைப் பள்ளி வளாகத்தை சுற்றி நூறு செடிகள் நடவு செய்யப்பட்டன. செடிகளுக்கு போதிய நீரிட சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டது.



# சங்க சேவைகள்

**RC அபு ரோடு** — RID 3054

11வது தொடர் ஆண்டாக, அபு ரோடு செயின்ட் ஜான் பள்ளியின் இன்டரேக்ட் கிளப்புடன் இணைந்து, இச்சங்கம் மாணவர்களின் நோட்டு புத்தகங்களிலிருக்கும் உபயோகப்படுத்தாத காகிதங்களை சேகரித்து அவைகளை அளவு வாரியாகவும் கோடுகள் வாரியாகவும் பிரித்து 100 பக்க புத்தகங்களாக செய்து, நலிவுற்ற மாணவர்களுக்கு வினியோகிக்கிறது.




**RC சுனம்** — RID 3090

நகரத்தின் டாக்டர் ககன்தீப் ரோட்டரி பப்ளிக் பள்ளியின் 32 ஆசிரியர்களுக்கு நேஷன் பில்டர் விருதுகள் வழங்கப்பட்டன.



**RC பரோடா காஸ்மோபாலிட்டன்** — RID 3060

சுதாமா நி ஜோலி திட்டத்தின் கீழ், இச்சங்கம் 25 பார்வையிழந்தோருக்கு மாதந்தோறும் தானியங்களை வாங்கித் தரும் செலவை ஏற்றுக் கொள்கிறது. ரூ.8,000 மதிப்பிலான இச்செலவுத் தொகையை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.



**RC ஷாஜஹான்பூர் சிட்டி** — RID 3110

ரொட்டேரியன்கள், லீட் கான்வென்ட் பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தி சுதந்திர தினம் கொண்டாடினர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளிப் பைகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



**RC டேராடூன் சென்ட்ரல்** — RID 3080

ஆசிரியர் தினத்தன்று நகரத்தின் பல்வேறு பள்ளிகளிலிருந்து 25 ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் கர்னல் மனோஜ் குப்தா மற்றும் இதர ரோட்டரியன்கள் பங்கு கொண்டனர்.



**RC லோனந்த்** — RID 3132

ரோட்டரி உதவி மையத்தில் ஒரு செயற்கை கை கால் பொருத்தும் முகாம் நடத்தப் பட்டது. இதில் பலர் பயன்பெற்றனர்.



**RC தோம்பிவ்லி இண்டஸ்ட்ரியல் ஏரியா** — RID 3142

சங்கத்தின் முன்னாள் தலைவர் ரமேஷ் கண்டெல்வால் ஆதரவளித்து வரும் ஒரு திட்டத்தின் கீழ் தன்யன் மந்திர் பள்ளியின் ஆறு மாணவர்களுக்கு இலவச கணினி பயிற்சி மூன்று மாதங்களுக்குத் தரப்பட்டது.



**RC பாலேஹொன்னூர்** — RID 3182

BES குழும கல்வி மையத்தின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பள்ளிப் பைகள் வினியோகிக்கப்பட்டன.





**RC பவானி-கொமாரபாளையம்** — RID 3202

தொடக்க மற்றும் மத்திய நிலை ஐந்து பள்ளிகளுக்கு கையலம்பும் வசதிகள் வழங்கப்பட்டன. ரூ.75,000 மதிப்பிலான இந்த WinS திட்டம் மூலம் 300 மாணவர்கள் பயன் பெறுவர்.

**RC நஞ்சன்கூடு** — RID 3181

20 பார்வையிழந்த கலைஞர்களுக்கு ரூ.85,000 மதிப்பிலான இசைக் கருவிகள் வழங்கப்பட்டன. ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் சுய கௌரவம் அதிகரிக்கும் என்பதே இதன் குறிக்கோளாகும்.



# சங்க சேவைகள்

**RC கழக்குட்டம்** — RID 3211

மாவட்ட திட்டமான REACH (Rotary Empowered Action for Cleanliness and Hygiene) ஹோலி ட்ரினிட்டி உயர்நிலைப் பள்ளியில் திருவனந்தபுரம் மேயர் V K பிரசாந்த் அவர்களால் துவக்கப்பட்டது.



**RC திருத்தணி** — RID 3231

திருத்தணியில் பிறந்த முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் சிலைக்கு மாலை அணிவித்தும் இரண்டு ஆசிரியர்களை கௌரவித்தும் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது.





**RC மெட்ராஸ் மெரீனா** — RID 3232

சங்கம் செயல்படுத்தும் ஒரு பணிப்பயிற்சி மையம், மாணவர்களுக்கு ஏர் கண்டிஷனிங் மற்றும் ரெஃப்ரிஜரேஷன் சேவைகள் குறித்து பயிற்சி அளிக்கிறது. இவ்வாண்டு, இந்த ஓராண்டு திட்டத்தில் 20 மாணவர்களுக்கு பயிற்ச்சியளிக்கப்படுகிறது.



**RC பொங்கைகாவுன்** — RID 3240

பொங்கைகாவுன் மற்றும் சிராங் பகுதியின் 190 ஊனமுற்றோருக்கு செயற்கை கால் கைகள், உதவிக் கருவிகள் மற்றும் க்ரச்சுகள் ஆகியவற்றை கிளப் வழங்கியது. இத்திட்டத்துக்காக ரூ.23 லட்சம் செலவானது.



**RC புபனேஸ்வர் டொஷாலி** — RID 3262

மழைகாலத்தில் மாணவர்களின் பள்ளி வருகை 100 சதவீதமாக்க மழைகோட்டுகள் பன்ட்ரா பகுதியில் சங்கம் தத்தெடுத்த பள்ளியின் மாணவர்களுக்கு வினியோகம் செய்தது. IPDG பவானி சவுதரி, சிறுவர்களுக்கு மழைகோட்டுகள் வழங்கினார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

## Rotary News Subscription Remittances

**You can pay the Rotary News / Rotary Samachar subscription online**

**Our Bank details:**

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank SB Account |
| Branch | : | Montieth Road Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

**E mail us following details:**

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,211,673 |
| Clubs | : | 35,969 |
| Districts | : | 538 |
| Rotaractors | : | 162,330 |
| Clubs | : | 9,806 |
| Interactors | : | 563,362 |
| Clubs | : | 24,494 |
| RCC | : | 10,644 |

As on Sept 16, 2019


## Membership Summary

As on September 1, 2019

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 112 | 4,678 | 214 | 40 | 239 | 219 |
| 2982 | 68 | 3,112 | 166 | 73 | 122 | 55 |
| 3000 | 133 | 5,757 | 569 | 180 | 691 | 208 |
| 3011 | 86 | 3,623 | 895 | 44 | 119 | 25 |
| 3012 | 95 | 3,865 | 982 | 51 | 137 | 57 |
| 3020 | 71 | 4,200 | 229 | 53 | 467 | 350 |
| 3030 | 92 | 4,906 | 641 | 87 | 327 | 210 |
| 3040 | 93 | 2,093 | 237 | 32 | 141 | 143 |
| 3053 | 65 | 2,852 | 520 | 11 | 60 | 96 |
| 3054 | 126 | 5,825 | 981 | 75 | 334 | 475 |
| 3060 | 99 | 4,356 | 598 | 53 | 133 | 140 |
| 3070 | 105 | 3,142 | 416 | 40 | 164 | 58 |
| 3080 | 84 | 3,527 | 339 | 80 | 240 | 111 |
| 3090 | 81 | 2,023 | 57 | 36 | 40 | 122 |
| 3100 | 79 | 1,960 | 120 | 12 | 80 | 146 |
| 3110 | 127 | 4,070 | 413 | 27 | 55 | 104 |
| 3120 | 80 | 3,400 | 455 | 34 | 64 | 52 |
| 3131 | 134 | 5,427 | 1,194 | 94 | 321 | 93 |
| 3132 | 96 | 3,750 | 389 | 31 | 222 | 157 |
| 3141 | 104 | 5,704 | 1,358 | 108 | 277 | 88 |
| 3142 | 97 | 3,335 | 653 | 73 | 206 | 64 |
| 3150 | 95 | 3,685 | 378 | 51 | 256 | 115 |
| 3160 | 77 | 2,696 | 187 | 27 | 48 | 83 |
| 3170 | 129 | 5,735 | 682 | 62 | 356 | 165 |
| 3181 | 86 | 3,773 | 378 | 56 | 275 | 115 |
| 3182 | 84 | 3,140 | 224 | 31 | 283 | 97 |
| 3190 | 125 | 5,014 | 697 | 123 | 375 | 55 |
| 3201 | 145 | 5,548 | 413 | 93 | 142 | 50 |
| 3202 | 130 | 5,096 | 291 | 71 | 453 | 47 |
| 3211 | 141 | 4,496 | 303 | 8 | 98 | 129 |
| 3212 | 100 | 4,113 | 327 | 91 | 304 | 145 |
| 3231 | 87 | 3,800 | 355 | 49 | 226 | 355 |
| 3232 | 126 | 5,378 | 915 | 116 | 359 | 86 |
| 3240 | 89 | 3,110 | 409 | 48 | 478 | 189 |
| 3250 | 102 | 3,921 | 692 | 59 | 222 | 181 |
| 3261 | 72 | 2,641 | 415 | 12 | 114 | 43 |
| 3262 | 95 | 3,428 | 423 | 39 | 81 | 77 |
| 3291 | 148 | 3,731 | 753 | 81 | 149 | 611 |
| **India Total** | **3,858** | **150,910** | **19,268** | **2,251** | **8,658** | **5,516** |
| 3220 | 72 | 2,021 | 278 | 80 | 212 | 73 |
| 3271 | 88 | 1,403 | 238 | 58 | 19 | 18 |
| 3272 | 139 | 1,770 | 298 | 50 | 40 | 43 |
| 3281 | 212 | 5,841 | 897 | 217 | 101 | 192 |
| 3282 | 157 | 4,879 | 602 | 133 | 50 | 44 |
| 3292 | 120 | 4,735 | 731 | 122 | 143 | 114 |
| **S Asia Total** | **4,646** | **171,559** | **22,312** | **2,911** | **9,223** | **6,000** |

*Source: RI South Asia Office*


# On the racks




## Gilead

Author : **Marilyn Robinson**
Publisher : **Hachette India**
Pages : **282; `399**

Gilead is a book about a book about fathers and sons. The book is an account of the memories and legacy of John Ames as he remembers his experiences of his father and grandfather to share with his son. In the form of a letter from 76-year-old Ames, who is a fourth-generation Congregationalist minister, in Gilead, Iowa, in 1956, to his seven-year-old son. This is an intimate tale of three generations starting from the Civil War to the 20th century: a story about the spiritual battles that still rage at America's heart. Ames who is suffering from a heart disease, sums up his past and his learnings in his letter sprinkled with anecdotes and advice. This book has won the 2005 Pulitzer Prize for Fiction and the National Book Critics Circle Award.





## Emperor Vikramaditya

Author : **Adity Kay**
Publisher : **Hachette India**
Pages : **384; `399**

The kingdom of Magadha, India, is at its peak, but the young prince Chandra's thoughts are clouded as his elder brother, Ramagupta, prepares to take their ageing father's place on the throne. Chandra is bound to obey the future king but is in constant disagreement with him. He believes his brother's decisions will joepardise the stability of the empire… and so begins a tale of conflict. One is drunk on power and unconditionally supported by the court of Pataliputra, the other an outsider in the palace, who is yet to win the hearts of his people. But when a strong enemy strikes the kingdom and challenges the Guptas' might, Chandra must first fight his own battles in order to protect his people and become a king in his own right — he must become Vikramaditya.

## I have a theory about that





Author : **Judy Balan**
Publisher : **Hachette India**
Pages : **244; `399**

This is a light and refreshing read. Meg and Tania, two besties and flat mates, are on a mission to find themselves their "true love" over a bet. While Meg is a meticulous planner, Tania is a go-with-the-flow and trust-in-the-timings-of-the-universe kind of a girl. The two live by their theories of finding their Mr Right and the plot takes some crazy turns until everything's set in place. Tragic break-ups, emotional break-downs, work pressure and some growing up takes the reader to a happy end.

---


Edited by : **Vinay Kumar Malhotra**
Publisher : **VVM Trust**




## Budhape ka anand (Hindi)

Pages : **84; `250**

This book presents a positive vision on aging, continued learning after 70 and replaces "retirement" with "advanced age of learning."




## Mera Ambala – A collection of poems

Pages : **80; `250**

A collection of poems read at the Poetical Symposium on "Mera Ambala". These poems describe the beauty and struggles of the city of Ambala.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

# இனிமையான பயணத்திற்கு இதமான புத்தகங்கள்

TCA ஸ்ரீனிவாசராகவன்

வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் புத்தக வாசிப்பாளர்களுக்கு இரண்டு முக்கிய பிரச்சனைகள் இருக்கிறது. ஒன்று எந்த புத்தகங்களை எடுத்துச் செல்வது; மற்றொன்று எத்தனைப் புத்தகங்களை எடுத்துச் செல்வது. எனக்குத் தெரிந்து, கிண்டில் மற்றும் கூகுள் இருப்பதால் இந்த பிரச்னையை சமாளிக்கலாம், ஆனால் அச்சிட்ட புத்தகங்களை விரும்பும் வயதானவர்களுக்கு இது ஒரு கவலை தரும் விஷயமாக இருக்கிறது. சாமர்செட் மாகம் பற்றி கேள்விபட்டிருக்கிறேன், ஒரு தேர்ந்த புத்தக வாசிப்பாளர் மற்றும் அதிகமாக பயணம் செய்தவர், அத்துடன் பல டஜன் புத்தகங்களை கொண்ட ஒரு பெரிய சாக்குப்பையை எப்போதும் தன்னுடன் எடுத்துச்செல்வார். ஆனால் அப்போதைய காலத்தில் விமான பயணம் இல்லை, மேலும் எடை என்பது ஒரு சிறிய பிரச்சனையாக இருந்தது. மாகம், கப்பல்களில் பயணம் செய்தார், தன்னுடன் 50 கிலோ எடை கொண்ட புத்தகங்களை எடுத்துச் செல்லமுடிந்தது. சுமைதூக்குவோரும் இலகுவாகக் கிடைத்தனர். இன்றைய தினத்தில் இவற்றில் பத்து சதவீதத்தை நீங்கள் எடுத்துச் செல்லமுடிந்தால் பாக்கியசாலிதான்.

மாகம் தனக்கு ஒரு புத்தகம் பிடிக்கவில்லை என்றால், அதை வீசி விட்டு, வாசிக்க தனது சாக்குப் பையிலிருந்து வேறொன்றை எடுத்துப் படிப்பார். இன்றும் கூட சலிப்பு தட்டும் ஒரு புத்தகத்தைத் தவிர்க் கலாம், ஆனால் நீங்கள் வெறும் ஐந்து அல்லது ஆறு புத்தகங்களை மட்டும் கொண்டுவந்திருந்தால், வாசிக்க என்ன செய்வீர்கள்? எனவே தான் நிறைய பேர்' இதமான புத்தகங்களை' எடுத்துச் செல்வார்கள். இது தயிர்சாதம் அல்லது பருப்பு சாதம் போலவும் சௌகரியமான உணவு மற்றும் 1950 மற்றும் 1960களின் இதமான இசை போல அவைகள் பிரச்சனையற்ற புத்தகங்கள்.

"வாசிக்க வேண்டிய புத்தகங்கள்" குறித்து இணையத்தில் தேடுகையில், எக்கச்சக்க பக்கங்கள் கிடைத்தது. வலைப்பூக்களில் எழுதுபவர்களைப் பொறுத்தவரை ஒரே மாதிரியான புத்தகங்களே திரும்பத்திரும்ப வந்தது. உண்மையைச் சொல்வ தென்றால், ஒரே புத்தகத்தை எத்தனை முறைதான் வாசிப்பீர்கள்? ஒரே எழுத்தாளர்களைத் தேடுவது தான் எனது உத்தி. திகில், வரலாறு மற்றும் பெண்ணியம் போன்றவற்றை ஒருங்கிணைத்துப் பார்த்தால், சுமார் 20 எழுத்தாளர்களை எனக்குப் பிடிக்கும். விருப்பமான எழுத்தாளர்களைக் கொண்டிருக்கிறீர்களா என்று புனை கதைகளை இன்றும் வாசிக்கும் சில நண்பர்களிடம் கேட்டேன், குறைவானவர்களே சில காரணங்களுக்காகப் படிக்கிறார்கள். திருப்தியில்லாமல் இருந்தாலும் கூட, அவர்களில் நிறையப்பேர் ஆமாம் என்றார்கள், காரணம் தான் தெரியவில்லை எனக்கு. இதில் சங்கடப்பட எதுவுமில்லை. அவற்றை வாசிப்பது என்பது பழைய பைஜாமாவுடன் படுக்கச் செல்வது போன்றது என அவர்களில் ஒருவர் கூறினார். அருமை. என்னவொரு அழகான விளக்கம்.

இங்கே எழுத்தாளர்களுக்கு கவலையை ஏற்படுத்துகிறது, இது அவர்களின் பாணியா அல்லது அவர்கள் உருவாக்கும் கதாப்பாத்திரங்களா அல்லது இரண்டுமா என்று நிச்சயமாகத் தெரியவில்லை. அவர்கள் புதிய கதாப்பாத்திரங்கள் பற்றி எழுதுகையில் நிறைய எழுத்தாளர்கள் ஒரேவிதமான பாணியை கடைபிடிக்கிறார்கள், இது அவர்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கிறது என்று கண்டுபிடித்தேன். எப்போவாவது ஒருமுறை, தனக்கு நெருக்கமான ஒருவர் வித்தியாசமாக ஏதாவது ஒன்றை எழுதும்படி வற்புறுத்துவதால், அந்த பாணியை மாற்றுகிறார்கள். எப்போதும் இவை பாதிப்பிலேயே முடிகிறது, விற்பனை மற்றும் மதிப்புரை இரண்டிலும். பிறகென்ன உடனடியாக தங்களுடைய பழைய பாணிக்கு மாறுவார்கள்.

ஆனால் பல்வேறு எழுத்து நடைகளில் எழுதி தங்களது திறமையை வெளிக்காட்ட விரும்பும் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். முகவர்கள், பதிப்பகத்தார்கள், விற்பனையாளர்கள், அத்துடன் வாசகர்களுக்கும் சிரமத்தைக் கொடுக்கிறார்கள். எனினும், சில புத்திசாலிகள் ஒரு வித்தியாசமான பெயரில் எழுதி, புதிய Y தான் உண்மையிலேயே பழைய X என்று புரியவைப்பார்கள். இதற்கு சமீபத்திய உதாரணம் ஹாரிபாட்டர் எழுத்தாளர் JK ரவுலிங். சிலவருடங்களுக்கு முன்பு அவர் ராபர்ட் கல்பிரைத் என்ற பெயரில் எழுதினார். ஆனால் என்னைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் இந்த புதிய துப்பறியும் நாவல்கள் நம் எதிர்பார்ப்பிற்கு ஈடாகவில்லை.

அதனால் உங்களுக்கு சொல்வது என்னவென்றால். நீங்கள் ஒரு புத்தக வாசிப்பாளர் என்றால் பயணம் செய்கையில் உங்களுக்குப் பழக்கமான எழுத்தாளரின் புத்தகத்தையே கொண்டு செல்லுங்கள். புதிதாக முயற்சித்துப் பார்க்கவேண்டாம், பிறகு எதையும் வாசிக்காமலேயே பொழுதைக் கழிப்பீர்கள்.■

# சுவராஸ்யமான செய்திகள்



## ரெடிமேட் ஆவண ஹெல்மெட்

போக்குவரத்து விதிமீறலுக்கு விதிக்கப்படும் அபராதம் உயர்வு மற்றும் கண்டிப்பான சாலை போக்குவரத்து விதிகளுடன் அண்மையில் திருத்தம் செய்யப்பட்ட மோட்டார் வாகன விதிகள் அமலுக்கு வந்த நிலையில், வடோதரா நகரில் வசிக்கும் ஏ.ஆர். ஷா என்பவர், ஓட்டுநர் உரிமம், பதிவு சான்றிதழ், காப்பீடு ஆவணம் மற்றும் இதர தொடர்பான ஆவணங்களை கொண்டு செல்ல மறக்காமலிருக்க தனது ஹெல்மெட்டிலேயே ஒட்டி விட்டுள்ளார். ஹெல்மெட் தான் ஓட்டுவதற்கு முன்னால் நான் அணிவது. எந்த வகையிலும் அபராதம் கட்டும்படி ஆகக்கூடாது என எல்லா ஆவணங்களையும் ஹெல்மெட்டிலேயே ஒட்டிவிட்டேன் என்றார். அலிகர் நகரில் இருப்பவரோ காரை ஓட்டும்போதும் ஹெல்மெட் போட்டுக்கொள்கிறாராம்; ஏனெனில் கார் ஓட்டும்போது ஹெல்மெட் போடவில்லை என போலீஸ் அவருக்கு அபராதம் விதித்ததாம்!



## அனைத்தும் ஒரு பெண் குழந்தைக்காக


வரிசையாக 10 ஆண் குழந்தைகளையே பெற்றுக்கொண்டிருந்த பிரிட்டனின் அலெக்சிஸ் பிரெட் (39) என்ற பெண் இறுதியாகவும் ஆண் குழந்தை பெற்றெடுத்தாள். ஆண் பிள்ளை குடும்பம் என கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டிருந்த அவருக்கு 11வது குழந்தை பெருமகிழ்ச்சி அளித்தது. கேமரான் என்ற அக்குழந்தை 7-17 வரை வயதுள்ள ஆண் சகோதரர்களுக்கு இப்பொழுது சகோதரியானாள். இக்குழந்தை பிறந்தவுடன் ஆண்பிள்ளைகளின் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்க வகையில் உள்ளன என்கிறார் அலெக்சிஸ். குழந்தைகள் பெற்றுக்கொள்வது போதும் என குழந்தைகளின் பெற்றோர் இப்போது முடிவெடுத்துள்ளனர்!



## குளுமையான டீ-ஷர்ட்

ஏர் கண்டிஷன் டீ-ஷர்ட்டை இனி நீங்கள் அணிந்து கொள்ளலாம். சோனியுடன் இணைந்து செயல்படும் ரியான் நிறுவனம் பாக்கெட் என்ற ஒரு புளூடூத் கருவியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை ஒரு சிறப்பு சிலிக்கான் பொருள் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள டீ-ஷர்ட்டில், கழுத்துக்குக் கீழே பின்பக்கமாக வைக்கப்பட்டிருக்கும் பாக்கெட்டில் இதனை பொருத்திக் கொள்ளலாம். ஒரு ஆப் மூலம் கட்டுப்படக் கூடிய இக்கருவி, இதனை அணிவோருக்கு 13 டிகிரி சென்டி. வரை குளுமைப்படுத்தும்; குளுமைக் காலங்களில் 8 டிகிரி சென்டி வரை அதிகப்படுத்தும். இதன் பாட்டரி வாழ்நாள் 90 நிமிடங்கள் வரை நீடிக்கும்; இதனை சார்ஜ் செய்ய இரண்டு மணி நேரம் ஆகும். ஜப்பானில் இப்பொழுது கிடைக்கிறது. இதன் விலை $120!

## ஒரு ரூபாய்க்கு இட்லி



கோவையில் எண்பது வயது கமலாத்தாள் ஒரு ரூபாய்க்கு இட்லி விற்பனை செய்கிறார் என்ற செய்தி சமூக ஊடகத்தில் வைரலான போது, பல உதவிகள் அவருக்கு வந்தது. மரக்கட்டை மூலம் எரியும் அடுப்பை பயன்படுத்துவது பற்றி கேள்விப்பட்டதும், தொழிலதிபர் ஆனந்த் மஹீந்திரா டுவீட்டில் அவரைப் பற்றி யாருக்கேனும் தெரிந்தால், அவருடைய தொழிலில் நான் முதலீடு செய்து அவருக்கு சமையல் வாயு ஸ்டவ் வாங்கித் தருவேன் என குறிப்பிட்டுள்ளார். உடனே HPCL மற்றும் BPCL ஆகிய சமையல் வாய் கம்பனிகள் வயதான பெண்மணிக்கு சமையல் வாயு இணைப்பு தர முன்வந்தனர். பெட்ரோலியம், இயற்கை வாயு மற்றும் ஸ்டீல் துறையின் மத்திய அமைச்சர் தர்மேந்திரா பிரதான் தமது டுவீட்டில், “கமலாத்தாள் அவர்களின் துடிப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் நான் வணங்குகிறேன். சமையல் வாயு இணைப்பு கிடைக்க உள்ளூர் OMC அதிகாரிகள் மூலம் அவருக்கு உதவி செய்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்” என்றார்.



## சாத்தானின் கொம்பு

உங்களுடைய தலை சுவர் மீது மோதிக்கொண்டால் உங்களுக்கு கொம்பு வளரும் என்ற மிரட்டல் சிறுவயதில் பெற்றது நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. மிக அதிக தற்பெருமை கொண்டுள்ளவரை விவரிக்கும் போது நாம் அடிக்கடி கூறுவது-அவருக்கு இரண்டு கொம்புகள் இருக்கின்றன. ஆனால் மத்திய பிரதேச மாநிலத்தில் ஷியாம் லால் யாதவ் என்ற விவசாயிக்கு, 2014ம் ஆண்டில் சுவர் மீது மோதிக்கொண்ட பிறகு தலையில் நான்கு அங்குலம் நீள கொம்பு வளர்ந்தது. முடிதிருத்துபவரிடம் அதன் வளர்ச்சியை வெறும் ஷேவிங் செய்துகொண்டிருந்த பிறகு அண்மையில் சாகர் பகுதியில் உள்ள பாக்யோதய் தீர்த் மருத்துவமனையில் நரம்பியில் மருத்துவர்கள் மூலம் அதனை அறுவை சிகிச்சை செய்து நீக்கியுள்ளார். இந்த அரிய வளர்ச்சியை மருத்துவர்கள் “செபேஷியஸ் (சரும மெழுகு) கொம்பு” அல்லது “சாத்தான் (டெவில்) கொம்பு” என குறிப்பிடுகின்றனர்.

ஒருங்கிணைப்பு: ஜெயஸ்ரீ; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: `35
Rotary News Tamil published on 1st of every month

